# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 24 °C
தெளிவு

சுடர் 30 | கதிர் 108 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 30, சனிக்கிழமை 14.03.2015


கோண்டாவில்

# பொறுமை வேண்டும்

## தமிழ்க் கூட்டமைப்புக்கு மோடி நேற்று உபதேசம்
## அணுகுமுறையை மாற்றவும் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மார்ச் 14
ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, புதிய அரசு பதவியேற்றுள்ள சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அணுகுமுறைகளைமாற்றிக்கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் வலியுறுத்திக் கூறியுள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் மீது நம்பிக்கை வைத்துள்ளதா? என்றும் அவர் இந்தச் சந்திப்பில் கேள்வி எழுப்பினார்.
இருநாள் பயணமாக இலங்கை வந்துள்ள இந்தியப் பிரதமர் பக்.24

## யாழ்., கிளி., முல்லை. அரச அதிபர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 14
யாழ்ப்பாணம் – கிளிநொச்சி – முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்களுக்கு, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நேற்று மதியம் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தொலைநகல் மூலமாக இந்த உத்தரவு, மூன்று அரச அதிபர்களுக்கும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண அரச அதிபராக கடமையாற்றிவரும் சுந்தரம் அருமைநாயகம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன், யாழ். மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். பக்.24

## முன்னாள் போராளி பகீரதிக்குப் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 14
கொழும்புகட்டுநாயக்கவிமான நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற்புலி பிரிவின் முன்னாள் தலைவி என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட முருகேசுபகீரதிகொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
பிரான்ஸில் வசித்துவரும் பகீரதி, பத்து வருடங்கள் கடற்புலிகள் பிரிவின் தலைவியாக செயலாற்றியவர் என நீதிமன்றத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கூறியிருந்தனர். வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலி முன்னாள் தலைவர்கள், அங்கிருந்தபடி புலிகள் இயக்கத்தை மீண்டும் கட்டியெழுப்ப முயல்கின்றனர் எனவும் – பக்.24

## யாழ்ப்பாணத்தில் கடும் பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 14
மோடியின் யாழ்ப்பாண வருகைக்காக வரலாறு காணாத அளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியாவின் கறுப்புப் பூனைப் படையினர் (பிளக் கட்ஸ்) சிவில் உடையில் பாதுகாப்பு கடமைகளில் முக்கிய இடங்களில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். பக்.24

## மோடி வருகை வரப்பிரசாதம்



கொழும்பு, மார்ச் 14
மோடியின் வருகை இலங்கை மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, ஜனாதிபதி செயலகத்தில் நேற்று வரவேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதன் பின்னர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
“இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகையால் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு வலுவடைந்துள்ளது. இதனால் இன்று நான் மிகவும் சந்தோஷமாக இருக்கின்றேன். பக்.24


## 19 பீரங்கி வேட்டுக்களுடன் மோடிக்கு பிரமாத வரவேற்பு

### 10 அடி தூரத்தில் நின்றவாறு ஏற்றுக் கொண்டார்



கொழும்பு, மார்ச் 14
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மைத்திபாலவுடன் இணைந்து முப்படையினரது அணி வகுப்பு மரியாதையை பத்து அடி தூரத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்றவாறு ஏற்றுக் கொண்டார். அத்துடன் மரியாதை நிமித்தமாக 19 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. பக்.24

## தமிழர்களுக்கு வேண்டியது சம உரிமை மைத்திரியிடம் வலியுறுத்தினார் மோடி



கொழும்பு, மார்ச் 14
இலங்கைத் தமிழர்களுக்கு சமஉரிமை வழங்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கொழும்பில் வைத்து நேற்று வலியுறுத்தியுள்ளார்.
தமிழக – இலங்கை மீனவர் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டும் எனவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார். பக்.24

## சமஷ்டி முறையையே ஆதரிக்கிறது இந்தியா

சமஷ்டி முறைமையை நாம் ஆதரிக்கின்றோம். –இவ்வாறு நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் கூறினார் நரேந்திர மோடி. பக்.21

## 25 ஆண்டுகளின் பின்னர் சொந்த மண்ணில் கண்கள் பனிக்க நடந்த வளலாய் மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 14
“25 வருடங்களின் பின்னர் சொந்த மண்ணில் கால் பதிக்க அனுமதித்ததே சந்தோஷமாக இருக்கின்றது. இப்படியே எங்களை எமது மண்ணில் நிரந்தரமாகக் குடியமர விட்டாலே போதும்”– இவ்வாறு மகிழ்ச்சியுடன் வளலாய் மக்கள் நேற்றுத் தெரிவித்தனர். பக்.24



## “காணிக்ளை கையளிக்க முன்னர் வீடுகளை இடித்துள்ளனர்.”


### ஆவலுடன் சென்ற மக்கள் அதிர்ச்சியுடன் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 14
“எங்களிடம் காணிகளை கையளிப்பதற்கு முன்பாக, இந்தப் பிரதேசத்தில் எஞ்சியிருந்த வீடுகளை படையினர் இடித்து தரைமட்டமாக்கியுள்ளனர். போரின்போது கூட தப்பியிருந்த எங்கள் வீடுகள் இப்போதே அழிக்கப்பட்டுள்ளன.”– இவ்வாறு பொதுமக்கள் சிலர் நேற்றுக் கூறினர்.
வளலாய் பிரதேசம் 25 வருடங்களின் பின்னர் பொது பக்.24

# இலங்கை – இந்தியா இடையே 4 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இலங்கை – இந்தியா இடையே 4 ஒப்பந்தங்கள் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இலங்கைக்கு இருநாள் பயணமாக வந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுக் காலை சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி செயலகத்தில் இரு தரப்பு பேச்சு இடம்பெற்றது. அதன் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஹிந்தி மொழியிலேயே பேச்சு நடத்தினார். இந்த சந்திப்பில் நான்கு முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.



இராஜதந்திர மற்றும் அதிகாரிகள் பயணிக்கும் போது விசா இன்றி பயணிப்பதற்கான ஒப்பந்தம், சுங்க நடவடிக்கைகளின் போது இரு நாடுகளுக்கும் இடையில் உதவி செய்துகொள்வதற்கான ஒப்பந்தம், இளைஞர் முன்னேற்றத்துக் கான ஒப்பந்தம், ரவிந்திர நாத் தாகூர் மன்றத்தை ருகுணு பல்கலைக் கழகத் தில் நிறு வுவதற்கான ஒப்பந் தம் ஆகியனவே கைச்சாத்திடப்பட்டன.

அதேவேளை, திருகோணமலையில் பெற்றோலிய உப மையத்தை அமைப்பதற்கான உதவிகளை செய்வதற்கு இந்தியா தயார் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். (ற–5)

## சாவகச்சேரி இந்து மாணவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்

தென்மராட்சி, மார்ச் 14

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளையினரால் பத்து லட்சம் ரூபா செலவில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் 2 ஆயிரத்து 200 மாணவர்களின் குடிதண்ணீர்த் தேவைக்காக தினமும் 5 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

## பட்டப் பகலில் ஆடுகள் களவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

பட்டப் பகலில் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த நான்கு ஆடுகளைக் களவாடிச் சென்றுள்ளனர். அவற்றின் குட்டிகளை விட்டுச் சென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி முரசுமோட்டை ஐயன்கோயிலடியில் உள்ள நவரத்தினம் ஜெயா என்பவரது வீட்டில் நடந்துள்ளது.

வாழ்வாதார உதவியாகத்தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்றால் வழங்கப்பட்ட ஆடுகளை அவர் வளர்த்துள்ளார். அவற்றை நன்கு பராமரித்து அவற்றின் குட்டிகளை விற்று அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தில் வாழ்க்கையை நகர்த்தி வந்தார்.

அவரால் வளர்க்கப்பட்ட ஆடுகள் தற்போதும்குட்டிகளைஈன்றுள்ளன. இந்தநிலையிலேயே திருடர்கள் அவர் வீட்டில் இல்லாத சமயம் ஆடுகளைத்திருடிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற–21)

## பதிவுகள், பயிற்சி நெறி இடமாற்றம்

தென்மராட்சி, மார்ச் 14

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இன்று இடம்பெறவிருந்த அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழிப் பயிற்சி தொடர்பான பதிவுகளும் பயிற்சிகள் ஆரம்பமும் சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தின் வர்த்தகர் கண்காட்சி இடம் பெறுவதையிட்டு பதிவுகளும் ஆரம்ப வகுப்பும் நகரசபை மண்டபத்தில் இடம்பெறும். பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகினர் அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி மட்ட III பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்பும் அரச ஊழியர்களை நாளை சாவகச்சேரி நகரசபை அலுவல கத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–9)

## ஜெயக்குமாரி விடுவிப்பை வரவேற்கிறது அமெரிக்கா

கொழும்பு, மார்ச் 14

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த ஒரு வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலேந்திரன் ஜெயக்குமாரி விடுவிக்கப்பட்டமையை வரவேற்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அவரைப் போன்று ஏனையோரையும் விடுவிக்க வேண்டும் என்று இலங்கை அரசை அமெரிக்கா வலியுறுத் தியுள்ளது.

கிளிநொச்சியில் வைத்து கடந்த வருடம் மார்ச் மாதம் 13 ஆம் திகதி, 13 வயதான விபூசிகாவும் அவரது தயாரான ஜெயக்குமாரியும் கைது செய்யப்பட்டிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சிக்கு ஆதரவு வழங்கியதாகத் தெரிவித்தே அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த ஒரு வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரி கடந்த 10 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் ஜென் சகி,

“தமிழ் சிறுபான்மையினரை நோக்கி புதிய அரசின் நல்லெண்ண நடவடிக்கை இது. இலங்கையில் மனித உரிமையை நிலைநாட்டுவதை நோக்கிய சாதகமான நடவடிக்கை இது”– என்று வர்ணித்தார். (ற–5)



## சந்திரிகாவை சந்தித்தார் மோடி

கொழும்பு, மார்ச் 14

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவைச் சந்தித்தார். இலங்கைக்கு நேற்றுக் காலை வந்த இந்தியப் பிரதமர் பல்வேறு இலங்கைத் தலைவர்களைச் சந்தித்துள்ளார்.

அதன் ஒருகட்டமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை, கொழும்பின் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் வைத்துச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு சில நிமிடங்கள் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## சிவத் தலங்களுக்கு மோடி வந்து அருள் பெறவேண்டும்

### அகில இலங்கை இந்து மா மன்றத்தினர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கை வந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவின் இருவேறு கருத்திட்டங்களுக்கு அண்மையில் உள்ள புராதன சிவத் தலங்களுக்கு வருகை தர வேண்டும் என்று அகில இலங்கை இந்து மா மன்றத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

“நரேந்திர மோடி எந்தவொரு இந்து ஆலயத்துக்கும் செல்வதாக இது வரையில் தகவல்கள் வெளியாகவில்லை. இது யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள எமது உறுப்பினர்களைக் குழப்பமடையச் செய்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி யாழ். மாவட்டத்தின் நகுலேஸ்வரத் திருத்தலத்துக்கு அண்மையில் வீட்டுத் திட்டத்தையும், மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரத்துக்கு அண்மையில் ரயில் நிலையத்தையும் திறக்கவுள்ளார் என்று அறிந்தோம். எனவே அவர் இவ்விரு திருத்தலங்களுக்கும் சென்று புனித ஈஸ்வரனின் அருளைப் பெறுவது இன்றியமையாததாகும்.

இது தொடர்பில் எமது தலைவர் கந்தையா நீலகண்டன் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகரை தொடர்பு கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.”– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–10)

## இந்திய மீனவர்கள் 86 பேரும் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 86 பேரும் நீதிமன்றத் தால் நேற்று விடுவிக்கப்பட்டு இந்தியத் துணைத்தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின்படி எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 86 பேரையும் விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தால் நேற்று முன்தினம் நீரியல் வளத்திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

விடுகைக்கான அனுமதிப்பத்திரம் நேற்று நீரியல் வளத்திணைக் களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதை அடுத்து 43 மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றிலும் 43 மீனவர்கள் திருகோணமலை நீதிமன்றிலும் முற்படுத்தப்பட்டனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாக இரு நீதிமன்றங்களில் இருந்தும் 86 மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இந்தியத் துணைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் இரு தினங்களில் மீனவர்கள் இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் இலங்கைக் கடற்படையினரால் நடுக்கடலில் வைத்து ஒப்படைக்கப்படவுள்ளனர். கடந்த மாதம் 26 ஆம் திகதி 86 மீனவர்களும் பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர். (ற–14)

BIOMEDICAL SCIENCE | 0777 692318

JAFFNA




13 லட்சங்கள் WOW! கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

கிரிக்கெட் கொண்டாட்டம்

2015 | மார்ச் 14 | சனிக்கிழமை

# அசத்திய நியூஸிலாந்து அச்சுறுத்திய பங்களாதேஷ்



குப்திலின் அதிரடி சதமும் அண்டர்சனின்கூலதுறைஆட்டமும்கைகொடுக்க 3 இலக்குகளால் போராடி பங்களாதேஷை வீழ்த்தி லீக் ஆட்டத்தில் அனைத்து அணிகளையும் வழித்து துடைத்தது நியூஸிலாந்து.

இரண்டுமே காலிறுதிக்கு தகுதி பெற்ற அணிகள் முடிவு எதுவாக இருந்தாலும் நியூஸிலாந்து அணி தொடர்ந்தும் முதலிடத்திலேயே நீடிக்கும். ஆனால் பங்களாதேஷ் வெற்றிபெற்றால் குழு 'ஏ' யில் முதலாம் இடத்தை தவிர்ந்த ஏனைய இடங்களில் மாற்றம் வரலாம் இதனால் வெற்றியை தனதாக்கும் நோக்கத்துடன் களமிறங்கியது பங்களாதேஷ். தங்களது பலத்தினை பரீச்சித்துப்பார்ப்பதற்கான ஓர் வாய்ப்பாகக் களமிறங்கியது நியூஸிலாந்து.

சொந்த மண்ணில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றதும் கூடுதல் பலமாக அமைய நியூஸிலாந்து பங்களாதேஷை துடுப்பெடுத்தாடமாறு பணித்தது. களத்தில் தமீம் மற்றும் கையிஸ் இருவருமே ஏமாற்றினார்கள். பங்களாதேஷ் 23–2. சர்கருடன் இணைந்தார் முகமதுல்லா. ஒரு முனையில் இணைப்பாட்டம் அதிகரிக்க அதிகரிக்க மறுமுனையில் படிப்படியாக சரிவில் இருந்து மீண்டது பங்களாதேஷ். நியூஸிக்கெதிராக இப்படியொரு இணைப்பாட்டம் இந்த உலகக்கிண்ண தொடரில் எவராலும் முன்னெடுக்கப்படவில்லை. மேலதிக இலக்குகள் இழப்பின்றி 100 ஓட்டங்களை எட்டியது வங்கம்.

இணைப்பாட்டம் தொடர்ந்தது ஆனாலும் நீடிக்க முடியவில்லை அரைச்சதத்துடன் விடைபெற்றார் சர்கர்.

முகமதுல்லாமறுமுனையில் நிதானம், அதிரடி என அனைத்தையும் கலந்து காயவைத்துக் கொண்டிருந்தார் நியூஸிலாந்தை. ஹசன் சுப்பர் என்று சொல்ல முடியாவிட்டாலும் சுமாரான பங்களிப்பு. ஹசன் விடைபெற களத்தில் வங்கத்து சிறுவன் என்று வர்ணிக்கப்படும் ரஹிம். வழக்கமான அதிரடி தொடரும் என்ற பலத்த எதிர்பார்ப்புக்கள் மத்தியில் எடுபடாமல் சென்றுவிட்டார். இலக்குகள் ஒரு முனையில் சரிந்தாலும் எதனையும் பொருட்படுத்தாமல் தனது வழக்கமான பாணியில் தொடர்ந்து கொண்டிருந்த முகமதுல்லா சதம் கண்டார். இலங்கைக்கு சங்கா என்றால் பங்களாதேஷுக்கு முகமதுல்லா. முகமதுல்லாவுடன் இணைந்தார் ரகுமான் சிறப்பான இறுதிநேரத்தாண்டவம். முடிவில் பங்களாதேஷ் 288–7. நடப்பு உலகக்கிண்ண தொடரில் நியூஸிலாந்துக்கு எதிராக எந்தவொரு அணியாலும் பெறப்பட்ட ஓட்டங்களில் அதி கூடிய ஓட்டம் இதுவே.

பக்கம் 04

## மே.தீவுகளுக்கு புதிய சிக்கல்



பயிற்சியின் பொழுது முதுகில் ஏற்பட்ட காயத்தினால் மேற்கிந்திய தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல், ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான நாளைய ஆட்டத்தில் விளையாடுவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 5 ஆட்டங்களில் விளையாடியுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி வெறும் 4 புள்ளிகளை மட்டுமே பெற்றுள்ளது. இதனால் அந்த அணி காலிறுதிக்கு தெரிவாகும் நம்பிக்கையை தக்கவைக்க வேண்டுமெனில் ஐக்கிய அரபுஇராச்சியத்துடனானநாளைய ஆட்டத்தில் சிறப்பான ஓட்ட விகிதத்துடன் வெற்றிபெற வேண்டிய கட்டாயநிலையில் உள்ளது. இவ்வாறான நெருக்கடியான நிலையில் கெயிலின் காயமானது தீவுகளுக்கு நிச்சயம் பின்னடைவை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்படுகின்றது. (ரி)

## வெற்றியுடன் விடைபெற்றது இங்கிலாந்து



பெல்லின் நிதானமும் ஜோர்தான், போபாராவின் வேகமும் கைகொடுக்கத் தனது இறுதி லீக் ஆட்டத்தில் ஆப்கானை 9 இலக்குகளால் வீழ்த்தி வெற்றியுடன் விடைபெற்றது கிரிக்கெட்டின் தாயகம்.

ஒன்று கத்துக்குட்டி இன்னுமொன்று கத்துக்குட்டி ஆக்கப்பட்டது. இரண்டுமே தொடரை விட்டு வெளியேறுவது உறுதி. ஆனாலும் இங்கிலாந்தை வெல்லுவோம் என்று சபதம் மேற்கொண்ட காரணத்தினால் இங்கிலாந்தை வீழ்த்தாவிட்டாலும் குறைந்த பட்சம் நெருக்கடி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் களமிறங்கியது ஆப்கானிஸ்தான். வெளியேறுவது உறுதியென்றாலும் ஆப்கானை அடக்கிவிட்டு கொஞ்சமாவது கௌரவத்துடன் வெளியேற வேண்டும் என்று களமிறங்கியது கிரிக்கெட்டின் தாயகம்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றதும் சாதகமாக அமைய ஆப்கானை துடுப்பெடுத்தாட பணித்தது இங்கிலாந்து. முன்னிலை வீரர்கள் ஒற்றை இலக்கங்களுடன் விடைபெற ஆப்கான் 25 ஓட்டங்களுக்கு 3 இலக்குகள். அறிக்கைகளை அள்ளி விளாசிய சென்வாரியும் 7 ஓட்டத்துடன் விடைபெற ஆப்கான் செய்வதறியாதுதிகைத்து நின்றது. மத்திய வரிசை வீரரான சபிக்குல்லா டெஸ்ட் பாணியில் நிதானித்து படிப்படியாக ஓட்டங்களைச் சேர்க்க ஆப்கான் ஒருவாறு 50 ஓட்டங்களை எட்டியது. பின் வரிசை வீரர்கள் பதின்ம ஓட்டங்

பக்கம் 04

## ஆஸியில் சங்காவுக்கு மவுசு

ஆஸ்திரேலிய மற்றும் நியூஸிலாந்து ஆடுகளங்களில் சங்கா வெளிப்படுத்திவரும் அசாத்திய திறைமையினால் ஆஸ்திரேலிய உள்ளூர் இருபது பந்துப்பரிமாற்ற (பிக் பேஸ் ரி– 20) தொடரில் விளையாடும் அணிகள் குமார் சங்கக்காரவை தமது அணிக்காக

பக்கம் 04

## இந்தியா என்றாலும் பயமில்லை

காலிறுதியில் இந்தியாவுடன் மோதினாலும் எங்களுக்குப் பயமில்லை. கடந்த 2007 உலக்கிண்ணதொடரில் நாங்கள் இந்தியாவை வீழ்த்தியுள்ளோம்' என்று பங்களாதேஷ் அணியின் மேலாளர் காலேத் மக்மத் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண தொடரில் 'ஏ' பிரிவில் இடம் பெற்ற பங்களாதேஷ், இங்கிலாந்தை வென்றதை அடுத்து, காலிறுதிக்கு முன்னேறியது. இதனையடுத்து நேற்றைய லீக் ஆட்டத்தில் நியூஸிலாந்திடம் தோற்றதையடுத்து எதிர்வரும் 19 ஆம் திகதி காலிறுதியில் இந்தியாவை சந்திக்கின்றது.

பக்கம் 04

## Picture of The Day




நேற்றைய ஆட்டத்தில் எல்லைக்கோட்டை நோக்கி விரைவாகச் சென்றுகொண்டிருந்த பந்தை அசாத்தியமாகத் தடுத்துநிறுத்திய மக்கலம். இதுவே இந்த உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை நடந்த ஆட்டங்களில் சிறந்த சேமிப்புக் களத்தடுப்பாகப் பதியப்பட்டுள்ளது.

## விடைபெறுகின்றார் ரெயிலர்

இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட் அணியான நாட்டிங்ஹாம்ஷயர் அணியில் சேர்ந்து விளையாடுவதற்காக, சிம்பாப்வே தேசிய அணியிலிருந்து விலகப்போவதாகப் பிரெண்டன் ரெயிலர் அறிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணியின் முன்னாள் அணித்தலைவரும் தற்போதைய நம்பிக்கை நட்சத்திரமும் இலக்குக் காப்பாளருமான பிரெண்டன் டெயிலர் சிம்பாப்வே அணிக்காக 166 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடியுள்ளார். சிம்பாப்வே அணி உலகக்

பக்கம் 04

| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி | குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 6 | 0 | 0 | 12 | இந்தியா | 5 | 0 | 0 | 10 |
| இலங்கை | 4 | 1 | 0 | 8 | தென்னாபிரிக்கா | 4 | 2 | 0 | 8 |
| ஆஸ்திரேலியா | 3 | 1 | 1 | 7 | பாகிஸ்தான் | 3 | 2 | 0 | 6 |
| பங்களாதேஷ் | 3 | 2 | 1 | 7 | அயர்லாந்து | 3 | 2 | 0 | 6 |
| இங்கிலாந்து | 2 | 4 | 0 | 4 | மே.இ.தீவுகள் | 2 | 3 | 0 | 4 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 5 | 0 | 2 | சிம்பாப்வே | 1 | 4 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 5 | 0 | 0 | ஐ.அ.இராச்சியம் | 0 | 5 | 0 | 0 |

# அசத்திய நியூஸிலாந்து அச்சுறுத்திய பங்களாதேஷ்

2015 உலகக் கிண்ணம்

நியூஸிலாந்து எதிர் பங்களாதேஷ்
03 இலக்குகளால் நியூஸிலாந்து வெற்றி

நாணயச் சுழற்சி நியூஸிலாந்து

பங்களாதேஷ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தமீம் | C அண்டர்சன் B போல்ட் | 13 | 27 | 02 | 0 |
| ஹைபிஸ் | B போல்ட் | 02 | 19 | 0 | 0 |
| சர்கர் | C அண்டர்சன் B விக்ரோரி | 51 | 58 | 07 | 0 |
| முகமதுல்லா | ஆட்டமிழப்பில்லை | 128 | 123 | 12 | 03 |
| சகிப் அல் ஹசன் | C றோஞ்சி B அண்டர்சன் | 23 | 18 | 03 | 0 |
| ரகீம் | C றோஞ்சி B அண்டர்சன் | 15 | 25 | 02 | 0 |
| ரகுமான் | C மக்கலம் B எலியாட் | 40 | 23 | 05 | 02 |
| கொசைன் | C ரெய்லர் B எலியாட் | 11 | 07 | 0 | 01 |
| ரூ.கொசைன் | ஆட்டமிழப்பில்லை | 01 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 05 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சௌத்தி | 10 | 51 | 0 | 01 |
| போல்ட் | 10 | 56 | 02 | 03 |
| மக்கல் நாதன் | 08 | 68 | 0 | 0 |
| விக்ரோரி | 10 | 42 | 01 | 0 |
| அண்டர்சன் | 10 | 43 | 02 | 0 |
| எலியாட் | 02 | 27 | 02 | 0 |

TOTAL 288/7 (50)

1 - 04 (ஹைபிஸ்)
2 - 27 (தமீம்)
3 - 117 (சர்கர்)
4 - 151 (சகிப் அல் ஹசன்)
5 - 182 (ரகீம்)
6 - 260 (ரகுமான்)
7 - 287 (என்.கொசைன்)

நியூஸிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| குப்தில் | C ஏ.ஹொசைன் B சகிப் அல்ஹசன் | 105 | 100 | 11 | 02 |
| மக்கலம் | C சர்கா B சகிப் அல்ஹசன் | 08 | 08 | 01 | 0 |
| வில்லியம்சன் | C தமீம் B சகிப் அல்ஹசன் | 01 | 02 | 0 | 0 |
| ரெய்லர் | LBW B என்.கொசைன் | 56 | 97 | 05 | 0 |
| எலியாட் | C அகமட் B ரூ.கொசைன் | 39 | 34 | 05 | 01 |
| அண்டர்சன் | B என்.கொசைன் | 39 | 26 | 03 | 03 |
| றோஞ்சி | C என்.ஹொசைன் B சகிப் அல்ஹசன் | 09 | 10 | 02 | 0 |
| விக்ரோரி | ஆட்டமிழப்பில்லை | 16 | 10 | 01 | 01 |
| சௌத்தி | ஆட்டமிழப்பில்லை | 12 | 06 | 01 | 01 |
| உதிரிகள் | | | | | 05 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சகிப் அல் ஹசன் | 8.5 | 55 | 04 | 01 |
| இஸ்லாம் | 10 | 58 | 0 | 0 |
| ரூ.கொசைன் | 08 | 40 | 01 | 01 |
| அகமட் | 08 | 49 | 0 | 0 |
| சர்கர் | 04 | 19 | 0 | 0 |
| ரகுமான் | 02 | 14 | 0 | 0 |
| முகமதுல்லா | 03 | 22 | 0 | 0 |
| என்.கொசைன் | 05 | 32 | 02 | 0 |

TOTAL 290/7 (48.5)

1 - 27 (மக்கலம்)
2 - 33 (வில்லியம்சன்)
3 - 164 (குப்தில்)
4 - 210 (எலியாட்)
5 - 219 (ரெய்லர்)
6 - 247 (றோஞ்சி)
7 - 269 (அண்டர்சன்)

ஆட்ட நாயகன் குப்தில்



289 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. சொந்த மண் பழக்கப்பட்ட ஆடுகளம் நியூஸி சாதித்து விடும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தனர் நியூஸி ரசிகர்கள். வீரர்களுக்கும் இதே நம்பிக்கைதான். களத்தில் மக்கலம் மற்றம் குப்தில். வழக்கத்துக்கு மாறாக மக்கலம் விடைபெற்றார்.


நியூஸியின் எதிர்காலம் என்று வர்ணிக்கப்படும் வில்லியம்சன் 1. நியூஸிலாந்து 33–2. அதிர்ச்சியில் நியூஸிலாந்து ரசிகர்கள். நியூஸிலாந்தின் மீதிருந்த நம்பிக்கை படிப்படியாக குறைய ஆரம்பித்தது. அச்சம் அனைவரையும் ஆட்கொண்டது. இதுவரை நிலைக்காத குப்திலும் ரெயிலரும் நேற்று அணியை கொண்டு சென்றனர்.

மேலதிக இலக்குகள் இழப்பின்றி 100 ஓட்டங்களை எட்டியது நியூஸிலாந்து. மூன்றாவது இலக்குக்கான இணைப்பாட்டமாக 131 ஓட்டங்கள் பகிரப்பட்டது. அரைச்சதம் கடந்து பவிலியனுக்கு திரும்பினார் ரெயிலர் நியூஸி 164–3. ஆட்டம் எந்தப்பக்கமும் சாயலாம். ரெயிலர் விடைபெற களத்தில் எலியாட். இறுதிக்கட்டத்தில் சிறப்பான பங்களிப்பு நியூஸிலாந்தின் பக்கம் வெற்றிவாய்ப்பு அதிகமாக இருந்தது.

மறுமுனையில் 88 பந்துகளில் சதத்தை நிறைவு செய்து விடைபெற்றார் குப்தில் உலகக்கிண்ண தொடரில் நியூஸி சார்பாக பெறப்பட்ட முதல் சதம் இதுவே. சொற்ப நேரத்தில் அண்டர்சனும் விடைபெற்றார். களத்தில் விக்டோரி மற்றும் சௌத்தி. 18 பந்துகளில் 26 ஓட்டங்கள் என்ற நிலைமை. இருவரும் ஆளுக்கொரு சிக்சர் விளாசினார்கள்.

முடிவில் நியூஸிலாந்து 290–7. 3 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. (ரி)

# விடைபெறுகின்றார் ரெயிலர்



கிண்ண லீக் சுற்றில் இது வரை விளையாடியுள்ள 5 ஆட்டங்களில் ஒன்றில் மட்டுமே வென்று, காலிறுதி வாய்ப்பை இழந்துள்ளது. கடைசி லீக் ஆட்டத்தில் இன்று இந்தியாவை சந்திக்கின்றது.

இந்நிலையில், சிம்பாப்வே அணியின் முக்கிய வீரரான பிரெண்டன் ரெயிலர், இங்கிலாந்தைச் சேர்ந்த கவுண்டி கிரிக்கெட் கழக அணியான நட்டிங்ஹாம்ஷயர் அணியில் சேர்ந்து விளையாட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார். 'கோல்பாக் ஒப்பந்தம்' என்று அழைக்கப்படும் இந்த ஒப்பந்தத்தின்படி அவர் நட்டிங்ஹாம்ஷயர் அணியில் மூன்று ஆண்டுகளுக்கு விளையாட வேண்டும். அது வரை அவர் சிம்பாப்வே தேசிய அணியில் விளையாட முடியாது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் சிம்பாப்வே அணியில் இருந்து வெளியேற வேண்டிய நிலைக்கு பிரெண்டன் ரெயிலர் தள்ளப்பட்டுள்ளார். இதனால், சிம்பாப்வே–இந்தியா இடையிலான இறுதி லீக் ஆட்டம் தான் சிம்பாப்வே அணிக்காக பிரெண்டன் ரெயிலர் விளையாடப்போகும் கடைசி ஆட்டமாக அமையும், சில நேரங்களில் இன்றைய ஆட்டத்திலும் ரெயிலர் விளையாடுவது சந்தேகம் என்ற நிலைமை தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ரி)


அதிகூடிய ஓட்டங்கள்

| | | |
|---|---|---|
| 496 | சங்ககாரா (இலங்கை) | 6 ஆட்டங்கள் |
| 417 | வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) | 6 ஆட்டங்கள் |
| 395 | டில்சான் (இலங்கை) | 6 ஆட்டங்கள் |
| 344 | முகமதுல்லா (பங்களாதேஷ்) | 5 ஆட்டங்கள் |
| 333 | தவான் (இந்தியா) | 5 ஆட்டங்கள் |



அதிகூடிய இலக்குகள்

| | | |
|---|---|---|
| 15 | போல்ட் (நியூசிலாந்து) | 6 ஆட்டங்கள் |
| 14 | டேவி (ஸ்கொட்லாந்து) | 5 ஆட்டங்கள் |
| 13 | விக்ரோரி (நியூஸிலாந்து) | 6 ஆட்டங்கள் |
| 13 | மோர்கல் (தென்னாபிரிக்கா) | 6 ஆட்டங்கள் |
| 13 | சவுத்தி (நியூசிலாந்து) | 6 ஆட்டங்கள் |



# ஆஸியில் சங்காவுக்கு மவுசு

வாங்குவதற்கு போட்டி போடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

'பிக் பேஸ்' தொடரில் பங்கு பற்றும் 8 அணிகளும் சங்கக்காரவை தமது அணிக்காக வாங்குவதற்குத்தமக்கிடையே போட்டி போடும் எனவும் இதற்காக அவ் அணிகள் பெருந்தொகையை கொடுக்க முன்வருமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதை விட சங்கக்காரவின் ஒரு நாள் கிரிக்கெட் வாழ்வும் நிறைவுக்கு வருவதால் அவருக்கான கேள்வி இன்னும் அதிகமாக இருக்குமென பரவலான எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்றன.' (ரி)

# வெற்றியுடன் விடைபெற்றது இங்கிலாந்து

களுடன் பவிலியன் திரும்ப ஆப்கான் 36 பந்துப் பரிமாற்றங்களில் 111–7. இரு அணிகளையும் விட மழையின் ஆதிக்கமே நேற்றைய ஆட்டத்தில் அதிகரித்திருந்தது. ஆப்கான் ஆட்டம் கைவிடப்பட வேண்டும் என்ற எண்ணத்திலும் இங்கிலாந்துக்கோ எப்படியாவது ஆரம்பமாக வேண்டும் என்ற எண்ணம். இங்கிலாந்தின் எண்ணம் ஈடேறியது

2015 உலகக் கிண்ணம்

இங்கிலாந்து எதிர் ஆப்கானிஸ்தான்
09 இலக்குகளால் இங்கிலாந்து வெற்றி

நாணயச் சுழற்சி இங்கிலாந்து

ஆப்கானிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அகமடி | C றூட் B புறோட் | 07 | 15 | 0 | 0 |
| மாங்கல் | C றூட் B அண்டர்சன் | 04 | 28 | 0 | 0 |
| சஷாய் | C பட்லர் B ஜோர்தான் | 06 | 14 | 0 | 0 |
| ஜமல் | C பட்லர் B போபாரா | 17 | 52 | 02 | 0 |
| சென்வாறி | C மோர்கல் B யோர்தான் | 07 | 11 | 01 | 0 |
| சிபியுல்லா | C போப்பாரா B ரேட்வெல் | 30 | 64 | 01 | 0 |
| நபில் | C ரேட்வெல் B போப்பாரா | 16 | 17 | 01 | 01 |
| சடான் | ஆட்டமிழப்பில்லை | 12 | 15 | 02 | 0 |
| ஹசன் | ஆட்டமிழப்பில்லை | 0 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 12 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| அண்டர்சன் | 07 | 18 | 01 | 0 |
| புறோட் | 08 | 18 | 01 | 01 |
| ஜோர்தான் | 6.2 | 13 | 02 | 02 |
| போப்பாரா | 08 | 31 | 02 | 01 |
| ரேட்வெல் | 07 | 25 | 01 | 0 |

TOTAL 111/7 (36.2 DL)

1 - 17 (மங்கல்)
2 - 20 (அகமடி)
3 - 25 (சசாய்)
4 - 34 (சென்வாரி)
5 - 65 (ஜமல்)
6 - 93 (நபி)
7 - 101 (சிபியுல்லா)

இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கேல்ஸ் | C சஷாய் B ஹசன் | 37 | 33 | 03 | 02 |
| பெல் | ஆட்டமிழப்பில்லை | 52 | 56 | 06 | 0 |
| ரெய்லர் | ஆட்டமிழப்பில்லை | 08 | 20 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 04 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| எஸ்.சடான் | 04 | 25 | 0 | 0 |
| டி.சடான் | 03 | 23 | 0 | 0 |
| ஹசன் | 05 | 17 | 01 | 0 |
| நபி | 4.1 | 14 | 0 | 0 |
| சென்வாரி | 02 | 19 | 0 | 0 |

TOTAL 101/1 (18.1/25)

1 - 83 (கேல்ஸ்)

ஆட்ட நாயகன் ஜோர்தான்



ஆட்டம் 25 பந்துப்பரிமாற்றமாக மட்டுப்படுத்தப்பட்டு இங்கிலாந்துக்கு 101 ஓட்டங்கள் வெற்றியிலக் காகக் கொடுக்கப்பட்டது. 150 பந்துகளில் 101 ஓட்டங்கள். கிரிக்கெட்டின் தாயகம் எட்டிவிடும் என்ற நிலைமை. எல்லா ஆதங்கங்களையும் ஆப்கானிடம் கொட்டித்தீர்த்தது இங்கிலாந்து. ஆரம்ப வீரர்கள் அடித்து நொருக்கினர். இடையிடையே வாணவேடிக்கைகளுக்கும் பஞ்சம் இருக்கவில்லை. இலக்குகள் இழப்பின்றி வெற்றியை எட்டிவிடும் என்ற கணிப்பு பரவலானது. பத்து இலக்குகளால் தோற்காமல் கேல்ஸை 37 ஓட்டங்களுடன் வழியனுப்பி வைத்தார் ஹசன். பெல் தொடர்ந்தும் நிதானத்தில்.

கேல்ஸிற்கு பதிலாக ரெயிலர். மேலதிகமாக ஆப்கானால் இங்கிலாந்தின் இலக்குகள் எதனையும் அசைத்துப்பார்க்க முடியவில்லை. முடிவில் இங்கிலாந்து அணி 09 இலக்குகளால் இலகுவாக வெற்றியை பதிவுசெய்தது. (ரி)

# இந்தியா என்றாலும் பயமில்லை

இதுகுறித்து பங்களாதேஷ் அணியின் மேலாளர் காலேத் மக்மத் கூறியதாவது:–

'காலிறுதியில் இந்தியாவுடன் மோதும் நிலை ஏற்பட்டதால்;, நாங்கள் பயப்படப் போவதில்லை. இத்தொடரில் மூன்று சிறந்த அணிகளுக்கு எதிராக வெற்றிபெற்றுள்ளோம். இந்திய அணி 'நடப்பு சாம் பியனாக' இருக்கலாம் அதற்காக நாம் பயப்படப் போவ தில்லை. கடந்த 2007 உலக் கிண்ண தொடரில் அவர்களை வீழ்த்தியுள்ளோம். ஒருநாள் ஆட்டங்களை பொறுத்தவரையில், அன்றைய தினம் சிறப்பாக அல்லது மோசமாக அமைந்து விட்டால், ஒட்டு மொத்த முடிவும் மாறிப்போகும். முடியுமானவரை இந்தியாவுடன் போரிட்டுப்பார்ப்போம்' என்றார். (ரி)



# பீற்றர்சன், குக் மீண்டும் அணியில்?

காலிறுதிவாய்ப்பனைஇங்கிலாந்துஅணிதவறவிட்டமைக்குஅணியின் அனுபவ வீரர்களான பீற்றர்சன் மற்றும் குக் புறக்கணிப்பே காரணம் என்று தெரிவுக்குழுவில் தற்பொழுது பழிபோடப்பட்டுள்ளது.
நடப்பு உலக்கிண்ண தொடரில் இங்கிலாந்து அணி இதுவரை விளையாடிய 5 ஆட்டங்களில் ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. வாழ்வா சாவா என்ற நிலையில் பங்களாதேஷுடன் நடைபெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷிடம் அதிர்ச்சித் தோல்விகண்டு கால்இறுதி வாய்ப்பை இழந்தது. இதனால் இங்கிலாந்து ரசிகர்கள், ஊடகங்கள், ஓய்வு பெற்ற வீரர்கள் என பலரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதனையடுத்து உலகக்கிண்ணத்துக்கான அணித்தெரிவில் அனுபவ வீரர்களான குக், பீற்றர்சன் போன்றவர்களை புறக்கணித்ததே தோல்விக்கு காரணம் என்று தெரிவுக்குழுவில் குற்றஞ் சாட்டப்பட்டது மட்டுமல்லாது அவர்களை மீண்டும் அணியில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது. (ரி)

# இந்திய வீரர்களை சந்திக்க ஊடகவியலாளருக்குத் தடை

ஹோக்லி, ஊடகவியலாளர் மோதலை அடுத்து இந்திய அணி வீரர்கள் தற்பொழுது தங்கியுள்ள ஆக்லாந்து விடுதிக்குள் செல்ல 'ஊடகங்களுக்கு' தடை விதிக்கப்பட்டுள்ளது.
சில நாள்களுக்கு முன்னர் இந்திய அணி பேர்த்தில் தங்கியிருந்தது. அப்போது, பயிற்சி முடித்து திரும்பிய கோஹ்லி, இந்தியாவைச் சேர்ந்த ஆங்கில பத்திரிகையாளரைத் திட்டியதால் பிரச்சினை ஏற்பட்டது.
தற்போது இன்றைய சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்திற்காக, நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணியினர், ஆக்லாந்தின் 'ஹெரிடேஜ்' விடுதியில் தங்கியுள்ளனர்.
பேர்த்தில் நடந்தது போன்ற பிரச்சினை மீண்டும், ஏற்படுவதைத் தடுக்க, இந்திய அணி நிர்வாகமும் விடுதி நிர்வாகமும் இணைந்து புதிய முடிவை எடுத்துள்ளன.
அதாவது, இந்த விடுதியின் 100 மீற்றர் தூரத்திற்கு பத்திரிகையாளர் உட்செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.
இதை மீறி, விடுதியை நெருக்கமாக நின்று படமெடுக்க முயன்ற பத்திரிகையாளர்களுக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்னயடுத்து பாதுகாப்பு அதிகாரிகள் அங்கிருந்த நடைபாதை, வீதிகளில் கூட யாரும் இல்லாமல் பார்த்துக் கொண்டனர். ஆட்டங்கள் இல்லாத நாள்களில் வீரர்கள் விடுதியின் முன்பகுதி, கடற்கரை என, எங்கு சென்றாலும் பத்திரிகையாளர்கள் பின்தொடர்ந்து வந்து செய்திகளை வெளியிடுகின்றனர். இதைத் தடுக்கவே ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. (ரி)






## தினம் ஒரு பரிசுப் போட்டி 28

நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் அதிக சிக்சர்கள் விளாசுவார் எதிர்பார்க்கப்படும் வீரர் யார்?

.......................................

பெயர் : .............................

தே.அ.இல. : .............................

முகவரி : .............................

.............................

தொலைபேசி இல.: .............................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (15.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

## பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

.......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

.......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

## போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

## BCAS CAMPUS JAFFNA — 5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்

### மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

.......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

.......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2½ லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1½ லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

## அரையிறுதி பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)....................... 2).......................

3)....................... 4).......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

தொலைபேசி .......................


போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு

MJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்

**லக்கி பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ**
165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்**
85 பருத்தித்துறை, வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி, கெருடாவில்.
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை, உடுப்பிட்டி.
**கலைச்சோலை**
இல 3 நவீன சந்தை, வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்**
பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்**
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
**ஓம் கணேசா**
இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**
14. விதானையார் வீதி, சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்**
சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்**
சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை**
பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ**
கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்**
ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி**
ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்**
அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி.
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்**
ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்**
31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்**
தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி.
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்**
விசுவமடு.
**வரணா புக்சொப்**
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
வரணி.
**விநாயகர் களஞ்சியம்**
அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,**
நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்**
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நீங்கள் விரும்பிய இடமாற்றம் உண்டாகும். எதைச் செய்தாலும் ஒரு குறிக்கோளுடன் செய்வீர்கள். செலவும் அதிகரிக்கும். அதே வேளையில் பணவரவும் உண்டாகும். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும்.

**இடபம்:** மனோதைரியம் கூடும். புதிய நட்புக் கிடைக்கும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மைதரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணிபுரிவார்கள். சிலருக்கு புதிய பதவி அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெறுவார்கள்.

**கடகம்:** மேலிடத்தின் கனிவான பார்வை உங்கள் மீது விழும். மேல்பதவி செல்வதற்கு எழுதிய தேர்வில் தேர்ச்சி பெறுவீர்கள். இடமாற்றம் உறுதிப்படுத்தப்படும். நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேறும்.

**சிங்கம்:** குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் சிறப்பான முறையில் நடந்தேறும். விருந்தினர்கள் வருகை இருக்கும். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் அனுகூலமான சூழ்நிலையைக் காண்பீர்கள். உங்கள் உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உற்றார், உறவினர்கள் பாசத்தோடு பழகுவார்கள்.

**துலாம்:** பெரியோரின் ஆலோசனைப்படி நடந்து கொண்டு, குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டாலும் தப்பித்துக் கொள்வீர்கள். புதிய ஒப்பந்தங்களைப் பெறுவதற்குத் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் சுய கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாது. சக ஊழியர்களின் உதவியால் உங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். பணியின் நிமித்தமாக வெளிநாட்டிற்கு பயணம் செய்வீர்கள்.

**தனுசு:** புதிய பதவிகள் வரும். செய்கின்ற காரியங்களில் சிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிவு சாதகமாகவே அமையும். மறைமுக எதிர்ப்புகள் அகலும். மேலிடத்திடம் இருந்து வந்த மனக்கசப்புகள் அகலும்.

**மகரம்:** ஏதாவது ஒருவகையில் அடுத்தவரிடம் வீண் பேச்சு கேட்க நேரலாம் கவனம் தேவை. மற்றவர்கள் செய்கைகளால் மனவருத்தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்சினை முடிவுக்கு வரும்.

**கும்பம்:** தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின் தங்கிய நிலை மாறும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். எதிர்பாராத இடங்களிலிருந்து பண வரவு உண்டாகும். மனதில் அமைதி நிலவும். நிம்மதியாக உறங்குவீர்கள்.

**மீனம்:** அனைத்து விடயங்களையும் நல்ல கண்ணோட்டத்துடன் காண்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவார்கள்.

# தாயும் மகளும் ஒரே தினத்தில் பிரசவம்



37 வயது தாயும், 20 வயது மகளும் ஒரே தினத்தில் சில நிமிட இடைவெளியில் குழந்தைகளை பிரசவித்த சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த அஞ்ஜெலா பட்ரம் என்ற தாயும் தெரனிஷா பில்லப்ஸ் என்ற மகளுமே இவ்வாறு ஒரே தினத்தில் குழந்தைகளை பிரசவித்துள்ளனர்.

மருத்துவமனையில் அஞ்ஜெலா பெண் குழந்தையை பிரசவித்து 34 நிமிடங்களில் தெரனிஷா ஆண் குழந்தையை பிரசவித்துள்ளார். தமது பிரசவங்கள் குறைந்த நாள்கள் வித்தியாசத்தில் இடம் பெறவுள்ளதை முன்கூட்டியே அறிந்திருந்த போதும், ஒரே தினத்தில் சில நிமிட வித்தி யாசத்தில் தாம் குழந்தைகளை பிரசவிக்கவுள்ளோம் என்று எதிர்பார்த்திருக்கவில்லை என அஞ்ஜெலாவும் தெரனிஷாவும் தெரிவித்துள்ளனர்.

அஞ்ஜெலாவுக்கு தெரனிஷாவை உள்ளடக்கி ஏற்கனவே 4 பிள்ளைகள் உள்ளனர்.

# கணினி ஆணா... பெண்ணா?



*கணினி ஆண் தான் என்றார்கள் மாணவிகள். அவர்கள் சொன்ன காரணங்கள்:-*

- அதுக்கு எதையும் சுலபமா புரிய வைக்க முடியாது.
- உருவாக்கினவனைத் தவிர வேறு யாருக்கும் அதோட நடைமுறையை புரிந்து கொள்ள முடியாது.
- நாம் ஏதாவது தவறு செய்திருந்தா மனதிலேயே வைத்திருந்து நேரம் பார்த்து மானத்தை வாங்கும்.
- எந்த நேரத்தில புகையும், எந்த நேரத்தில மயங்கும்னு சொல்லவே முடியாது.
- எங்களிட்ட இருக்கறதைவிட அடுத்த வங்க வைச்சிருக்கறது நல்லா வேலை செய்யறது மாதிரி தோணும்...!

*மாணவர்களோ கணிணி பெண்பால் தான்னு சாதிச்சாங்க அதுக்கு ஆதாரமா அவங்க சொன்னது இதோ...*

- எப்பவுமே அடுத்த கணினியோட ஒத்துப் போகவே போகாது.
- எட்ட இருந்து பார்க்க கவர்ச்சிகரமா இருக்கும். ஆனால் கிட்டப் போனாதான் அதோட வண்டவாளம் தெரியும்.
- நிறைய ஸ்டோர் பண்ணி வச்சிருக்கும். ஆனால் எப்படி பயன்படுத்தணும்னு அதுக்கு தெரியாது.
- பிரச்சினையை குறைக்கிறத்துக்காக கண்டு பிடிக்கப்பட்டவை. ஆனால் பெரும்பாலான சமயங்களில் அதுகளேதான் பிரச்சினையே.
- அதை சொந்தமாக்கிக்கிட்ட பிறகுதான் நமக்கு புரியும். அடடா இன்னும் கொஞ்சம் பொறுமையா இருந்திருந்தா இதைவிட அருமையான மொடல் கிடைச்சிருக்குமேன்னு...!




# ருவிட்டரின் கட்டுப்பாடு

பிடிக்காதவர்கள் குறித்து ஆபாச படங்கள், வீடியோக்களைப் பரப்பும் செயல்களில் வரம்புமீறி ஈடுபடுவோருக்கு தடை விதிக்கும் நடவடிக்கையை பிரபல சமூக வலைதளமான ருவிட்டர் மேற்கொண்டுள்ளது.

பிரபல குறும் பதிவுத் தளமான ருவிட்டரில் அதிக அளவில் வரம்பு மீறிய இணையக் குற்றச் செயல்கள் நடப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த நிலையில், ருவிட்டரில் பயனாளர்கள் மற்றவர்களின் ஆபாசப் படங்கள், வீடியோக் காட்சிகளை அவர்களது அனுமதி இன்றி வெளியிடுவது தடை செய்யப்படுகிறது. 'நிலைப் பதிவுகள் அனைத்தும் வரம்புக்கு உட்படுத்தப்படும்' என்ற அறிவிப்பையும் ருவிட்டர் வெளியிட்டுள்ளது.

# இணைந்த பட்டாளம்

விளம்பரம் ஒன்றுக்காக பொலிவுட் நடிகர் அமிதாப் பச்சன் பட்டு வேட்டி அணிந்து போஸ் கொடுத்துள்ளார். பிரபல நிறுவனம் ஒன்றின் விளம்பரப் படத்தில் நடிக்க அமிதாப்பச்சன், பிரபு, விக்ரம் பிரபு, நாகர்ஜுனா, சிவராஜ்குமார் மற்றும் நடிகை மஞ்சு வாரியர் ஆகியோர் ஒப்பந்தமாகியுள்ளனர்.

அந்த விளம்பரப் படத்திற்காக அமிதாப் உள்ளிட்ட நடிகர்கள் பட்டு வேட்டி சட்டை அணிந்தும், மஞ்சு வாரியர் பட்டுப் புடைவை உடுத்தியும் போஸ் கொடுத்தனர். அந்த ஒளிப்படத்தை அமிதாப் பச்சன் தனது ருவிட்டர் மற்றும் பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அமிதாப் கூறியிருப்பதாவது, தென்னிந்தியாவின் சிறந்த நடிகர்களுடன் நான். அனைவரும் நான் நடிக்க வந்த புதிதில் பெரிய ஜாம்பவான்களாக இருந்தவர்களின் மகன்கள். பிரபு – தமிழ் சினிமாவின் ஜாம்பவானான சிவாஜி கணேசனின் மகன். விக்ரம் – பிரபுவின் மகன். சிவா– கன்னட சினிமாவின் ஜாம்பவானான ராஜ்குமாரின் மகன். நாகர்ஜுன் – தெலுங்கு சினிமாவின் ஜாம்பவானான அகினேனி நாகேஸ்வரராவின் மகன். மஞ்சு வாரியர் – மலையாள சினிமாவின் டார்லிங். அவர்களுடன் ஒளிப்படம் எடுத்துக் கொண்டதில் பெருமை என்று தெரிவித்துள்ளார்.





# கூட்டமைப்பின் நோக்கம் தமிழருக்கு இறுதித்தீர்வு பெற்றுக்கொடுப்பதே

## பாடசாலை மெய்வன்மைப்போட்டியில் அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 14

புதியஅரசு தற்போது இந்த நாட்டை பொறுப்பெடுத்து ஆட்சி செய்து வருகின்றதே தவிர தமிழ் மக்களுக்கான எந்த மாற்றமும் இதுவரை நிகழவில்லை. த.தே.கூட்டமைப்பை பொறுத்தவரையில் ஆட்சியை மாற்றுவது மாத்திரம் தமது கடமையல்ல; 65 வருட காலமாகத் தமிழர்கள் பட்ட துன்ப துயரங்களுக்கு இறுதித்தீர்வு காண்பதே எமது நீண்ட நாள் இலக்கு என்பதனை யாரும் மறந்து விடக்கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

எருவில் கண்ணகி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதன்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார். அவர் தனதுரையில் மேலும் கூறுகையில்:

"தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அரசியல் பயணம் என்பது ஒரு தாயகத்தில் வாழக்கூடிய மக்கள் தன்னாட்சி அதிகாரம் அற்று சுதந்திரம் அற்று அங்குள்ள பெரும்பான்மை இனத்தவரின் கீழ் அடிமைகளாக இருக்காமல் அதனை அறுத்தெறிந்து ஓர் இனத்துக்குத் தேவையான உரிமையைப் பெறும் அரசியலே.

வெறுமனே அரசில் போய் சேர்ந்து கொண்டு, அமைச்சுப் பதவிகளைஏற்றுக்கொண்டு வாய் மூடி மௌனிகளாக இருப்பதற்கு நாங்கள் தயாரில்லை எமது மக்கள் த.தே.கூட்டமைப்புக்கு இன்று நேற்றல்ல பல தசாப்த காலங்களாக ஒருமித்து த.தே.கூட்டமைப்பை பலப்படுத்தி வருகின்றார்கள்.

நாங்கள் நாட்டில் நடைபெற்ற எட்டு தேர்தல் பரீட்சையில் சித்தியடைந்திருக்கின்றோம். அதன்காரணமாக எங்களைச் சர்வதேசம் மதித்து எங்கள் கருத்துக்களையும் உள்வாங்கி செயற்படுகின்றது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின் நடைபெற்ற எந்தத்தேர்தலாக இருந்தாலும் அவை அனைத்திலும் த.தே.கூட்டமைப்பு அதீத வெற்றியீட்டிச் சாதனை படைத்திருக்கின்றது. இதற்கு முற்று முழுதாக தமிழ் மக்களே பொறுப்பானவர்கள். அவர்களது பலம் எங்கள் பக்கம் இருக்கும் வரைக்கும் தமிழர்களுக்கான தீர்வைப் பெறுவதில் எமக்கு சிரமம் கிடையாது.

தமிழ்மக்கள் த.தே.கூட்டமைப்புக்கு வாக்களிக்காமல் இருந்திருந்தால் எமது எல்லைக்கிராமங்கள் எங்கள் கைவசம் இருந்து பெரும் பான்மை இனத்தவர்களால் மிக இலகுவாகப் பறிக்கப்பட்டிருக்கும். இன்று நாங்கள் சகலவற்றையும் இழந்து நிலமற்றவர்களாகப்போயிருக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலை உரு வாகியிருக்கும்.

கூட்டமைப்பானது இணைந்த வடகிழக்கில் எங்களுக்குரிய உரிமையைத்தான் கேட்டு நிற்கின்றோம். அந்த உரிமையைத் தரும் வரை எமது போராட்டம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும். நாங்கள் மஹிந்தவை வீட்டிற்கு அனுப்பவேண்டும் என்றுதான் மைத்திரிக்கு வாக்குச் சேர்த்தோம். மாறாக மைத்திரி எங்களுக்கு எதையும் செய்வார் என்று நாங்கள் அவரை ஆதரிக்கவில்லை. இரண்டு பேரும் முள்ளுத்தான். ஒன்று அம்பாந்தோட்டை முள்ளு, மற்றையது பொலநறுவை முள்ளு. இரண்டு முட்களும் குத்தும் என்பது எமக்குத்தெரிந்த விடயம்.

மோடியின்வருகை தமிழ்மக்களுக்கு நல்ல செய்தியைக் கொடுக்க வேண்டும். வெறுமனே இந்தியப்பிரதமர் வந்தார்; வட மாகாணம்சென்றுநிலைமைகளை நேரில் பார்வையிட்டார் என்றிராமல் அவர் இந்த அரசுக்கும், சர்வதேச விசாரணைக்கும் அழுத்தம் கொடுத்திருக்கின்றார் என்ற செய்தியைக் கூற வேண்டும். அதனைத்தான்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்பார்க்கின்றது"– என்றார். (வ)

# மட்டக்களப்பில் நடைபெற்ற விழிப்புணர்வு ஊர்வலம்



மட்டக்களப்பு, மார்ச் 14

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து "பெண்களுக்கான சிறந்த நாடு" எனும் கருப்பொருளில் விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பு நகரில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களமும் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த ஊர்வலம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.தவராஜா தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலகப் பிரிவின் 48 கிராம சேவகர் பிரிவுகளிலுமுள்ள சமுர்த்திச் சங்கங்களின் அங்கத்தவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் செயலக வளாகத்தில் ரியா பெண்கள் அமைப்பால் 'ஒளியை நோக்கி' எனும் தலைப்பில் வீதி நாடகம் இடம்பெற்றது.

பெண்கள் நாட்டின் கண்கள், தியாக சிந்தனை படைத்த பெண்ணினத்தைப் பெருமைப்படுத்துவோம், பொறுமை யுள்ள பெண்ணுக்குச்சமவுரிமைவழங்குங்கள், பாலியல் துன்புறுத்தலிலிருந்து பெண்மையை காப்பாற்றுவோம், பெண்களை என்றும் முன்னிலைப் படுத்துவோம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் தாங்கியிருந்தனர். (வ)


**தென்னந்தோட்டம் விற்பனைக்கு**

பளைக்கும் தர்மக்கேணிக்கும் இடையில் உள்ள 35 ஏக்கர் தென்னந்தோட்டம் இரண்டு, மூன்று பகுதிகளாகப் பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 729 9031, 072 525 4133

(56735) (4.3.7)

**அரிசி ஆலை வாடகைக்கு**

இயங்கிக் கொண்டிருக்கும் அரிசி ஆலை வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 401 3959

(57779)(4.3.7)

**காணி விற்பனைக்கு**

நவக்கிரி விளாத்தியடியில் 14 பரப்பு கல்லுக்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

(54784) (45.3)

தொடர்பு: 077 614 3278, 076 838 2614

**விற்பனைக்கு**

240 இங்கிலாந்து உழவு இயந்திரம் பெட்டி, ரில்லர் கலப்பை ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 324 9085

(51921) (4.3.7)

**கொழும்புத்துறையில் வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் 2 பரப்பு 11 ¼ குழியுடன் கூடிய சகலவசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

(55066) (12.3.7) தொடர்பு: 077 614 6434

**பெண் பணியாளர் தேவை**

எமது நிறுவனத்தில் வாடிக்கையாளர் சேவை அலுவலர் மற்றும் பொதியிடல் ஆகிய பணிகளுக்கு பெண்பிள்ளைகள் தேவை.

14.03.2015 சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரை நேரில் வரவும்.

(57774) (4.3.7) அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகரசபை கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1987, அச்சுவினி, 2 இல் செவ்வாய், 48 கிரக பாவம், அரசசேவையில் பணியாற்றும் மணமகளுக்கு நற்குணமுடைய உள்நாட்டில்/வெளிநாட்டில் நற்தொழில் செய்யும் மணமகன் தேவை. சைவபோசனம் விரும்பத்தக்கது.

தொடர்பு: 076 804 6450

(57755)(4.3.7)

**தேவை**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் சுற்றுலா விடுதிக்கு சிங்களம் தெரிந்தவரும் 50 வயதுக்கு மேற்பட்டவரும் வரவேற்பாளராக உடன் தேவை.

தொடர்பு: 021 221 1216, 075 048 4074

(57761) (4.3.7)

**மணப்பெண்கள் தேவை**

LONDON (PR) 38 வயது ENGINEER பாவம் 40 செவ்வாய்+சூரியன் சேர்க்கை ENGINEER 34 பாவம் 46 ENGINEER பாவம் 24 உள்ளூர் 34 வயது DOCTOR பாவம் 35 ENGINEER 36 வயது பாவம் 80 லிகிதர் 34 வயது பாவம் 24 ஆசிரியர் வயது 35 பாவம் 28 இற்கு செவ்+ சூரி சேர்க்கையுள்ள மணப்பெண்கள் மட்டும்.

(57644)(4.3.7) தொடர்பு: 077 211 5783

**காணி விற்பனைக்கு**

சுண்டுக்குளி, விதானையார் ஒழுங்கையில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (சற்சதுரக் காணி)

தொடர்பு: 077 320 3012

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ்.நகர் வேம்படி வீதி, முதலாம் குறுக்குத்தெருவில் 2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 320 3012 (57776) (4.3.7)

**மணமக்கள் தேவை**

- 83இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 85இல் பிறந்த 11இல் சூரியனும் செவ்வாயும் 45½ பாவமுடைய சிங்கப்பூரில் இஞ்சினியராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 47 பாவமுடைய MSc அரச சேவையர் சைவபோசன மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 23¼ பாவமுடைய வங்கியில் பணிபுரியும் சைவபோசன மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 82இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 21 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை.
- 81 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 43 பாவமுடைய BBA வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 86 இல் பிறந்த 7இல் செவ்வாய் 65 பாவமுடைய அரச பணிபுரியும் சைவபோசன மணமகளுக்கு சைவபோசன இஞ்சினியர், எக்கவுண்டண் மணமகன் தேவை.
- 81 இல் பிறந்த 8இல் செவ்வாய் 29 ¾ பாவமுடைய MSc IT லண்டன் பிரஜா உரிமைபெற்ற சைவபோசன மணமகனுக்கு பட்டதாரி சைவபோசன மணமகள் தேவை.
- 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 43 பாவமுடைய MSc BIO கெமிஸ்ரி முடித்த அரச நிறுவனத்தில் பணிபுரியும் சைவபோசன மணமகளுக்கு சைவபோசன இஞ்சினியர் மணமகன் தேவை.
- 87 இல் பிறந்த 8இல் செவ்வாய் 26 பாவமுடைய ஆஸ்திரேலியா எக்கவுண்டன் மணமகளுக்கு பட்டதாரி மண மகன் தேவை.
- 88 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 45 பாவமுடைய கனடா பிரஜா உரிமை, பெற்ற மணமகளுக்கு எக்கவுண்டன், இஞ்சினியர் மணமகன் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி முடமாவடி.
(57780) (45.3.7)
T.P. 077 607 0862


## காணிப்பயன்பாடு குறித்த வலி மேற்குப் பிரதேசசபையின் அறிவித்தல்

வலிமேற்கு பிரதேசசபைக்கு என சங்கானை பிரதான வீதியில் 38 ஆம் இலக்கத்தில் வசித்த ஆறுமுகம் நாகலிங்கம் மகள் பரிமளம் அறங்காவல் குழுவால் வலி மேற்கு பொதுமக்களுக்கு பயன் தரக்கூடிய பொது நலசேவைக்காக J/178 சங்கானை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ''மலைப்பை வளவு'' நிலப்பரப்பு 09 இனை எமக்கு நன்கொடை உறுதியாக முடிப்புசெய்துவழங்கியுள்ளனர்.

எனவே இக்காணியில் பொதுச்சேவைக்கு அல்லது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த விருப்பம் கொள்ளும் நபர் அல்லது நிறுவனம் வலிமேற்கு பிரதேச சபை தவிசாளருடன் தொடர்புகொள்ளவும்.

திருமதி நா.ஐங்கரன்,
தவிசாளர்,
வலிமேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.

(சி. 19894) (45.3.7)

## பங்குரு முருகன் இலவச மருத்துவ முகாம்

நீரிழிவு, இரத்தப்பரிசோதனை, பொது வைத்திய ஆலோசனை

அனுபவம் வாய்ந்த வைத்திய நிபுணர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு, இலவச மருந்தும் வழங்கப்படும்.

இடம்: பங்குரு கோயில் மண்டபம்
காலம்: 15.03.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8.00 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை.

அனைவரும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சு.புவனகுமார்
ஆலய அறங்காவலர்
சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை.

(சி/19893)(4.3.7)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக்கழகத்தின் உறுப்பினரும், மாவட்டச் செயலக புள்ளிவிபரக் கிளையில் புள்ளிவிபர உத்தியோகத்தராகக் கடமை யாற்றும் திருமதி கஜந்தினி தெய்வேந்திரன் அவர்களின் தந்தையாரான

**கதிர்காமநாதன் சிற்றம்பலம்**

அவர்கள் 12.03.2015 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத் தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங் களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(57760) (4.3.7) **யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக்கழகம்.**

## விழி நீர் சொரிகின்றோம்




எமது சங்கத்தின்
நீண்டகால உறுப்பினர்
திருமதி **மாலினிதேவி இராசரத்தினம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆன்மா இறையடியைச்
சென்று சேர பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

**பணியாளர்கள், அங்கத்தவர்கள்**
**நீர்வேலி ஸ்ரீ முருகன் மா.சி.க.கூ. சங்கம்.**

## 5 ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்

**அமரர் சவரிமுத்து சின்னத்துரை தேவசகாயம்**

மலர்வு 08.02.1923
மறைவு 14.03.2010



அன்பும் பண்பும் பாசமும் காட்டி
எமை வளர்த்து வையத்துள்
வானுயர வாழ வைத்த
அன்புப் பப்பாவே– உங்கள்
ஆத்மா இறையடியில் சாந்திபெற
என்றும் பிரார்த்திப்போம்.

அன்புடன் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(57765)(4.3.6)

## நீங்கா நினைவில் மூன்றாம் ஆண்டு

மலர்வு
**23.10.1952**



உதிர்வு
**15.02.2012**

திதி: தசமி
(14.03.2015)

**அமரர் கந்தையா சண்முகராசா**

(உரிமையாளர் – அம்பாள் ஸ்ரோர்ஸ், வீரமாகாளி அம்மன் கோயிலடி சண் சுப்பர் மாக்கற்)

அன்பு காட்டி அறிவு ஊட்டி
இன்பமுடன் நாம் வாழ
இனிய வழி காட்டிய எம் தெய்வமே!
ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்......
கலையாத நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவில்
34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

# உணவகங்களுக்கு வியாபார உரிமம் பெற்றிருத்தல் அவசியம்

### மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலய பங்குனித்திங்கள் திருவிழாக் கால கடைகளுக்கு

தென்மராட்சி,மார்ச் 14

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின் போது ஆலய வளாகத்தில் விற்பனையில் ஈடுபடும் ஐஸ்கிறீம் உட்பட உணவு கையாளும் நிலைய, உற்பத்தி நிலையம் அமைந்துள்ள பகுதியில் உள்ள உள்ளூராட்சி சபையில் இந்த வருடத்துக்குரிய வியாபார உரிமம் பெற்றிருப்பதுடன் அவற்றில் பணிபுரிவோர் தமது பகுதி சுகாதார மருத்து அதிகாரி பணிமனையில் செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கை வைத்திருக்க வேண்டும். இல்லாத விற்பனை நிலையங்களும் பணிபுரிவோரும் ஆலய வளாகத்தில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கடந்த 6 ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 16,23,30 ஏப்ரல் 6,13 ஆகிய திங்கட்கிழமைகளில் இடம் பெறவுள்ளது. இதனையொட்டிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்ற போது சுகாதாரப் பகுதியினரால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் பொங்கல் உற்சவத்துக்காக அதிகாலையிலேயே அடியார்கள் வருகை தருவதால் பொங்கல் நடைபெறும் தினங் களில் அதிகாலை 3மணி தொடக்கம் இரவு 10 மணி வரை பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று ஆலய தர்மகர்த்தாவால் வேண்டு கோள் விடுக்கப் பட்டது.

ஆலய சுகாதாரம் மற்றும் குடி தண்ணீர் தொடர்பான நடவடிக்கைகளை சாவகச்சேரி பிரதேச சபையினரும் உற்சவ காலத்தில் விசேட போக்குவரத்து சேவைகளை இலங்கை போக்குவரத்துச் சபையினரும் தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினரும் மேற்கொள்வதாக முடிவு செய்யப்பட்டது. திருட்டுக்களைத் தவிர்க்கும் பொருட்டு அடியார்கள் தங்க நகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுகோள் விடுவதாகவும் தீர்மானிக்கப் பட்டதாகதெரிவிக்கப்பட்டது. (வ–9)

# மோடியின் மன்னார் வருகையால் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும்

### நம்பிக்கை வெளியிடுகிறார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

மன்னார், மார்ச் 14

இலங்கைக்கு வருகைதந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று சனிக்கிழமை வன்னி மற்றும் யாழ்ப் பாணத்துக்கும் தனது பயணத்தை மேற்கொள்வது எமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் மக்கள் பிரச்சினையைத் தீர்க்கவும் வழி பிறக்குமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழி பிறப்பதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த வகையிலே தலைமன்னார் பியருக்குஅவர்வருகை தருகின்ற போது உண்மையிலே மன்னார் மாவட்ட மக்கள் அவரை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றனர். அந்த வகையில் எமது பிர தேசத்தில் இருக்கின்ற பிரச்சினைகளை அவர் நன்கு உணர்ந்து பல தீர்வுகளைத்தர வேண்டும் என்று எங்களுடைய சமூகம் எதிர்பார்க்கின்றது.

நாளைய தினம், மன்னார் மாவட்டத்துக்கு ஒரு சிறப்பு மிக்க நாளாக விளங்குவதால் எங்களுடைய மக்கள் இந்தப் பயணம் தொடர்பில் பெருமை யடைவது மட்டுமல்லாது எங்களுடைய மாவட்டம் உயர்வான நிலைக்கு செல்கின்ற அத்திபாரமாக இது அமையும் என்றும் நம்பு கின்றோம்.

குறிப்பாக எமது மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இந்திய அரசு 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை வழங்கியுள்ளது.அதற்கு நன்றி கூறுகிறோம். இன்னமும் வீடுகள் இல்லாது எங்களு டைய மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி வருகை தருகின்றபோது இன்னமும் கூடுதலான வீடுகளை வழங்க வேண்டும். வீடுகள் இல்லாத எங்களுடைய மக்களுக்கு தொடர்ச்சியாக வீடுகளை வழங்க முன்வர வேண்டும்.

எனவே எங்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளபடியால் மன்னார் மாவட்டம் இன்று மகிழ்ச்சி கொள்ளுகின்றநிலைக்குவந்துள்ளது. மன்னார் மாவட்டத்துக்கு பயணம் செய்து முதல் பெருமையைத் தட்டிச் சென்றவர் வணக்கத்துக்குரிய பாப்பரசர். அவருடைய புனித பாதம் எங்களுடைய மாவட்டத்தில் பட்டுள்ளது. அதேபோல வல்லரசாகப் போகும் இந்திய நாட்டின் பிரதமர்எமதுமாவட்டத்திற்குவருகை தரவுள்ளமை எமது மாவட்டத்துக்கு பெருமையை ஏற்படுத்துகின்றது. எனவே அவரை வரவேற்பதற்கு எமது மக்கள் தயாராக வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அவரது வருகைக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று மேலும் தெரிவித்தார். (வ–56)

# கிழக்குக்கு மோடி வருகை தராதது மக்களுக்கு கவலை

### யோகேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

மட்டக்களப்பு, மார்ச் 14

கிழக்கு மாகாணத்துக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருகைதராதது இந்த மாகாண மக்களுக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

பட்டிருப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. இதன் போது கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

“இந்தியப் பிரதமர் கிழக்கு மாகாணத்துக்கு வரவேண்டும். திருக்கோணேஸ்வரம், சம்பூர் ஆகிய பகுதிகளுக்கு வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இருந்த போதிலும், அவர் இங்கு வரவில்லை என்று கவலைப் படுவதில் அவசியமில்லை. அவர் வடமாகாணம் செல்வது எங்களுக்கு முக்கியமான தாக உள்ளது. 2009ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறலும் மனிதாபிமான செயற்பாட்டு மீறலுமே சர்வதேசத்தில் ஊன்றுகோலாகவுள்ளது. அவ்வாறான சம்பவங்கள் பெருவாரியாக வட மாகாணத்திலேயே இடம்பெற்றன. அங்கு செல்லும் அவர், சிலவேளைகளில் சில விடயங்களை தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இன்று நாங்கள் முற்றுமுழுதாக சுதந்திரம் பெற்றதாகக் கருத முடியாது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த சொத்து பாடசாலை விளை யாட்டு நிகழ்வு களுக்கு அதிதிகளாகச் செல்வது தான். அதற்கு மேலாக எதுவும் செய்யமு டியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. மேலும், கிழக்கு மாகாண சபையில் இரண்டு அமைச்சு களையும் பிரதித் தவிசாளரையும் பெற்றுள்ளோம். அவற்றை வைத்து எமது மக்களுக்கு ஏதாவது செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வோம்”– என்றார். (வ)

## அபராதம்

பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, குறித்த நபர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் பதிவு செய்யாத நிலையிலும் அதற்கான வாகனவரி காப்புறுதி போன்ற ஆவணங்கள் இல்லாத நிலையிலும் வாகனத்தைச் செலுத்தி வந்ததாக பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். வழக்கை விசாரித்த [illegible]வான் இந்த நபருக்கு 8 ஆயிரத்து500ரூபாஅபராதம்விதித்தார். மேலும், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்திய நால்வருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

## வவுனியாவில் சிலுவைப்பாதை திருப்பலிகள்

வவுனியா, மார்ச் 14

வவுனியா புனித அந்தோனியார் ஆலயப் பங்கு மக்கள் நடத்தும் வருடாந்த சிறப்புச் சிலுவைப் பாதை எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்தச் சிலுவைப் பாதை அன்று மாலை 5 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி ஹொரவப் பொத்தான வீதி வழியாகச் சென்று தெற்கிலுப்பைக்குளம் புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலியுடன் நிறைவடையும்.

♦ ♦ ♦

வவுனியா கோமரசன்குளம் கல்வாரி திருத்தலப், பாரம்பரியத் திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று காலை 7 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு முடிவில் திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்படும். அன்று பிற்பகல் 3 மணிக்கு நற்கருணை ஆசீர்வாதமும் அதனைத் தொடர்ந்து சிலுவைப் பாதையும் முடிவில் கல்வாரி உச்சியில் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

## விபத்தில் சிக்கி இளைஞன் காயம்

வலி.வடக்கு மார்ச் 14

மல்லாகம் சந்தையில் பொருள்களை வாங்கிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வீடு செல்ல வீதிக்கு வந்தவரை மோதிய மோட்டார் சைக்கிள் நில்லாது தப்பிச் சென்றுள்ளது. அவர் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் அளவெட்டியைச் சேர்ந்த சொர்ணலிங்கம் மதியழகன் (வயது–19) என்பவரே படுகாயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவராவார். சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்கள். (வ–86)


**Sun Travels பணிநிலை வேண்டுகோள்**

இந்திய விசா விண்ணப்பப்படிவம் இலவசமாக நிரப்பி பெற்றுக்கொள்ள, சகல நாட்டிற்குமான விமான பயணச் சீட்டுகள், சகல நாடுகளுக்குமான விசா முன் ஏற்பா டுகள் என்பன செய்து தரப்படும்.

அத்துடன் மேற்படி நிலையத்தில் பணிபுரிவதற்கு வேலையாள்கள் தேவை. (ரைப்பிங் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்பு: 077 225 9030

கோயில் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். (57749)(4.3.7)



**அண்ணா உற்பத்திப் பொருள்கள் மலிவு விலையில்**

தென்மராட்சி வலயக்கல்வி பாடசாலைகளால் நேற்றும் இன்றும் (13, 14/03.2015) சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடத்தப்படும் வர்த்தகக் கண்காட்சியில் பொதி செய்யப்பட்ட அண்ணா உற்பத்திப் பொருள்களான அரிசிமா, கோப்பி, ஜீவாகாரம், நூடில்ஸ், குரக்கன்மா மற்றும் அனைத்து அண்ணா உற்பத்திப் பொருள்களையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். (சி/19884) (4.3.7)

**அண்ணா தொழிலகம், இணுவில்.**


**செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபை**

பதிவு இல. HA/4/JA/266

393/30, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**பொதுக்கூட்ட அறிவித்தல்**

காலம்: 29.03.2015 ஞாயிறு மு.ப. 9.30 மணி

இடம்: செம்மணி இந்து மயான மண்டபம்

தலைவர்: சி.இலட்சுமிகாந்தன்

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| 01.தேவாரம் | 02.பிரேரணைகள் அறிக்கைகள் |
| 03.தலைமையுரை | 04.புதிய நிர்வாகிகள் தெரிவு |
| 05.பிறவிடயங்கள் | 06.நன்றியுரை |

அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

| | | |
|---|---|---|
| சி.இலட்சுமிகாந்தன் | மு.யோகராசா | இ.தணிகைநாதன் |
| தலைவர். | பொருளாளர். | செயலாளர். |

(57742)(4.3.7)

**JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING-2015**

**NOTICE OF MEETING**

Notice is here by given that the **Annual General Meeting (AGM)** of the **Jaffna Medical Association** will be held on Saturday, **23rd May 2015 at 11.00 pm at the Lecture hall of Nursing Training School, Jaffna** for the following Purposes.

01. To Receive and consider the Annual Report of the Committee of Management on the affairs of the Company and the Statement of Accounts for the year ended 31st December 2014 and the Report of the Auditors thereon.
02. To Consider any resolutions proposed by members and Committee where due Notice has been given
03. To Consider any other Matters where due notice has been given
04. To Elect the Committee of Management for year 2015/16
05. To Appoint the Auditors of the Association and to authorize the Committee of management todetermine their remuneration.

**Members are requested to propose any resolution on or before 21 st of march 2015 in order to in co-operate in the agenda of the AGM.**

By order of the Committee of management.

**Hony.Secretary.** 13th March 2015. (57766)(4.3.7)


Promote with the wristband



Make it
❖ Colorful
❖ Decorative
❖ Memorable

Ideal for
❖ Business promotion
Eg: institutions, textiles, GYM
❖ Sports club
❖ Big get-together
❖ Memorable function

Order for minimum 200
200 Orders – 150/=
300 Orders – 120/=
500 Or Above – 100/=
Delivery with 10 working days

Call us now 0779459487

VSS Innovations
Navalar Education Center
Point Pedro Road, Anaipanthy, Jaffna



**BIT Semester 6, 4, 2 மற்றும் Project வகுப்புகள்**

- 2007 இல் இருந்து Supervisor(60Projects)
- யாழில் 25 இற்கு மேற்பட்ட Software
- Windows and Web based Projects
- BIT மற்றும் ஏனைய IT Group classes
- 2014ல் VIVA சென்ற 13 பேர் Pass ஏனையோர் திருத்திய project

vb.net, php Java, C++ languages...

இல:28/23, மணல்தரை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS) 0779785796**

BIT Semester 4 & 6 start on coming Saturday at 8.30am 14.03.2015

இதுவரை BIT Complete செய்தோர் (under my Supervision, Subject and Project classes)

P.Asoktha, J.Satheechan, P.Kobikrishna, N.Vipushany, R.Naresh, M.Kohulan, T.Logini, N.Sarathadevi, A.Thirumakal, Liyoni xavier, S.Vinotha, S.Gobikrishna, B.Suhirtha, V.jacitha, T.Sinthuja, K.Kalaivani, N.Aingaresan, R.Thiruchchenthooran, S.Mathusoothan, S.Balananthini, N.Kajan, T.Subaharan, T.Kowshika, S.Vasuthevan, P.Senthuja, S.Priyanka, .....( more than 36 students )

2014 இல் VIVA இல் சித்தி பெற்ற 13 பேரில் BIT பட்டம் பெறும் மாணவர்களுடன் இதுவரை BIT பட்டம் பெறுவோர் எண்ணிக்கை 36 இற்கும் மேற்பட்டோர். BIT Semester 2 starts on 21.03.2015 second Saturday. Call the above number to reserve your BIT and Project Classes

**Project and BIT degree Results of 2015 Under my Supervision and Subject classes**

1. B. Harishkumar - BIT 2nd Upper, Project : A
2. M. Anushanthi - BIT, Project : A-
3. N. Kajan - BIT , Project : A-
4. S.Sasitharan - BIT, Project : B+
5. T.Kuganithy - BIT, Project : B
6. R. Manivannan - BIT, Project: B
7. S. Janani - BIT, Project : C+
8. V. Tharsinath - BIT, Project: C+
9. S. Arjun - BIT, Project : B
10. A.Abitha - BIT, Project: C
11. S. Karthiha - Project : B+
12. K.Premasangar - Project : C
13. P. Sanjeev - Project : C
14. S. Priyatharsini - Project : C+

**Congratulations to you all my Students!!!**


குருசடித்தீவு

## தூய அந்தோனியார் ஆலயத் திருவிழா



திருவிழாத் திருப்பலி நாளை (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 07 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

பக்தர்களுக்கான இலவச படகுச்சேவை பண்ணை வீதியிலிருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. புனிதரின் ஆசீர் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தை, பங்குமக்கள், நாவாந்துறை. (57702)(45.7.3)

TEQOSL | ஸ்ரீ லங்கா பத்திரிகை நிறுவனம் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் Sri Lanka Press Institute

## அதியுயர் ஊடக விருதுகள் 2014

**சிறந்த ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் 16 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி**

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களை அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி குாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டுச் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்குக் கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ.சிரிவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96.பேனார்ட் சொய்சா மாவத்தை (கிருல வீதி), கொழும்பு - 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 10 ஏப்ரல் 2015 ஆகும்**

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை சிந்தாமணி



மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிந்தாமணி 11.03.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தனம் (ஆசிரியர்), அருந்ததி, சிதம்பரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புண்ணியவதி (பிரான்ஸ்), சிவகாமசுந்தரி (கனடா), இசைஞானவதி (உரும்பிராய்) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற கந்தையா (பிரான்ஸ்), சிவக்கொழுந்து (கனடா), காலஞ்சென்ற பூபாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும், புஸ்பமலர் (கனடா), புஸ்பவவி (கனடா), புஸ்பகினி (பாரிஸ்), புஸ்பமதி (கனடா), ஸ்ரீகந்தராசா (கனடா), தேவராணி (கனடா), இந்திராணி(கனடா), சக்திதாசன் (கனடா), சந்திரதாசன் (ஜேர்மனி), பிறேமதாசன் (கனடா), விசயதாசன் (கனடா), வசீகரதாசன் (கனடா), கண்ணதாசன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.
T.P :077 923 4593, 021 320 2021

தகவல்:
பூ.இசைஞானவதி
(மகள்-பேபி)

(57788)(4.3.7)

### வேதலிங்கம் தம்பித்துரை

(ஓய்வுபெற்ற இ.போ.ச. பரிசோதகர்)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேதலிங்கம் தம்பித்துரை 11.03.2015 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், வள்ளியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிமுத்து - ஆசைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தர்மகுலசிங்கம் (பிரான்ஸ்), இந்திரதாஸ் (பிரான்ஸ்), சந்திரதாஸ், ஜெயதாஸ் (பிரான்ஸ்), மனோஜா (கனடா), சிவதாஸ் (லண்டன்), செல்வதாஸ் (கனடா), விஜயதாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவராணி, ராஜினிதேவி, சேந்தநாயகி, சிவலலிதா, குலதாஸ், ஷர்மிலா, சாந்தி, அனுஜா ஆகியோரின் அன்பு மாமனும், பிரசாந், றோசிதா, பிருந்தா, தர்சிகா, டனீசன், சஜன், துஷாந், சங்கீத், சதீஸ், விதுர்ஷன், டிலான், டவித், சதீஸ், றஜீன், நரேஸ், ஜனித், சியாம், அஸ்வின், சஞ்சை, சஸி, ஸ்ரேயா, சிவானி, கிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் விபிஷாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல் :
த.சந்திரதாஸ்
(மகன்)

(51922) (45.3.7)

### திருமதி லூர்த்தம்மா (ராணி) இளையதம்பி



அன்னை மடியில்
19.05.1930

ஆண்டவன் அடியில்
12.03.2015

யாழ்.டேவிற் றோட்டைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட லூர்த்தம்மா இளையதம்பி 12.03.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை- மாகிறேற் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகன்- வள்ளி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இளையதம்பி (வனவிலங்கு அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், தர்மலோஜினி (ஜேர்மனி), இமாக்குலெற் (குஞ்சு-பிரான்ஸ்), குமாரகுலசிங்கம் (குமார் -ஜேர்மனி), ஜெயமலர் (பவா-பிரான்ஸ்), யோசப்பின் (ஜோதி- இத்தாலி), தர்மகுலசிங்கம் (ஜோர்ச் தம்பி-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான யோண், பூமணி, செபஸ்ரியாம்பிள்ளை, சவரியம்மா மற்றும் றீற்றா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரெட்ணம் (ஜேர்மனி), அருள் (பிரான்ஸ்), டொறிஸ் (ஜேர்மனி), யேசுதாசன் (பிரான்ஸ்), அமலதாஸ் (இத்தாலி), றெமின்ரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், றொனால்ட், அகல்யா, றொசானி, ஜக்சன், றொன்சன், நிசான், தயா, நிரோஷன், நிக்சன், ஜெனிக், றொசல், வேர்ஜினி, அவுரோரா, றெபேக்கா, றொட்னி, ஜெரேமி, நேகேமி, நோஏமி, சௌமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெனினா, ஜெனிசா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (14.03.2015) சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (14.03.2015) சனிக்கிழமை யாழ்.மரியன்னை பேராலயத்தில் காலை 6.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P:குஞ்சு (0033146560612)
பவா (0033146592006)
தம்பி (0033615530337)

தகவல்:
குடும்பத்தினர்.

(57787) (4.3.7)

## கிளி., முல்லை மாவட்ட கலைஞர் ஒன்றியம் ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கலைகளை மேம்படுத்தவும், கலைஞர்களை ஊக்குவிக்கவும் இரு மாவட்டக்கலைஞர்கள் இணைந்த ஒருமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக வன்னிப் பகுதியில் இரு மாவட்டங்கள் இணைந்த மன்றம் எதுவுமே இருக்கவில்லை. இந்த மன்றத்தின் ஆரம்ப நிகழ்வானது கடந்த புதன்கிழமை இருட்டுமடு முன்பள்ளியில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச கலாசார உத்தியோகத்தர் எஸ்.பிரதீபன் இதில் கலந்து கொண்டார். கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டு மன்றம் ஒன்றின் தேவையை உணர்த்தியமைக்கு அமைவாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கலைஞர் மன்றத் தலைவராக எஸ்.பி. பாக்கியராஜ், செயலாளராக சி.சிவரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பொருளாளர், மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (வ)

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை கனகராசா

(ஓய்வுபெற்ற உதவிக் கணக்காளர் - துறைமுக அதிகார சபை, திருகோணமலை)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்தவரும், உவர்மலை, திருகோணமலையில் வசித்தவருமான சங்கரப்பிள்ளை கனகராசா நேற்று (13.03.2015) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், சரவணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகராசா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஷ்பராணியின் அன்புக் கணவரும், சிவகுமாரன் (முகாமையாளர்- தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்), வைத்திய கலாநிதி நந்தகுமாரன் (பிரதிப்பணிப்பாளர் யாழ். போதனா வைத்தியசாலை ), விஜிதா (ஆசிரியர் - தி/கலைமகள் மகா வித்தியாலயம், அன்புவழிபுரம் - திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவரூபி, சதானந்தி (தாதிய போதனாசிரியர் - யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி), ஸ்ரீஸ்கந்தகுமார் (வர்த்தகர்- திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனும், முத்தம்மா, தற்பராதேவி (கனடா), தவராசா (ஜேர்மனி), செல்வராசா, இந்திராதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்), ரேணுகாதேவி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்- சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன் (கிளியர்), தம்பிராசா மற்றும் மனோரஞ்சிதம் (ஜேர்மனி), தெய்வநாயகி, ஜெயசிங்கம் (ஓய்வுபெற்ற சமநல உத்தியோகத்தர்), கந்தசாமி (கநிஷா கனிமர உற்பத்தி நிலையம், மட்டுவில்),கனகராசா (மன்னார்), வரதராசா (கனடா), யோகராணி (வவுனியா), செல்வராணி (ஆசிரியர் - மன்/கௌரிஅம்பாள் அ.த.க.பாடசாலை, மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிஷோர் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), மதுமிதா (மாணவி - யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரணவன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், இணுவிலைச் சேர்ந்த சிவலிங்கம் சிவமலர், நவாலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் பாலமனோன்மணி, திருகோணமலையைச் சேர்ந்த காலஞ்சென்ற மாணிக்கசபாபதி மற்றும் மாதுமையம்மாள் ஆகியோரின் சம்மந்தியும், காலஞ்சென்ற மகாலெட்சுமி மற்றும் புஸ்பமலர், அருளானந்தன், யோகராசா ஆகியோ ரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ''அருணோதயம்'' மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி என்னும் முகவரியில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மட்டுவில் நேரியதூவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''அருணோதயம்''
அமெரிக்கன் மிஷன் த.க. பாடசாலை முன்பாக,
இலுப்பையடி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
077 757 9321, 077 367 0699

தகவல் :
குடும்பத்தினர்.

(57785) (45.3.7)

### திருமதி புவனேஸ்வரி (புவனேஸ் அக்கா) குப்புசாமி



வவுனியா, கே பி கே மற்றும் ஜே பிகே நிறுவனங்களின் நிறுவனர் ரவி-கே. பிரபாகரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி புவனேஸ்வரி குப்புசாமி அவர்கள் பெப்ரவரி 27 ஆம் திகதி வெள்ளியன்று லண்டனில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மருதப்பு -சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குப்புசாமி அவர்களின் அன்பு மனைவியும், விமலேஸ்வரி (மலர்), பிரபாகரன் (ரவி), சிவசோதி (தயா), கிருபாகரன் (கிருபா), சுதாகரன் (சுதா), விமலலோஜினி (லோஜி), லகுமீகரன் (லகுமி), சிவகரன் (கரன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தபவன், சிவனேஸ்வரி, காலஞ்சென்ற பவளமலர், கோணேஸ்வரி (ஈஷா), ஜிக்கினா, பாபு, அபிராமி, கெங்கா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராகவி, வைஷ்ணவி, ஜனனி, ஜதுர்சன், சகானா, சரண்யா, யசாந், அஜந், சுஜினா, ஜசீனா, சுஜானா, துஷானா, ஜனுக்சா, டிலுக்ஷன், றியா, லியா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியா, குடியிருப்பில் உள்ள அவருடைய இல்லத்திற்குக் கொண்டுவரப்பட்டு, நாளை (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலை முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகளின் பின்னர் பூந்தோட்டம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரவி (கே.பிரபாகரன்)
32/2, குடியிருப்பு, வவுனியா.
தொலைபேசி இல.024 222 2570, 077 636 6325

(56228) (4.3.7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

எமது தேசிய உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் வன்னி தமிழ்த் தேசிய பாதுகாப்புப் பேரவையால் கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுகிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியாசுவர்க்கா விடுதியில் இடம்பெறவுள்ளது.

எமது இளைஞர்கள் மத்தியில் பரவிவரும் சமுதாயச் சீர்கேடு தொடர்பாகவும் வன்னி மண் ணில் பிள்ளைகளின் கல்வி பின்தங்கி இருப்பதால் அதை முன்னேற்றுவது தொடர்பாகவும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (வ-402)

## மெய்வன்மைப் போட்டி

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ-426)

## வவுனியாவில் மோ. சைக்கிள் திருட்டு

வவுனியா, மார்ச் 14

வவுனியா, குருமன்காடு ரயில் பாதைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக தம்மிடம் முறைப் பாடு செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மோட்டார் சைக்கிளை ரயில் பாதைக்கு அருகில் நிறுத்திவிட்டுச் சென்றவர் மீண்டும் வந்து பார்த்த போது அவ்விடத்தில் மோட்டார் சைக்கிளை காணவில்லை. சூட்சுமமான முறையில் பூட்டை உடைத்து குறித்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

அதனை அடுத்து நேற்று முன்தினம் இது தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் தம்மிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாக வும் இது தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் வவு னியா பொலிஸார் மேலும் தெரிவித்த னர். (வ- 402)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 14

யாழ்.வணிகர் கழகத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர் வாக சபைத் தெரிவு கடந்த 7 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

இதன் தலைவராக இ.ஜெய சேகரன், உபதலைவராக ரி.பர மேஸ்வரன், செயலாளராக இ.ஜனக்குமார், உப செயலா ளராக ச.சிவகுமாரன், பொருளாளராக இ.ஜெயராசா, பணிப் பாளர்களாக சி.கேசவன், த.சற் குணராசா, எஸ்.மணிவர்ணன், த.குணசிங்கம், எஸ்.சிவ லோகேசன், எஸ்.தினேஷன், எ.நிக்சன், ந.ஜெயமோகன், செ.சுதர்சன், எஸ்.சிவதாசன், த.கந்தசாமி, கு.கங்கைவேணியன், வே.திருச்செல்வம், கே.ஜெயந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ-14)

# பேஸ்புக்

## மாணவர்களின் கடவுச்சொற்களை பறிக்கும் திட்டம்

இன்று வயது வேறுபாடு இன்றி பேஸ்புக் வலைத்தளம் அனைவரையும் தன்பக்கம் கட்டிப்போட்டுள்ளது.

இதற்கு மாணவர்களும் விதிவிலக்கல்ல. மாணவர்களின் கற்றல் திறனை பாதிக்கும் பேஸ்புக் பாவனையைக் கட்டுப்படுத்த அவர்களின் கடவுச்சொற்களை கட்டாயப்படுத்தி வாங்கும் சம்பவங்கள் அமெரிக்காவில் இடம்பெற்றுவருகின்றன.

இதன்படி சமூக வலைத்தள பாவனையின் கட்டுக்கோப்புக்களை மீறிய மாணவர்களின் கடவுச்சொற்கள் இந்த மாதம் முதலாம் திகதி முதல் இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த நடைமுறை விரைவில் ஏனைய நாடுகளுக்கும் பரவலாம் என எதிர் பார்க்கப்பட்டுகிறது.




# மிகப்பெரிய அப்பிள் ஸ்ரோர் சீனாவில் நிர்மாணம்

சீனச் சந்தையில் தனது காலை ஆழமாக ஊன்ற நினைக்கும் அப்பிள் நிறுவனம் ஆசியாவிலேயே மிகப்பெரிய அப்பிள் ஸ்ரோரினை அங்கு நிறுவவுள்ளது.

இதன்படி எதிர்வரும் சில மாதங்களில் Hangzhou நகரத்தில் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதனூடாக சீனாவில் தயாராகும் Xiaomi ஸ்மார்ட் கைபேசி மற்றும் கொரியன் நிறுவனமான சம்சுங் என்பவற்றின் கைபேசிகளுக்கு போட்டியாக தனது கைபேசி விற்பனைகளுக்கான சந்தையைப் பிடிக்க காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நீரை அகத்துறுஞ்சாத உலோகத்தாள் கண்டுபிடிப்பு

நீரை அகத்துறுஞ்சாத தொழில்நுட்பம் தற்போது காணப்படுகின்ற போதிலும், அதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தொழில்நுட்பத்தைக் கொண்ட நீரை அகத்துறுஞ்சாத புதிய உலோகத்தாள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்போது நொன் ஸ்டிக் கெமிக்கல் கோட்டிங் தொழில்நுட்பமே பயன்படுத்தப்படுகின்றது. இதில் நீர் விழுந்த போதும் ஒட்டிக்கொள்ளாது. எனினும் தங்கியிருக்கும் தன்மை கொண்டது. ஆனால், புதிய தொழில்நுட்பத்தில் விழும் நீர்த் துளியானது துள்ளித் துள்ளியாய் பாய்ந்து அந்த இடத்தில் இருந்து அகன்றுவிடும்.

இவற்றை கார்களிலும், சமையல் பாத்திரங்களிலும் பயன்படுத்த முடியும் என Rochester பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளரான Chunlei Guo என்பவர் தெரிவித்துள்ளார்.




பதிவுக்கு முந்துங்கள்!

நாளைய உதயனுடன்

செவ்வாய் புதன் ஞாயிறு தினங்களில்

மீண்டும் கல்விச்சுடர்

தரம் 5 மாதிரி வினாத்தாள்

(கல்வித்துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டவை. முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியவை.)

கேள்வித் தாளில் வரும் முத்திரையை சேகரிக்கத் தவறாதீர்கள். தவறினால் வருந்துவீர்கள்.....!

உதயன்

## திப்பு சுல்தானின் ஆயுதங்கள் வருகின்றன ஏலத்துக்கு

லண்டன்,மார்ச் 14



மைசூர்ப் புலி என புனைப்பெயரில் அழைக்கப்பட்டவரும் சுதந்திரப் போராட்டமன்னர்களில் ஒருவருமான திப்பு சுல்தான் பயன்படுத்திய பொருள்கள் மற்றும் ஆயுதங்கள் ஏலத்துக்கு விடப்படவுள்ளன. கர்நாடக மாநிலம் மைசூரில் ஆட்சி செலுத்தி வந்த திப்பு சுல்தானின் ஆயுதங்கள் மற்றும் பொருள்கள் லண்டனில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த பொருள்கள் அனைத்தும், இந்திய பொருள்களை ஏலம்விடும் நிறுவனம் மூலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஏலத்துக்கு விடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## இந்தியாவில் பன்றிக்காய்ச்சலால் அதிகரித்துவரும் உயிரிழப்புகள்

### இதுவரை 1,482 பேர் சாவு

டில்லி,மார்ச் 14

இந்தியா முழுவதும் பன்றிக் காய்ச்சலால் இந்த வருடம் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 500 ஐ நெருங்கியுள்ளது. சுமார் 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பன்றிக் காய்ச்சலால் தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. பன்றிக்காய்ச்சல் தற்போது இந்தியா முழுவதும் வேகமாகப் பரவி வருகிறது. குளிர்காலம் முடியும் தறுவாயிலும் இந்தக் காய்ச்சலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. காய்ச்சலைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனாலும், பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே தான் செல்கிறது. நாடு முழுவதும் இந்த வருடத் தொடக்கத்தில் இருந்து பன்றிக் காய்ச்சலால் ஆயிரத்து 482 பேர் உயிரிழந்துள்ளனர். 26 ஆயிரத்து 455 பேர் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (14)

# மோடியின் மொறிஷியஸ் நாட்டுப் பயணம்

## இந்தியத் தயாரிப்பு ரோந்துக் கப்பலும் கையளிப்பு

போர்ட் லூயிஸ், மார்ச் 14

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி செஷல்ஸ், மொறிஷியஸ், இலங்கை ஆகிய 3 நாடுகளுக்கு 5 நாள் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்துள்ளார். நேற்று முன்தினம் செஷல்ஸ் தீவில் இருந்து மொறிஷியஸ் நாட்டுக்குச் சென்ற பிரதமர் மோடியை போர்ட் லூயிஸ் நகர் விமான நிலையத்தில் வைத்து மொறிஷியஸ் பிரதமர் அனிருத் ஜெகன்னாத் வரவேற்றார்.

பிரதமர் மோடிக்கு இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையுடன் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பின்னர் மொறிஷியஸ் ஜனாதிபதி ராஜ்கேஸ்வர் பூர்யாகை, பிரதமர் அனிருத் ஆகியோரையும் மோடி சந்தித்துப் பேசினார். இதன் போது இரு நாடுகளுக்கும் இடையே 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

அத்துடன் மொறிஷியஸ் நாட்டுக்கு ரூ. 3 ஆயிரம் கோடி கடன் வழங்குவதாகவும், மொறிஷியஸ் 2 ஆவது



சைபர் நகர் அமைக்கவும் உதவுவதாகவும் மோடி உறுதிமொழி அளித்தார்.

இதேவேளை மொறிஷியஸ் நாட்டின் போர்ட் லூயிஸ் துறைமுகத்தில் இந்தியா சார்பில் உருவாக்கப்பட்ட 'பராகுடா' ரோந்துக் கப்பலின் செயல்பாட்டையும் ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் மொறிஷியஸ் நாட்டின் பிரசித்தி பெற்ற சிவன் ஆலயமான கங்காதால்கோவிலில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாட்டிலும் மோடி பங்கேற்றார். (14)

## ஈரான் அணுசக்தி விவகாரம் ஒபாமா கடும் கண்டனம்

வொஷிங்டன்,மார்ச் 14



அணுசக்தி விவகாரம் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈரான் அரசுக்கு கடிதம் எழுதியது அரசின் முயற்சியை குலைக்கும் செயல் என்று ஜனாதிபதி ஒபாமா குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் மத அடிப்படைவாதிகளுடன் இயல்புக்கு மாறான கூட்டணியை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைத்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் ஈரான் அணுசக்தி தொடர்பான ஒப்பந்தம் அமைக்கும் அமெரிக்காவின் முயற்சியைத் தடுத்துவிட முடியாது என்றும் ஒபாமா குறிப்பிட்டுள்ளார். குடியரசுக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஈரான் அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அணுசக்தி தொடர்பாக அமெரிக்காவோடு செய்துகொள்ளப்படும் ஒப்பந்தத்துக்கு நாடாளுமன்ற அனுமதியைப் பெற முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (14)


## 'ஜெயா' வுக்காக தன்னைத் தானே சிலுவையில் அறைந்த நபர்

சென்னை,மார்ச் 14

ஜெயலலிதா மீண்டும் முதல்வர் ஆகவேண்டும் எனத் தன்னைத்தானே சிலுவையில் அறைந்து கொண்ட ஹுசைனி என்பவர், தான் விமானத்தைக் கடத்தி ஜெயலலிதாவை விடுவிக்கத் திட்டம் வைத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா, சொத்து குவிப்பு வழக்கில் விடுதலையாக வேண்டும் என்று தன்னை தானே சிலுவையில் அறைந்து கொண்ட கராத்தே வீரர் ஹுசைனி வார இதழ் ஒன்றுக்கு இவ்வாறு பேட்டி அளித்துள்ளார்.

அந்தப் பேட்டியில், ஜெயலலிதாவைக் கைது செய்த போது நான் மதுரையில் இருந்தேன். இதற்குக் காரணமானவர்களை ஏதாவது செய்ய வேண்டும் என்று வெறியோடு இருந்தேன். விமானத்தைக் கடத்தி அவரை விடுவிக்க வேண்டும் என்றும் திட்டம் வைத்திருந்தேன். ஆனால், எனது மனைவி என்னை மாற்றி விட்டார். இல்லாவிட்டால் ஜெயலலிதாவின் இந்த நிலைமைக்குக்காரணமான கருணாநிதியையோ, சுப்பிரமணிய சுவாமியையோ ஏதாவது செய்திருப்பேன் எனவும் தெரிவித்துள்ளார். (14)



## அணு மின் நிலைய திட்டத்துக்கு சீனா அனுமதி

பெய்ஜிங்,மார்ச் 14

அணு மின் நிலையத் திட்டத்துக்கு சீனா ஒப்புதல் அளித்துள்ளது. லியானிங் மாகாணத்தில் உள்ள அணு மின் நிலைய வளாகத்தில் மேலும் இரண்டு அணு உலைகளை அமைக்க சீன அமைச்சரவையின் திட்டமிடல் முகாமை ஒப்புதல் அளித்துள்ளது.


உலகிலேயே அதிக அளவு மின்சாரத்தைப் பயன்படுத்தும் நாடாகச் சீனா திகழ்கிறது. 2011 இல் ஜப்பான் புகுஷிமா அணுமின் நிலைய விபத்துச் சம்பவத்தை அடுத்து அணு மின் நிலையங்களை அமைப்பதற்கான ஒப்புதல் வழங்குவதை சீனா நிறுத்தி வைத்தது. இந்த நிலையில் கடந்த வருடம் இந்தத்தடை விலக்கிக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)

## புதிய தீவு விரைவில் மறையலாம் விஞ்ஞானிகள்; தகவல்

பசிபிக் பெருங்கடலில் எரிமலை வெடித்துச் சிதறியதில் புதிய தீவு ஒன்று உருவாகியுள்ளது, இது விரைவில் மறைந்து போகலாம் என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சிபிக் பெருங்கடலில் உள்ள மிகப் பெரிய தீவு நாடான டோங்கோவில் கடலுக்கு அடியில் எரிமலை வெடித்து இந்தப் புதிய தீவு உருவாகியுள்ளது.

நிகோபோலோவிற்கு வடமேற்கே எரிமலை வெடித்து கடந்த ஜனவரி மாதம் பெரும் புகைவெளியாகியது. எரிமலை வெடித்துச் சிதறிய போதே இந்தத் தீவு உருவாகத் தொடங்கியது. புதிய தீவானது கடல் மட்டத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் உயரத்தில் உள்ளது என்றும், 1.8 கிலோ மீற்றர் நீளமும், 1.5 கிலோ மீற்றர் அகலத்திலும் இந்தப் புதிய தீவு உள்ளது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.




நிகோபோலோவில் இருந்து சுமார் 65 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தீவுக்குச் சென்ற 3 பேர்களால் ஒளிப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீவானது தற்போது கறுப்பு நிறத்தில் காட்சி அளிக்கிறது. புதியதாக உருவாகியுள்ள இந்தத் தீவு சில மாதங்களில் மறைந்துவிடும், அதுவரையில் மட்டும் இயற்கையின் படைப்பில் உருவான தீவு சுற்றுலாத் தளமாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (14)

## அமெரிக்காவில் ஒன்று கூடும் வர்த்தகர்கள்

வொஷிங்டன், மார்ச 14

அமெரிக்காவில் நடைபெற இருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரிய வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களின் மாநாட்டுக்கு இரண்டு இந்திய வர்த்தகர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் முதலீடு செய்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விதமாக 'அமெரிக்காவை தேர்ந்தெடுங்கள்' எனும் மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்கு தெரிவு செய்யப்பட்ட 20 நிறு வனங்களின் தலைவர்களுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அவர்களில் இருவர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மாநாட்டில் கலந்து கொள்ளும் 20 பேரில் கூகுள், நிஸான் மோட்டார் நிறுவனங்களின் இயக்குநர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். (14)

# ஒபாமாவுக்கு கூடுதல் இராணுவ அதிகாரம் தேவை




வொஷிங்டன்,மார்ச் 14

இஸ்லாமிய தேசம் (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்குக் கூடுதல் இராணுவ அதிகாரம் அளிக்குமாறு, அந்த நாட்டு நாடாளுமன்றத்திடம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி கோரியுள்ளார்.

நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்றால் தான் அமெரிக்காவின் வலிமை உச்சத்தை அடையும். அமெரிக்காவுக்கு எதிராகச் சவால் விடும் கொலைகாரர்களும், மூர்க்கர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தின் (ஐ.எஸ்.) இலட்சியத்தை அடைய நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. தங்களுக்கு எதிரான கருத்துகளையுடையவர்கள் சாக வேண்டும், அல்லது தங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற ஒரே கொள்கையுடன் ஐ.எஸ். பயங்கரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். உலகம் முழுவதும் பயங்கரவாதச் செயல்களைப் பரவச்செய்வதே அவர்களது நோக்கம்.

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஒபாமாவுக்கு முழு அதிகாரம் அளிக்கும் கோரிக்கையை நாடாளுமன்றம் ஆதரிக்க வேண்டும். ஐ.எஸ். மீது தாக்குதல் தொடுக்க ஜனாதிபதிக்கு ஏற்கெனவே சட்டபூர்வ அதிகாரம் உள்ளது. எனினும், அந்த அதிகாரத்தை குழப்பமற்றதாக ஆக்க புதிய பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.(14)

# எகிப்து பிரமிட்களை அழிக்கத் திட்டம்




கெய்ரோ,மார்ச் 14

உலக அதிசயங்களில் ஒன்றாக எகிப்து பிரமிட்கள் விளங்கி வருகிறது. இந்தப் பிரமிட்களை அழிக்க ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு குவைத்தைச் சேர்ந்த இஸ்லாமிய மத போதகர் ஒருவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு அவற்றை அழிக்கத் தைரியம் இல்லை. அதற்காக தற்போது உள்ள முஸ்லிம்கள் இதை பின்பற்ற வேண்டும் என்பது இல்லை. உண்மையில் முகமது நபியை பின்பற்றிய ஆரம்பகால முஸ்லிம்கள் எகிப்திய பாரோ நினைவுச் சின்னங்களை அழிக்க முடியவில்லை. ஆனால் இப்போது செய்ய வேண்டும் என்று இஸ்லாமிய மத போதகர் எகிப்திய பத்திரிகை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இது போன்ற கட்டடங்களை அழிப்பது மதக்கடமையாகும் என ஐ.எஸ். இயக்கத் தலைவர் அபு பக்கர் அல்–பஹ்தாதிக்கு மத போதகர் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த மாதம் ஈராக்கின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான மொசூல் நகரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கையில் உள்ளது. அங்கிருந்த நினிவேக் அருங்காட்சியகத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் சேதப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)



# பாகிஸ்தானுக்கு அமெ.தூதராக டேவிட் ஹேல் நியமனம்

வொஷிங்டன்,மார்ச் 14

பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதராக டேவிட் ஹேலை நியமனம் செய்ய அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா பரிந்துரை செய்துள்ளார்.

பாகிஸ்தானில் தற்போது அமெரிக்கத் தூதராக கமரூன் முன்டர் பணியாற்றி வருகின்றார். அவரது பதவிக் காலம் எதிர்வரும் ஜூன் மாதம் நிறைவு பெறுவதால், புதிய தூதராக டேவிட் ஹேலை நியமனம் செய்யலாம் என்று அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா பரிந்துரை செய்துள்ளார்.

தற்போது லெபனான் நாட்டு அமெரிக்க தூதராக டேவிட் ஹேல் பணியாற்றி வருகிறார். (14)

# 600 மருத்துவர்களை படுகொலை செய்தது சிரியா

## மனித உரிமை அமைப்பு குற்றச்சாட்டு

நியூயோர்க், மார்ச் 14



சிரியாவின் அரச படைகள் நடத்திய தாக்குதலால், 600 மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் இறந்திருக்கலாம் என்று நியூயோர்க்கைச் சேர்ந்த மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில், அரச படைகள் மருத்துவமனைகளைக் கூட விட்டு வைக்காமல் நடத்திய தாக்குதலின் போது, போரினால் மோசமாக காயமடைந்து சிகிச்சை பெற்றவர்களும், அவர்களுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த 600 இற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பின் இயக்குநர் ஏரின் ஹல்கர் கூறும்போது: 'போரின்போது மருத்துவ மனைகள் மீது தாக்குதல் நடத்துவது சர்வதேச சட்டங்களின் படி போர்க்குற்றம். ஆனால் சிரியாவின் அரசபடைகள் எதைப் பற்றியும் கவலைபடாமல் மருத்துவமனைகள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன. மேலும் காயம் அடைந்தவர்களைக் காப்பாற்ற முயன்ற செவிலியர்களையும் சித்திரவதைச் செய்து கொலை செய்துள்ளது' எனத் தெரிவித்தார்.

# கட்டடம் இடிந்து விழுந்து 7 பேர் சாவு

## பங்களாதேஷில் துயரச் சம்பவம்

டாக்கா,மார்ச் 14



பங்களாதேஷில் தொழிற்சாலை கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் பலர் இடிபாடுகளுக்குள் அகப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது சுமார் 53 பேர் காயமுற்றிருப்பதாகவும், அவர்களில் ஆறு பேரின் நிலைமை மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் தென் பகுதியில் உள்ள தொழிற்சாலையின் கூரை முழுதாகக் கட்டப்படாத நிலையில் கட்டடம் இடிந்து விழுந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவ வீரர்களும் அவசரக்காலப் பணிக்குழுவினரும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகளை அகற்றும் பணிகளுக்கிடையே பலர் அவற்றிலிருந்து காப்பாற்றப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் சுமார் பத்துப் பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல்; 10 பேர் சாவு



பாக்தாத்,மார்ச் 14

ஈராக் நாட்டில் ஒரே நாளில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் ரமாதி உள்ளிட்ட 7 நகரங்களில் கார் வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல்களில் 10 பேர் சாவடைந்ததுடன் மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர். பாக்தாத்துக்கு மேற்கே அன்பர் பிராந்தியத்தில் உள்ள ரமாதி, ஹவாஸ், மலாப், டோய், அல்பு பராஜ் மற்றும் அல்பு எய்தா உள்ளிட்ட 7 நகரங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கூட்டாகச் சேர்ந்து கார் வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்தப்பகுதிகள் அனைத்தும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த 7 இடங்களில் நேற்று முன்தினம் நடத்திய கார் வெடிகுண்டுத் தாக்குதல்களில் 10 பேர் சாவடைந்தனர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதி[illegible] கைப்பற்றிய திக்ரித் நகரை [illegible]ண்டும் கைப்பற்றுவதற்காக கடந்த 10 நாள்களாக ஈராக் அரச படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. தற்போது திக்ரித் நகரம் ஈராக் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஈராக் அரச படைகளின் தாக்குதலை முறியடிக்கவே, ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கூட்டாகச் சேர்ந்து, ஒரே நேரத்தில் 7 இடங்களில் கார் வெடிகுண்டுத் தாக்குதல்கள் மூலம் பதிலடி கொடுத்துள்ளனர் என்று ஈராக் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (14)

# அமெரிக்காவிடம் மட்டும் 5 ஆயிரம் அணு ஆயுதங்கள்

வொஷிங்டன்,மார்ச் 14

சிகாகோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள், அமெரிக்கா 5 ஆயிரம் அணு ஆயுதங்களை வைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

சிகாகோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ள இந்த விளக்கப்படத்தில் 9 நாடுகளில் உள்ள அணு ஆயுதங்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டுகளில் 65 ஆயிரமாக இருந்த அணு ஆயுதங்கள் 10 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளில் இந்த அணு ஆயுதங்கள் குறைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த விளக்கப்படத்தில் அமெரிக்கா 5 ஆயிரம் அணு ஆயுதங்களையும், அதேபோல ரஷ்யாவும் 5 ஆயிரம் அணு ஆயுதங்களையும் வைத்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட கொரியா 2006, 2009 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் அணு ஆயுத சோதனைகளை நடத்தி உள்ளதாகத் தெரியவந்துள்ளதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் இவ்வளவு தொகையான அணு ஆயுதங்கள் இருக்கும் என்பதை மக்கள் நம்பமாட்டார்கள் என்று இந்தத் திட்டத்தின் நிர்வாக இயக்குநர் ரேச்சல் பிரான்சன் கூறியுள்ளார். (14)

# உக்ரைன் நாட்டின் அமைதியை விரும்பும் ஜேர்மனி

பெர்லின்,மார்ச் 14

உக்ரைன் நாட்டில் அமைதி திரும்பும் வரை ரஷ்யாவில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்க முடியாது என்று ஜேர்மன் ஜனாதிபதி முடிவெடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனியின் 'நாசிச' ஹிட்லரை வீழ்த்தியதில் ரஷ்ய நாடு முக்கிய பங்கு வகிக்கிறது. எதிர்வரும் மே மாதம் இரண்டாம் உலகப் போர் நடைபெற்று 70 ஆண்டுகள் நிறைவடைவதால், அதனை நினைவுகொள்ளும் வகையில் ரஷ்யா நாட்டின் இராணுவ அணிவகுப்புடன் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்க ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கலுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். ஆனால், உக்ரைன் விவகாரத்தில் போராட்டக்காரர்களுக்கு ரஷ்யா தொடர்ந்து ஆயுதங்கள் வழங்கி வரும் நிலையில், அந்த நாட்டு இராணுவ அணிவகுப்பு நிகழ்வில் பங்கேற்க முடியாது என மெர்க்கல் திட்டவட்டமாக கூறியுள்ளதாக ஜனாதிபதியின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும், விளாடிமிர் புடின் அனுப்பிய கடிதத்துக்கும் பதில் கடிதம் அனுப்பாமல் மெர்க்கல் நிராகரித்துள்ளார்.(14)

# மாடுகளை வதை செய்யாதீர்கள்



அம்பலவாணர் இராஜரட்ணம்,
*(சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், அரச ஓய்வூதியர்)*

மாடுகளை வதை செய்யாதீர்கள் இப்பூவுலகிலுள்ள விலங்குகள் யாவற்றிலும் மேன்மையானதும் புனிதமானதுமாகக் கருதப்படுவது பசுவாகும். இதைக் கோமாதா எனவும் அழைப்பர். கோ என்பது இறைவனைக் குறிக்கும் சொல். மாதா என்பது தாயைக் குறிக்கும் சொல். பசுவானது தெய்வங்களோடு பல சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டு மனித மேம்பாட்டுக்கு துணை புரிவதால் "கோ" என்று பகுதியாக வும், தாய்ப் பாலுக்கு நிகரான தன்பாலைத் தந்து குழந்தைகளை வளரச் செய்வதால் "மாதா என்று விகுதியாவும் சேர்த்து கோமாதா என அழைப்பர். பசுவின் பாலானது பல வழிகளிலும் மக்களுக்குப் பிரயோசனப் படுகிறது. ஆன்மிகச் செயற்பாடுகளில் முதலிடம் வகிக்கிறது. இறைவனின் திருவுருவ விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்வதற்கும், இறைவனின் மிக விரும்பிய நீராகாரமாகவும் பயன்படுகின்றது. பாற்குட பவனிகளில் இடம்பெறுகின்றது. பஞ்ச கவ்வியத்திலும் இடம்பெறுகிறது. சிறியோருக்கும் பெரியோருக்கும் போஷாக்கு அளிக்கக் கூடிய பானமாகவும் விளங்குகிறது. பிறந்த குழந்தைக்கு தாய்ப்பாலுக்குப் பதிலாக தாயால் முதலில் ஊட்டப்படுவதும் , ஆறு மாதங்களின் பின் குழந்தைக்கு முதன் முதல் உணவூட்டும் நிகழ்வான அன்னப் பிரசாசனம்... எனப் படும் பாற்சோறு ஊட்டல் நிகழ்விலும் முதலிடம் வகிப்பது பசுவின் பால்தான் என்றால் மிகையாகாது. பூணூல் சடங்கு, ருது சாந்தி வைபவம், திருமண வைபவம் போன்ற நிகழ்வுகளுக்கு நீராட்டுவதற்கு முன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தலையில் வைத்து பெரியோர்களால் ஆசி வழங்குவது பாலும் அறுகம்புல்லுமே. திருமணப் பந்தத்தில் ஈடுபடும் மணமக்களுக்கு முதன் முதல் வழங்கப் படுவது பாலும் பழமுமே. புதுமனை புகுதலின் போதும் முதன் முதல் காய்ச்சப்படுவது பசுவின் பாலே. கோயிற பூசைமுடிவிலும் பிரசாதமாகத் தரப்படுவது பாற் தீர்த்தமே. இறக்கும் கருவாயில் இருக்கும் மனிதனுக்கு வாயில் ஊற்றப்படுவதும் பசுவின் பாலே. இறந்த பின் நடக்கும் சகல கிரியைகளுக்கும், காடாற்றல் எனப்படும் எலும்புகள் சேகரிக்கும் கிரியைகளுக்கும், அந்தியேட்டி, திவசம் எனப்படும் அமங்கல நிகழ்வுகள் யாவற்றுக்கும் இன்றியமையாததாக வேண்டப்படுவது பசுவின் பாலே!

பசுவின் சாணம் கூட பல்வேறு செயற்பாடுகளுக்கும் பயன்படுகிறது. மண் வீட்டை மெழுகிச் சுகாதாரமாக வைத்திருப்பதற்கும், சிவ சின்னமாகிய வீபூதி தயாரிப்பதற்கும், பஞ்சகவ்வியம் தயாரிப்பதற்கும், இறந்த உடலை எரிப்பதற்கு விறாட்டி தயாரிப்பதற்கும்,தாவரங்களுக்குபோஷாக்குள்ள உரமாகவும் பசுவின் சாணம் பயன்படுகிறது.

கும்பாபிஷேக வேளைகளிலும், புதுமனை குடிபுகு வேளைகளிலும் பசுவைக் கொணர்ந்து மங்கல தரிசனமாக காண்பிக்கிறார்கள். ஏனெனில் பசுவின் பின் பகுதியில் இலக்குமி வாசம் செய்வதாக

**திருக்கோயிலில் தினம் தோறும் நடைபெறும் ஆறு காலப் பூசையின் போது நந்திக்கும் பூசை நடைபெறும். பிரதோஷ காலத்தில் இவருக்கு சிறப்பான பூசை வழிபாடு நிகழும். இவருடைய இரு கொம்புகளுக்கிடையே சிவலிங்கத்தைத் தரிசித்த பின்பே விரதத்தை நிறைவு செய்வார்கள்**

ஆகமங்கள் கூறுகின்றன. ஆன்மிகக் கதைகளிலும் பசுக்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் வளர்ந்து வந்த ஆயர்பாடியில் ஆயர்களால் பிரியமாக வளர்க்கப்பட்டதும், ஸ்ரீ கிருஷ்ணனின் பிரியமான விலங்கும் பசுதான். திருமூலர் பசுக்களிலே கொண்ட இரக்கத்தை அவரது வரலாற்றிலே அறிந்திருப்பீர்கள். மனுநீதி கண்ட சோழன் தாய்ப்பசு பட்ட துன்பத்தைத் தாங்காது தன் மகனையும் தேர்ச் சில்லில் அகப்பட்டு இறக்கச் செய்த வரலாறும் எமக்கு உணர்த்துவது பசுவின் மகத்துவத்தையே.

எருதை நோக்குங்கால், எருதும் தெய்வீக நிகழ்வுகள் பலவற்றில் சம்பந்தப்பட்டிருக்கிறது. கைலையில் வீற்றிருக்கும் சிவனுக்கும், பார்வதிக்கும் காவல் தெய்வமான நந்தியாகவும், சிவன் கோயில்களிலே சிவலிங்கத்தையே நோக்கிய வண்ணமிருக்கும் ஆன்மாவாகிய நந்தியெம் பெருமானாகவும் விளங்குகின்றது. சிவ பார்வதித் தெய்வங்களுக்கு வாகனமாகவும் விளங்குகிறது. இராசிகளில் ரிஷபமாகவும், சிவாலய மஹோற்சவத்தின்போது ஏற்றப்படும் கொடிச்சீலையில் நந்தியாகவும் காட்சி தருகிறார். திருக்கோயிலில் தினம் தோறும் நடைபெறும் ஆறுகாலப் பூசையின்போது நந்திக்கும் பூசை நடைபெறும். பிரதோஷ காலத்தில் இவருக்கு சிறப்பான பூசை வழிபாடு நிகழும். இவருடைய இரு கொம்புகளுக்கிடையே சிவலிங் கத்தைத் தரிசித்த பின்பே விரதத்தை நிறைவு செய்வார்கள்.

எருது விவசாயிக்கு மிகவும் இன்றியமையாத ஒரு விலங்காகும். அவன் நிலத்தை உழுதுகொள்வதற்கும், வயலுக்குத் தேவையான உரத்தை வழங்குவதற்கும், வயலில் விளைந்த நெற்கதிர்களை சூடு மிதித்து நெல் மணிகளாக்குவதற்கும், அந்த நெல் மணிகளை மூடைகளாகக் கட்டி வீடு கொண்டு செல்வதற்கும் வண்டியை இழுப்பவைகளும் எருதுகளே. இதனால் தான் விவசாயி சூரியப் பொங்கலுக்கு மறுநாள் எருதுகளுக்கும் நன்றிக் கடன் செலுத்துவதற்காக மாட்டுப்பொங்கலைநடத்துகிறான்.

இவ்வகையான சிறப்புக்கள் மிக்க பசுவையும், எருதையும் பதை பதைக்கக் கொன்று உண்பது எவ்வளவு பாதகமான செயலாகும். இவையிரண்டும் மக்களாகிய எமக்குப் பல வழிகளிலும் உதவி செய்கின்றன. நாமோ அந்தச் செய் நன்றிகளை மறந்து எம் உடலை வளர்ப்பதற்காக அப்பாவிப் பிராணிகளான அவைகளை ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கின்றோம். நாம் அவற்றின் ஊனை உண்பதால் தான் அவைகள் தினம்தோறும் கொல்லப்படுகின்றன. நாம் உண்ணாவிட்டால் அவைகள் கொல்லப் படமாட்டா.

ஆகவே நாம் பசுக்களையும், எருதுகளையும் தெய்வத்தால் எமக்கு அளிக்கப்பட்ட விலங்குகளாகக் கருதி அவைகளைச் கொன்றொழியாதிருப்போமாக!



## இலங்கையில் 2ஆவது சிறந்த ஸ்மார்ட் போன் ரகமாக ஹுவாவி

உலகின் முன்னணி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கும் நிறுவனமான ஹுவாவி இலங்கையின் இரண்டாம் நிலை ஸ்மார்ட்போன் ரகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தரப்படுத்தலை சர்வதேச டேடா கோர்ப்பரேஷன் மேற்கொண்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைவாக இலங்கையின் மொத்த ஸ்மார்ட்ஃபோன் சந்தை வாய்ப்பில் 18 சதவீதத்தை ஹுவாவி தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டின் முன்னணி நகரங்களிலும், மலையக பகுதிகளிலும் ஹுவாவி தயாரிப்புகளுக்கு சிறந்த கேள்வி காணப்படுகின்றதுடன், இவற்றை விநியோகிக்கும் செயற்பாடுகளை சிங்கர் மேற்கொண்டு வருகிறது.

ஹுவாவியின் நுகர்வோர் வியாபார குழுமத்தின் இலங்கையின் தலைமை அதிகாரி ஹென்ரி லியு கருத்துத் தெரிவிக்கையில், ஸ்மார்ட்ஃபோன் பிரிவில் வளர்ந்து வரும் தயாரிப்புகள் எனும் வகையில், இந்த தரப்படுத்தல் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எமது இறுதியான வர்த்தக நாம நிலைப்படுத்தல் சாதனையை பிரதிபலிப்பதாக இந்த விருது அமைந்துள்ளது. மேக் இற் பொசிபிள் எனும் வர்த்தக நாம உறுதி மொழிக்கமைவாக இலங்கையில் உயர் தர அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதுடன் சேவைத்தரத்தையும் வழங்கும் வகையில் அமைந்துள்ளது என்றார். (த)

## அமானா தக்காபுல் காப்புறுதி நிறுவனமும் யாழ்.முச்சக்கரவண்டி உரிமையாளரும் இணைந்த பாதுகாப்புச் செயற்பாடு

அமானா தக்காபுல் காப்புறுதி நிறுவனம் யாழ்ப்பாணக் கிளையும் யாழ்.மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கமும் இணைந்து ஓட்டோ உரிமையாளர்களுக்கும் பயணிகளுக்கும் இடையிலான நட்புறவையும்,பாதுகாப்பையும் முன்னிறுத்தி முச்சக்கர வண்டியின் சாரதியின் இருக்கைக்குப் பின்புறமாக உள்ள ஆசனப் பகுதியில் முச்சக்கரவண்டி சார்பான உரிமையாளர் அல்லது சாரதியின் பெயர், முச்சக்கரவண்டித் தரிப்பிடம், அவரின் அங்கத்துவ இலக்கம், அவரின் ஒளிப்படம், தொலைபேசி இலக்கம் என்பன பொறிக்கப்பட்ட அட்டையை வழங்கும் வைபவம் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி மு.ப.10 மணியளவில் சங்கத்தின் முன்பாக தலைவர் தலைமையில் (சங்கத் தலைவர்)அமானா தக்காபுல் காப்புறுதியின் யாழ்.ஊழியர்கள் முன்னிலையில் இந்த அட்டை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த அட்டையை அமானா தக்காபுல் வழங்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.

"இந்தச் செயற்பாட்டின் மூலம் முச்சக்கர வண்டிச் சாரதியினருக்கும், பயணிகளுக்கும் இடையில் பாதுகாப்பையும் நட்புறவையும் வளர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்" என்று முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தலைவர் தனது உரையில் கூறி இருந்தார். (த)




இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி இரண்டாம் மேற்தரக்கிளையில் 18+ இளைஞர் கணக்கைப் பேணி வந்த வாடிக்கையாளருக்கு திருமணப் பரிசாக வங்கி கிளை முகாமையாளர் எஸ்.தர்மராஜா தங்க நாணயம் வழங்கினார். அருகில் பிராந்திய வங்கியியல் அதிகாரியும் காணப்படுகிறார்.

# வாசகர் திருமுகம்



## சுவாமி விபுலானந்தருக்கு சிலைவேண்டும்

பரோபகாரி சங்கரப்பிள்ளை ஐயாவினுடைய சிந்தையிலே எழுந்த கல்விக் கோபுரமாய் நூற்றாண்டு விழா கண்டு வெற்றிநடைபோடும் தேசிய பாடசாலையாம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சுவாமி விபுலானந்தருக்கு சிலை யொன்று அமையப் பெறுதல் அவசியமாகும். உலகம் போற் றும் தமிழறிஞர் விபுலானந்தர் இந்தக் கல்லூரியில் அதிபராக இருந்தார் என்ற புதுக் கருத் தைக் கூறுகிறேன் எனக் கூறாது அனைவரும் ஏற்றுக் கொள்ளலாம். பல கல்லூரி களிலே ஸ்தாபகர்களுக்கும் அதிபர்களுக்கும் சிலைகள் அமைந்திருப்பதைக் காணலாம். தெல்லிப்பழை மகாஜனக் கல் லூரியில் ஸ்தாபகர் துரை யப்பாபிள்ளைக்கு இணையாக அதிபர்களான மகாஜன சிற்பி ஜெயரத்தினம் மற்றும் அதிபர் சின்னப்பாவுக்கு சிலைகள் அமைக் கப்பட்டுள்ளன.

சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரியிலே ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாருக்கு இணையாக ஒறேற்றர் சுப்பிரமணியம் முத லிய அதிபர்களுக்குச் சிலைகள் அமைக் கப்பட்டுள்ளன.

மானிப்பாய் இந்துவில் கல்லூரி யின் வளர்ச்சிக்காக செயற்படு கின்ற பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் முயற்சியால் புதிய கட்டடங்கள்,அரங்குகள் அமையப் பெற்று புதுப்பொலிவோடு விளங்கு கின்றன.

இனியாவது சிலை அமையப் பெறுதல் சாலச் சிறந்ததாகும். மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் திரு வுருவப்படம் மங்கல வாத்தியங் களோடு ஊர்வலமாகக் கல்லூரி வரை எடுத்து வந்து விழா எடுத்த காலங்களை கருத்தில்கொண்டு மருதடிவிநாயகர்,கலைக்கோயில் கொண்டு புதுப் பொலிவு கொண்டு கும்பாபிஷேகம் கண்ட புனித தருணத்திலே இந்தக் கருத்தை யும் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள் உள்ளிட்ட கல்லூ ரிச் சமூகத்தினரும் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் ஆசிரியர் களின் நினைவுக்காகவும் ஈழத் திலும் உலக நாடுகளிலும் செயற் படுகின்ற பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரும் செவி மடுத்து மனங்கொண்டு செயற் படுதல் சாலச் சிறந்ததாகும்.

*இ.மோகன்,உடுவில்.*

## விவசாயிகளின் ஓய்வூதியத்திலும் கவனம் செலுத்துங்கள்

புதிய அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு–செலவுத் திட்ட வாக்கெடுப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ.சரவணபவன் அவர்கள் அரச ஓய்வூதியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக எடுத்துக் கூறியமை பாராட்டுதல் களுக்குரியது.


நாட்டில் விவசாயம் எவ்வளவு மிகவும் முக்கியமா னது என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் விவ சாயிகள் குறைந்த ஓய்வூதியம் பெறுவது தொடர்பாக மத்திய அரசோ அல்லது மாகாண அரசோ கவனிப் பதாகத் தெரியவில்லை. மிகக் குறைந்த ஓய்வூதியம் பெறும் விவசாயிகள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் அவல வாழ்க்கை வாழ்கிறார்கள்.

அத்துடன் விவசாய மக்களின் விவசாய ஓய்வூதியம் இடைநடுவில் 25 மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் நிறுத்தி வைக் கப்பட்ட ஓய்வூதிய நிலுவை இன்னமும் வழங்கப் படவில்லை.

இதனையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் கவனத்தில் கொண்டால் உதவியாக இருக்கும்.

*செல்வராணி ராஜசுந்தரம், நல்லூர்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# சிக்கிக் கொள்வாரா கோத்தபாய?

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ இப்போது சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளார். மஹிந்தவின் காலத்தில் அசைக்கமுடியாத ஒருவராக, அதிகார்ரங்கள் பல படைத்தவராக இருந்த அவர், இப்போது மைத்திரியின் காலத்தில் பற்கள் பிடுங்கிய பாம்பாகிவிட்டார். அவருக்கு எதிராக பல தரப்பாலும் இப்போது சுமத்தப் பட்டுவரும் குற்றச்சாட்டுக்களால் அவர் கைதாகலாம் என்ற ஊகம் நிலவிவருகிறது. கோத்தபாயவைக் கைது செய்வது தொடர்பில் தேசிய நிறைவேற்று அதிகாரசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அது தொடர்பில் இறுதி முடிவை எடுப்பார் என்று கூறப்பட்டுள்ளது.

காலித் துறைமுகத்தில், சட்டவிரோதமாக இயங்கிவந்ததாகக் கூறப்படும் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலை விவகாரமே கோத்தபாயவை கடும் சிக்கலில் மாட்ட வைத்திருக்கிறது. அந்தக் களஞ்சியசாலையில் இருந்து சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள் அண்மையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினால் கைப்பற்றப்பட்டிருந்தன. சட்டத்துக்கு மாறாக இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலை இயங்கி வந்ததாகவும், இதற்கான உத்தரவுகளை கோத்தபாயவே பிறப்பித்ததாகவும் ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

குறித்த சட்டவிரோத ஆயுதங்கள் கடந்த பல வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற கொலை, ஆள்கடத்தல் போன்ற சட்ட விரோத செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டனவா என்பது குறித்தும் இப்போது விசாரணைகள் முடுக்கிவிடப்பட் டுள்ளன.

கோத்தபாயவின் உத்தரவுக்கு அமையவே இந்த ஆயுதக் களஞ்சியம் இயக்கப்பட்டதாகவும், இதில் பெரும் மோசடிகள் இடம்பெற்றதாகவும்கூறி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின்போது கோத்தபாய வெளிநாடுகளுக்குச் செல்லாதவாறு அவரது கடவுச் சீட்டு முடக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற அரசியல்வாதிகள், ஊடகவியலாளர் கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரின் கொலைகள், ஆள்கடத்தல்கள் போன்ற சம்பவங்களுடன் முன்னாள் பாது காப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் அவரது உத்தரவுக்கு அமையவே மேற்படி சட்டவிரோத செயல்கள் நிகழ்த்தப்பட்டதாகவும் மஹிந்தவுடன் நெருக்கமாக இருந்து செயற்பட்டுவந்த முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அதிரடி வாக்குமூலம் ஒன்றை அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் திடம் வழங்கியிருந்தார். அதேநேரம் ஆஸ்திரேலியாவில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி, கோத்தபாயவினால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்தே, தான் ஆஸ்திரேலியாவில் தஞ்சம் அடைந்ததாகவும், சட்ட விரோத மான செயற்பாடுகளைச் செய்வதற்கு தான் இணங்கா மையால், கோத்தபாய தன்மீது கோபம் கொண்டிருந்தார் என்றும், நீதியான விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்டால் கோத்தபாயவின் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து தான் சாட்சியம் அளிக்கத் தயார் என்றும் பகிரங்கமாகக் கூறியி ருந்தார்.

இவ்வாறு சரமாரியான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான கோத்தபாயவை கைது செய்வதற்கான முயற்சிகள் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

நாட்டில் இடம்பெற்ற சட்டவிரோத படுகொலைகள், ஆள் கடத்தல்கள், காணாமற் போதல்கள் ஆகியவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகளிலும் மைத்திரி அரசு, அக்கறை காட்டுவதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறான சட்டவிரோதச் செயல்களுக்கு மேற்படி மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தில் பதுக்கப்பட்டிருந்த ஆயுதங் கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதை மறுப்பதற் கில்லை.

கோத்தபாய கைதாகி, அவர்மீது ஒரு நீதியான – வெளிப் படையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டால் நாட்டில் இடம்பெற்ற பெரும் எண்ணிக்கையான சட்டவிரோத செயல்களின் பின்னணி , அவற்றின் காரணகர்த்தாக்கள் உட்பட பல விடயங்கள் தொடர்பான உண்மை கள் அம்பலமாகும் என் பதில் ஐயமில்லை.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கே வரும் இந்தியப் பிரதமரே தமிழ் மக்களின் பக்கம் பாருங்கள்

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இன்று வடக்கே வருகிறார். யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு அவர் வருகை தர உள்ளார். இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக வருகைதரும் இந்தியத் தலைவர்கள் எவரும் கடந்த பலப்பல ஆண்டுகளில் வடக்குக்கு வருகை தந்ததில்லை. வடக்குக்கு வருகைதரும் முதலாவது இந்தியப் பிரதமரும் மோடி அவர்களே. ஆகையால் அவருடைய வருகை முக்கியத்துவமும் பெறுமதியும் மிக்கனவாகக் கருதப்படுகிறது.

தமிழ் மக்களின் பேராதரவின் ஊடாக, இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருக்கும் மைத்திரிபால சிறிசேனவுடன் அவர் நேற்று உத்தியோகபூர்வப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார்.

கடந்த சுமார் ஐம்பத்தொன்பது ஆண்டுகளாக, மாறி மாறிப் பதவிக்கு வந்த கொழும்பு அரசுகள், தமிழ் மக்களின் பிரதானமான அரசியல் உரிமைகளை வழங்குவதில் தொடர்ந்து தகிடுதத்தம் செய்து கொண்டிருந்தன; இதுவரையும் அதுவே தொடர்கிறது.

பிளவுறாத இலங்கைக்குள், தமிழ் மக்களுக்கு உரிய Inalienable உரிமைகளை வழங்குவதற்குச் சிங்களப் பெரும்பான்மை அரசுகள் மறுத்துவந்தன; இன்னமும் அந்தப் பாகுபாடும் பாரபட்சமும் தொடர்கின்றன.

இந்தியாவின் முன்னாள் அரசுகளில் ஒன்றான ராஜீவ்காந்தி காலத்தில், 1987 இல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் பூரணத்துவமான முறையில் இன்னமும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.

அந்த ஒப்பந்தம் தோற்றுப் போனமையினாலேயே தமிழ் இளைஞர்கள் மீண்டும் தீவிரமாக ஆயுதம் ஏந்திப் போராட நேர்ந்தது என்பதும், இலங்கையிடம் இந்தியா தோற்றுப்போனமையும் ஆழமான பதிவாகிவிட்டது.

எனினும், அரசியல் காலமாற்றங்களால், பிளவுறாத ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதற்குத் தமிழ் மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர். அதற்கான பெரிய குறியீடாக, வடக்கு மாகாண சபைக்கான தேர்தலும், ஆட்சிக்கு வந்துள்ள புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் தமிழ் மக்கள் வழங்கிய பேராதரவும் தெறித்துத் தொனித்து நிற்கின்றன.

ஆகையால் இப்போதைய நிலையில் இந்தியப் பிரதமர் வடக்கே வந்தார்; தமிழ்த் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார்; கொழும்பின் அரச பிரதானிகளுடன் பேச்சு நடத்தினார் என்ற ஊடகச் செய்திகளுடன் தரித்துவிடக் கூடாது.

வடக்கு வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்தவும், இந்த மாகாணத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் இந்திய மத்திய அரசு உள்ளார்ந்த மனத்துடன் முன்வர வேண்டும்.

இப்போது பதவியில் உள்ள இலங்கை அரசின் ஊடாக அன்றி, வடக்கு வாழ் மக்களின் பிராந்திய அரசாக --சொந்த அரசாக -- உள்ள வடக்கு மாகாண சபை ஊடாக மாகாணத்தின் பொருளியல் நிலையை மேம்படுத்தவும் புதுடில்லி அரசு புத்தூக்கம் அளிப்பதும் பிரதான தேவைகளில் ஒன்றாகும்.

இலங்கை அரசு -- கொழும்பு அரசு -- அழிந்தும் சிதைந்தும் போயுள்ள வடக்கின் பொருளாதாரத்தை மேம்படுத்தப் பெரியளவில் உதவும் என்று நம்புவதற்கில்லை.

வெறும் நூறுநாள் ஆட்சி என்று பரப்புரை செய்து கொண்டு, அடுத்த நாடாளுமன்ற அரசைத் தமதாக்கிக் கொள்வதற்கு உள்வீட்டுச் சண்டை முகிழ்க்கும் காட்சி மெல்ல மெல்ல உயர்கிறது; வெளிச்சமாகத் தெரிகிறது.

ஆகையால் இந்தியப் பிரதமரின் வடக்குக்கான பயணம் வெறும் அரசியல் தமாஷாக அன்றி, இங்கு வாழும் மக்களின் அரசியல், பொருளியல், மேம்பாட்டுக்கு வகை செய்யவேண்டும். அதனையே எமது மக்கள் உள்ளார்ந்து விழைகின்றார்.

இந்தியப் பிரதமரே! அதனை மனதார்ந்து கவனத்தில் எடுங்கள், உதவுங்கள். அதுவே மேன்மையும் செய்வலுவும் கொண்ட உங்களிடம் வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தங்களுக்குரிய, பிரிக்கமுடியாத உரிமைகளைப் பெறுவதற்கு விடுக்கும் வேண்டுகையாகும்.

# இந்தியாவின் நலன் சார்ந்ததே மோடியின் வருகை

ராஜராஜன்



சுமார் 28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கை மண்ணில் காலடி எடுத்துவைத்துள்ளார். எதிலும் புதுமையைப் புகுத்த விரும்பும் நரேந்திர தாமோதர்தாஸ் மோடி இதிலும் புதுமை படைத்துள்ளார்.

1987ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமரான ராஜீவ் காந்தியின் இலங்கைப் பயணம் சோதனைகளும் வேதனைகளும் கலந்ததாக அமைந்திருந்தது. படைவீரர் ஒருவர் அவரைத் தாக்குவதற்கு எடுத்த முயற்சி கை கூடாத போதிலும் வரலாற்றில் அழியாத ஒரு கரும்புள்ளியாக அந்தச் சம்பவம் அமைந்து விட்டது. புலிகளை அழிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் ராஜீவ் காந்தி தனது இலங்கைப் பயணத்தைப் பயன்படுத்திக் கொண்டார். இதன் காரணமாகவே இலங்கை– இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் அமைதிப் படை என்ற பெயருடன் இந்தியப் படைகள் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்தன. ஆனால் ராஜீவ் காந்தியின் நோக்கம் தோல்வி அடைந்ததுடன் தமது உயிரையும் அவரால் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை.

தற்போது நரேந்திரமோடி எதனைச் சாதித்துக்கொள்வதற்காக இலங்கை வந்திருக்கிறார் என்பது மூடு மந்திரமாகவே உள்ளது. பத்துடன் பதினொன்றாக மொறிஷியஸ், சீசெல்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்ற மோடி இலங்கைக்கும் வந்திருக்கிறார் எனவும் அவரது வருகையைக் கொள்ள முடியும்.

இந்திய வம்சாவளி மக்கள் செறிந்து வாழும் மலையகத்துக்கு மோடி செல்லாதது அந்த மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. மலையகத் தலைவர்களுக்கு இந்தியா அளித்து வரும் கௌரவம் இதன் மூலமாகத் துலாம்பரமாகத் தெரிகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மலையகத்தில் பிரதான தொழிற்சங்கமும் அரசியல் கட்சியுமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் விவேகமில்லாத நிலையில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியமை இந்தியாவைச் சீற்றமுறச் செய்திருக்கும். ஏனென்றால் சீனாவுடன் மிக நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்த மஹிந்த ராஜபக் ஷ மீண்டும் ஆட்சிக்கு வருவதை இந்தியா விரும்புமென எவரும் எதிர்பார்க்க முடியாது. இந்த நிலையில் மோடி மலையகத்தைப் புறக்கணித்திருப்பதில் காரணம் இல்லாமல் இருக்க முடியாது.

> தற்போது நரேந்திர மோடி எதனைச் சாதித்துக் கொள்வதற்காக இலங்கை வந்திருக்கிறார் என்பது மூடு மந்திரமாகவே உள்ளது.

இந்திய அரசின் உதவியுடன் இடம்பெற்ற இறுதிப் போரின் போது இலங்கைத் தமிழர்களைப் பூண்டோடு அழித்துவிடும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதற்கும் தமிழர் பகுதி சுடுகாடாக மாறியதற்கும்இந்தியாவும் பொறுப்புக் கூற வேண்டும். காங்கிரஸ் ஆட்சி பதவியில் இருந்து அகற்றப்பட்ட போதிலும் மோடி தலைமையிலான அரசு இந்தியா புரிந்த தவறுகளுக்கு பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் இதுவரை எதுவுமே நடக்கவில்லை. வெறுமனே 13ஆவது அரசமைப்புத் திருத்தம் என்ற மந்திரமே இந்திய தரப்பினரால் உச்சரிக்கப்பட்டு வருகின்றது. இதனால் எவ்வித பயனும் இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை.

இந்த நிலையில் மோடியின் யாழ்ப்பாண வருகைக்கு வெறும் மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே ஒதுக்கியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய வீடுகளைத் திறந்து வைத்தல், வடமாகாண ஆளுநருடன் மதிய உணவு அருந்துதல், இந்திய கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நடுதல் ஆகியவற்றுக்கே அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதுமானதாக இருக்கப் போவதில்லை. இந்த நிலையில் போரினால் சிதைக்கப்பட்ட வன்னிக்கு அவர் செல்வாரென எவரும் எதிர்பார்க்க முடியாது.

சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தை மட்டுப்படுத்தும் நோக்கமாகவும் மோடியின் இலங்கைப் பயணத்தைக் கருத முடியும். இந்த நிலையில் தமிழர் பிரச்சினையை அவர் கையில் எடுத்துக் கொள்வாரென் எவரும் எதிர்பார்க்க முடியாது. இலங்கை அரசை வளைத்துப் போட விரும்பும் இந்தியா, தமிழர் பிரச்சினையைக் கிளப்பி அதைக் குழப்பிவிடுவதற்கு முயலாது என்பதே உண்மை.

வந்தியத்தேவர்



# நீதி மறுக்கப்பட்ட நிலையில் இலங்கைத் தமிழர்கள்

இந்த நாட்டில் நீதி கேட்டு மக்கள் போராடுவது என்பது அரசுக்கு ஒவ்வாத செயலாகவே கணிக்கப்படுகின்றது. நீதி என்ற வார்த்தை இலங்கையின் அகராதியில் கிடையாது என்பதும் அரசின் நிலைப்பாடு போன்று தெரிகின்றது. மக்கள் தமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தி நீதியை எதிர்பார்த்து நடத்தும் போராட்டங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் நசுக்கப்பட்டு மக்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களுக்கும், அபாயங்களுக்கும் மத்தியிலேயே வாழவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுவது தொடர்கதையாகவே மாறிவிட்டது.


நீதிவேண்டிய போராட்டங்கள் வெறும் கண்துடைப்புக்கானவையல்ல. பல்வேறு அராஜகச் செயல்களாலும் நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்டு விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட மக்கள் அதற்கு நீதி கேட்டு வெகுண்டெழுந்து தமது உரிமைகளைப் பாதுகாக்க மேற்கொள்ளும் வாழ்வுக்கான ஒரு போராட்டமே அது. மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்கக் கிளர்ந்தெழுவது ஒன்றும் தவறான செயலல்ல என்பதை ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு உரிய தீர்வு கிடைக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதே நல்லாட்சிக்கான அடையாளமாகும்.

இந்த நாட்டில் நீதி என்பது ஆளும் பெரும்பான்மை இனத்துக்கு ஒன்றாகவும் ஆளப்படும் சிறுபான்மை மக்களுக்கு வேறொன்றாகவுமே உள்ளது. தமிழ் மக்கள் மீள்குடியமர்வு, விசாரணையின்றிச் சிறையில் வாழ்நாளை எண்ணிக்கொண்டிருக்கும் அவலம், காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைகள் என்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இதற்காகத் தினசரி எங்காவது தமிழர்கள் வாழும் ஒரு மூலையில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெறுகின்றன. தமது சொந்தங்களை விடுவிக்குமாறு கேட்டு வீதிகளில் இறங்கி மக்கள் போராடுகின்றனர். கழிவு எண்ணெய் மற்றும் திண்மக்கழிவுகள் பிரச்சினைகளும் தலைதூக்கிக் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் என்பதால் அரசு அரசியல் ரீதியாகவும் பொதுவான முறையிலும் அந்த மக்களுக்குரிய நீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் பின்னடிக்கிறது. கடந்த காலத்தில் நீதிமன்றங்களே தமிழ் மக்களுக்குஎதிரான தீர்ப்புக்களை வழங்கியுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஒன்றிணைப்புக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியதை தான்விட்ட தவறாகும் எனத் தீர்ப்பு வழங்கிய நீதியரசரே ஒப்புக்கொண்டுள்ளார். மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாகப் போட்டியிட மஹிந்தவுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. பல்வேறு தடவைகளில் சட்டத்துக்கும் நீதிக்கும் புறம்பாக அரசைப் பாதுகாக்கும் வகையில் நீதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சமன்செய்து சீர்தூக்கும் செங்கோல் சாய்ந்து தவறியுள்ளது. நீதிபதிகளே இனவாதப் பார்வையுடன் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதிகளை மறுதலித்துள்ளனர்.

பௌத்த நாடு சிங்கள அரசு என்ற ரீதியிலேயே அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. தமிழர் விடயத்தில் கடும்போக்கே அதன் நடவடிக்கையாகிறது. விடுதலைப் புலிகளை அழிக்கிறோம் பயங்கரவாதத்தை ஒழிக்கிறோம் என்று கூறிக் கொண்டு பல ஆயிரக் கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்கள் விடுதலைப்புலிகளிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு அரசுக்கு எதிராக செயற்பட்ட படை அதிகாரிகள் விடயத்தில் பெரிதாக அலட்டிக் கொண்டதாக இல்லை. குமுதினிப் படுகொலைக்குக் காரணமானவர்கள் பதவி உயர்வுகளுக்குரியவர்களாக்கப்பட்டனர். தமிழ் பிரதேசங்களின் மனிதப் படுகொலைகள், புதைகுழிகள் குறித்த நீதி விசாரணைகள் புதைகுழிகளுள் முடங்கிப் போயுள்ளன. மண்டைதீவுப் பகுதியில் உள்ள கிணறுகளைத் தோண்டுங்கள் என அமைச்சர் விஜயகலா இப்போது குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். தமிழ் பகுதியைச் சேர்ந்த பல பத்திரிகையாளர்கள் படுகொலைக்குள்ளாகியும் பலத்த தாக்குதல்களுக்குள்ளான நிலையிலும்கூட இன்றுவரை அது குறித்த நீதி விசாரணைகள் இடம்பெற வில்லை. போர்க்குற்றம் குறித்த சர்வதேச விசாரணைக்குக்கூட தற்போதைய அரசு ஆரோக்கியமான சமிக்ஞைகளை வெளிப்படுத்துவதாகஇல்லை. இந்த நிலையில்தான்தமிழ் மக்கள் தமக்கு நீதி கேட்டுத்தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். முன்னைய அரசு இந்த மக்களின் போராட்டங்களை நசுக்குவதிலேயே கரிசனையாக இருந்துள்ளது. எனினும் படையினரின் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது தமிழ்மக்களின் நீதிக்கான போராட்டம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை மேலோங்கி நிற்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கையைத் திட்டமிட்டபடி மார்ச் மாதத்தில் வெளியிட வற்புறுத்தியும் காணாமற்போன உறவுகளினதும் சிறைக் கைதிகளினதும் விடுதலை குறித்தும் அவர்கள் இன்னமும் போராடிக் கொண்டே இருக்கிறார்கள். அரசியல்வாதிகள் தங்களை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருப்பதாகவும் குற்றம் சுமத்துகிறார்கள். போர்க்குற்றவாளிகள் ஊழல் மோசடிப் பேர்வழிகள் பாதுகாப்பாக மீண்டும் அரசியலில் நுழைந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு நீதித்துறை வலுவிழப்பதற்கு ஆட்சியாளர்களே காரணமாக உள்ளனர். தமது சொந்த நிலங்களில் குடியமர்வதற்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும்கூட அதை முழுமையாக நிறைவேற்ற அரசு தயாராக இல்லை. தமிழ் மக்களின் விவசாய நிலங்கள் பற்றைக்காடுகளாகிக் கொண்டிருக்க உல்லாச விடுதிகளையும் நீச்சல் தடாகங்களையும் அமைத்து தென்பகுதி அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மகிழ்ச்சியில் திளைக்கும் நிலைதான் தொடர்கின்றது. இந்த நிலையில் தமிழ் மக்கள் விடயத்தில் கண்ணை மூடிக்கொண்டவாறு நல்லாட்சி என்ற சொற்றொடரில் நீதிநெறிகளைத் தொலையவிட்டு தமிழ் மக்களைச் சித்திரவதைக்கு உட்படுத்துவதுதான் இலங்கையின் நீதி என்றாகிவிட்டது போலும்.

> **ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கையைத் திட்டமிட்டபடி மார்ச் மாதத்தில் வெளியிட வற்புறுத்தியும் காணாமற்போன உறவுகளினதும் சிறைக் கைதிகளினதும் விடுதலை குறித்தும் அவர்கள் இன்னமும் போராடிக் கொண்டே இருக்கிறார்கள்.**



# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 3 | 7 | | | 2 | | |
| 1 | 9 | | 6 | | | | 8 | 5 |
| 4 | | | 8 | 1 | | | | 3 |
| | 6 | 9 | | | | | 7 | 2 |
| | | 1 | | | | 5 | | |
| 5 | 2 | | | | | 1 | 9 | |
| 8 | | | | 9 | 4 | | | 7 |
| 9 | 1 | | | | 5 | | 2 | 4 |
| | | 4 | | | 8 | 6 | 5 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 3 | 2 | 7 | 8 | 5 | 9 | 4 |
| 9 | 8 | 2 | 4 | 6 | 5 | 1 | 3 | 7 |
| 4 | 7 | 5 | 9 | 3 | 1 | 6 | 8 | 2 |
| 2 | 4 | 6 | 5 | 9 | 3 | 7 | 1 | 8 |
| 5 | 9 | 1 | 8 | 4 | 7 | 3 | 2 | 6 |
| 8 | 3 | 7 | 1 | 2 | 6 | 4 | 5 | 9 |
| 3 | 2 | 4 | 6 | 1 | 9 | 8 | 7 | 5 |
| 7 | 5 | 9 | 3 | 8 | 4 | 2 | 6 | 1 |
| 1 | 6 | 8 | 7 | 5 | 2 | 9 | 4 | 3 |

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## உண்மையான மகிழ்ச்சி

உங்கள் தவறுகளைப் பெரும்பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்றால் மிகையில்லை.

அழுகை பலவீனத்தின் அறிகுறி. அடிமைத்தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது.

தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத் தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

கோபப்படும் மனிதனால் அதிக அளவோ அல்லது செய்யும் பணியைச் சிறப்பாகவோ செய்ய முடியாமல் போய் விடும். ஆனால், அமைதியானவனோ சிறப்பாகப் பணியாற்றுவான்.

மன்னிக்கக் கூடியதும், சமநோக்குடையதும், நிலைதடுமாறாததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.

கருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

# நோய் எதிர்ப்பு சக்தி தரும் கொய்யா

வாழைப் பழத்துக்கு அடுத்த படியாக எம்மிடையே பிரபலமானது கொய்யா தான். இதன் அருமை தெரிந்தோ, தெரியாமலோ நாம் இதை சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றோம். இதில் அடங்கியுள்ள சத்துக்களை தெரிந்து கொண்டால் மிகவும் அக்கறையோடு உட்கொள்வோம். கொய்யாவில் உள்ள விற்றமின் 'சி' சத்து ஒரஞ்சு பழத்தில் உள்ளதை விட நான்கு மடங்கு அதிகம். விற்றமின் 'சி' சத்து உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுடன் கிருமிகள் தாக்காமல் நோய் எதிர்ப் புச் சக்தியையும் அளிக்கின்றது. கொய்யாவில் உள்ள காப்பர் சத்து ஹார் மோன்கள் சுரப்பதற்கும், செயல்படுவதற்கும் வெகுவாய் உதவுகின்றது. நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாட்டுக்கு குறிப்பாக தைராய்ட் சுரப்பி செயல்பாட்டுக்கு பெரிதும் உதவுகின்றது.

புற்று நோய் அபாயத்தை கொய்யா வெகுவாய் குறைக்கின்றது. கொய்யாவில் உள்ள விற்றமின் 'சி' சத்தும், லைகோபேனும் திசுக் களை பாதுகாப்பதால் புற்று நோய் தாக்கும் அபாயம் வெகுவாய் குறைகின்றது.

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற உணவு கொய்யா. நார் சத்தும், குறைந்த சீனி அளவும் கொண்ட கொய்யாவை நீரிழிவு நோயாளிகளும் எடுத்துக் கொள்ளலாம்.

கண் பார்வை சிறக்க கொய்யாப்பழமும் சிறந்ததாகும். இதில் போலிக் அசிட், விற்ற மின் பி9 இருப்பதால் கர்ப்பிணிப் பெண்களுக்கு கொய்யாப் பழம் உண்ண அறிவுறுத்தப்படுகின்றது. இது குழந்தையின் நரம்பு மண்ட லத்தை நன்கு பாதுகாக்கின்றது.

இரத்த அழுத்தத்தை சீராய் வைக்கின்றது. இரத்த உற்பத் தியைக் கூட்டுகிறது.

கொய்யாப்பழம் உண்டால் இதில் உள்ள 'மக்னீசியம்' நரம் புகளையும், தசைகளையும் தளர்த்தி விடுவதால் மனச் சோர்வு குறையும். கொய்யாவில் உள்ள நியாசின் எனப்படும் விற்றமின் பி3, பிரிடாக்ஸின் எனப்படும் விற்றமின் பி6 மூளைக்கு இரத்த ஓட்டம் நன்கு செல்ல உதவுவதால் மூளை சோர் வின்றி இருக்கும். இதில் உள்ள விற்றமின் சி, ஏ மற்றும் லைகோபேன், கரோட்டின் போன் றவை சரும சுருக்கங்களை நீக்குவதால் முதுமைத் தோற்றம் தள்ளிப் போகின்றது.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20–30 | 60 | 30 | 20 –50 | 20–40 | 40 | 30 |
| கத்தரி | 80–100 | 80 | 80–100 | 90 | 80–100 | 80–120 | 60 |
| கரட் | 100–120 | 100 | 100 | 60–80 | 60–80 | 120–140 | 80 |
| மரவள்ளி | 40–50 | 50 | 40–60 | 40 | 30–40 | 40–60 | 20–40 |
| பயிற்றை | 80–100 | 100 | 80 | 90 | 80–100 | 80–120 | 60 |
| பாகல் | 80–100 | 100 | 100 | 50 | 60 | 120–140 | 70–90 |
| கருணைக்கிழங்கு | 60–70 | 60 | 50 | 30 –50 | 40 | 80–100 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 60 –80 | 60–90 | 60–90 | 80–100 | 80–100 | 60–80 |
| சி.வெங்காயம் | 50 | 100 | 50–70 | 40–80 | 60 | 80–100 | 40–60 |
| பூசணி | 70 | 40–60 | 60–80 | 40 | 40–60 | 100–120 | 50 |
| தக்காளி | 50 | 60–80 | 40 | 50 | 40 | 60–80 | 40 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 –80 | 50–80 | 60–80 | 80–100 | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 30 | 20 | 30–35 | 10 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 60–90 | 40–90 | 50–70 | 50 –90 | 50–80 | 80–120 | 40 –80 |
| புடோல் | 40–60 | 60 | 40–60 | 30–60 | 25–40 | 80–100 | 70 |
| கோவா | 40–60 | 50 | 40 | 30 | 20 | 60–80 | 40 |
| வெண்டி | 40–60 | 80 | 30–60 | 40 | 40–60 | 80–60 | 40 –60 |
| போஞ்சி | 100–120 | 100–120 | 100 | 90 | 80–120 | 160–200 | 80 –120 |
| லீக்ஸ் | 120–160 | 120–180 | 140–180 | 90 –150 | 120–160 | 160–180 | 120 –140 |
| தேங்காய் | 40–70 | 30–60 | 60 | 30 –50 | 40–60 | 35–50 | 30 –50 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 80 | 90 | 80–90 | 70 |
| தேசிக்காய் | 40–60 | 40 | 60 | 60 | 40 | 40–60 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 30 | 20 | 10 |
| கறிமிளகாய் | 100–120 | – | 120–140 | 130 –160 | 120–180 | 120–160 | 120 –140 |
| இராசவள்ளி | 120 | 80 | 100–120 | 90 | 80–120 | 80–120 | 70 |
| பனங்கிழங்கு | 05 | 03 | 05 | 04 | 03 | 03 | 04 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 600 | 700 | 600 |
| நண்டு | 400 | 300 | 400 | 350 | – |
| கணவாய் | 450 | 450 | 400 | 500 | – |
| பாரை | 500 | 500 | 450 | 400 | 350 |
| சுறா | 550 | 500 | 600 | 600 | 460 |
| சீலா | 400 | 400 | 500 | 400 | – |
| விளை | 400 | 350 | 500 | 400 | - |
| முரல் | 350 | 300 | 350 | 300 | 350 |
| கும்பிளா | 380 | 200 | 400 | 350 | 300 |
| கிழாக்கன் | 300 | 500 | 400 | 350 | 300 |
| ஒரா | 300 | 300 | 350 | 350 | – |
| திரளி | 250 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 200 | 300 | 300 | – |
| சூடை | 150 | 100 | 150 | 100 | 60 |
| ஒட்டி | 200 | 100 | 220 | 200 | – |
| திருக்கை | 150 | 250 | 200 | 300 | 140 |
| பாலை | 150 | 250 | 350 | 300 | – |
| வாழை | 250 | 100 | 200 | 200 | 250 |
| கொய் | 80 | 100 | 100 | 100 | – |
| மதனம் | 200 | 200 | 200 | 250 | 250 |

## நாளை

**பங்குனி-01.**
**ஞாயிற்றுக்கிழமை**
**15.03.2015**

திதி: தசமி பி.இ.03.17 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.இ.07.54 வரை
சுபநேரம்:09.21-10.51 வரை
இராகுகாலம்:04.51-06.21 வரை

# மனமாற்றம்

## தவக்காலச் சிந்தனை



மனித வாழ்க்கையே எம்மில் பலருக்கு ஒரு முரண்பாடுதான். அன்பும் பகையும், பலமும் பலவீனமும், உண்மையும் பொய்யும், அமைதியும் குழப்பமும், வாழ்வும் சாவும் கலந்ததுதான் வாழ்க்கை. இதனால் முழு நேர பூரண மகிழ்ச்சியில் நாம் திளைக்க முடிவதில்லை. ஆனால் முழுமையானதும் நிலையானதுமான மகிழ்ச்சியின் பிறப்பிடமாகத் திகழ்பவர் கடவுள் ஒருவரே. ஆகவே கடவுளுடன் நெருங்கி வாழ்ந்து அவருடன், முறிவுபடாத உறவு வைத்துக் கொள்பவர்கள், தமது மகிழ்ச்சியையும் தூய்மைப்படுத்திக் கொள்வதோடு, அதை இழக்காமலும் இருக்கிறார்கள். இதனால் தான் முழு இதயத்தோடு கடவுளிடம் திரும்பிவர (யோவே 2:12) தவசு காலம் எம்மை அழைக்கிறது.

எனவே பல்வேறு மாறுபட்ட தீய கலாசார சீரழிவுகளுக்குள் வாழ்ந்து வரும் எமக்கு நாளாந்த மன மாற்றம் இன்றியமையாதது. காலையும் மாலையும் எமது வாழ்வுக்குள் சென்று எமது மனதை ஆராய்ந்து பகலில் என்ன குற்றங்கள், பாவங்கள் செய்தேன். பிறருக்கு எதிராக எனது பேச்சில், சிந்தனை யில் செயலில் தவறு செய்தேனா? மற்றவர்களுக்கு என்ன நன்மைகள் செய்தேன் என்று என்னையே கேட்க வேண்டும். நாம் செய்த நன்மைகளுக்கெல்லாம் நன்றி கூறி தீமைகளுக்கு இறைவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இந்தத் தீமைகள், தவறுகளிலிருந்து விடுதலை பெற்று மன மாற்றம் அடைந்து நன்மைகளைச் செய்து வாழும் போது எமது தனியான வாழ்வும் சமூக வாழ்வும் உயர்வடைகிறது. மக்களுக்குநன்மைகொடுக்கும் பல சிறந்த திட்டங்களைச் செய்யக் கூடியவர்களாக நாம் மாறுகிறோம். ஆகவே இந்தத் தவக்காலத்தின் ஆரம்பத்திலேயே நாம் இறைவழியில் வாழ்ந்து அனைவருக்கும் குறிப்பாக பல கஷ்டங்கள் துன்பங்களில் வாழ்வோருக்கு உதவி செய்ய முன் வருவோம். அப்போது நம்முடையதும், பல மக்களுடையதும் வாழ்வில் மகிழ்ச்சி ஊற்றெடுக்கும்.

அருட்பணி அ.ம.ஸ்ரீபன், செ.தா.
அதிபர், அருள் ஆச்சிரமம்.

# எண் ஜோதிடப்படி காதலில் உங்கள் குணம் எப்படி



## 1

**பெண்ணுக்குரிய குணம்**

வாழ்க்கையை நுனிக்கரும்பு வரை சுவைத்திட ஆர்வமுள்ளவர். வரப்போகும் கணவன் தன்னைவிட எல்லா அம்சங்களிலும் உயர்ந்து நிற்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர். அப்படிப்பட்டவரை ஆதரவு செய்யத் தவறமாட்டார். லட்சியப்போக்கும், சாதுரியமும், நகைச்சுவையும் நிரம்பியவர்.

**ஆணுக்குரிய குணம்**

மனைவியிடத்தில் விசுவாசத்தோடும், பெருந்தன்மையோடும், நன்றியுணர்ச்சியோடும் இருப்பீர்கள். மனைவியின் செயல்களில் குறை கண்டுபிடிப்பதைத் தவிர்த்து விடுங்கள். அதுவே, உங்கள் வாழ்க்கையைச் சொர்க்கம் போல் மாற்றிவிடும்.

## 2

**பெண்ணுக்குரிய குணம்**

கணவர் எள் கொண்டு வா என்றால், எண்ணெய் இதோ என்று சொல்லும் சுபாவம் உடையவர். அடிக்கடி உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் தொட்டாற்சிணுங்கி நீங்கள். உங்கள் ஒவ்வொரு பணியையும், உங்கள் அலங்காரத்தையும், உங்கள் கணவர் காதலர் வாய் நிறைய மெச்ச வேண்டும் என்று எதிர்பார்ப்பவர். நீங்கள் நல்ல நகைச்சுவை நிரம்பியவர். நீங்கள் இருக்குமிடத்தில் எப்பொழுதும் கலகலப்புத்தான்.

**ஆணுக்குரிய குணம்**

நீங்கள் ஒரு காதல் மன்னன். அத்துடன் உங்கள் காதலியின் முறையீடுகளை அனுதாபத்தோடு கேட்டு, தீர்வு காணத் தவற மாட்டீர்கள்.

## 3

**பெண்ணுக்குரிய குணம்**

ஆண்மை நிறைந்தவரையே எதிர்பார்ப்பீர்கள். அழகுகூட இரண்டாம் பட்சம்தான். நாகரிகத்தை எதிர்பார்ப்பீர்கள். வீட்டுப் பணியுடன், வெளிப்பணியையும் திறம்பட வகிக்கக்கூடியவர். உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதியின் பாட்டுக்கு இலக்கணம் நீங்களேதான்.

**ஆணுக்குரிய குணம்**

ஓர் உத்தம புருஷனின் கல்யாண குணங்கள் அத்தனையும் பொருந்தியவர். எல்லோருக்கும் பரிசுகளையும் பண்டங்களையும் வாரி வழங்கும் கர்ணன். எல்லா விடயங்களையும் பேதமின்றி விளையாட்டாகவே எடுத்துக்கொள்பவர். சுவையான பேச்சாளர். பொறாமை என்றால் அது என்ன விலை என்று கேட்பவர்.

## 4

**பெண்ணுக்குரிய குணம்**

உங்களை நேசிப்பவரிடம் விசுவாசமாகவும், நன்றியுள்ளவராகவும், அனுசரணையுள்ளவராகவும் இருப்பீர்கள். நீங்கள் இருக்குமிடத்தில் கும்மாளமும் வேடிக்கையும் சிரிப்பும் தான்.

**ஆணுக்குரிய குணம்**

குழந்தைகளையும், மனைவியையும் அதிகமாக நேசிப்பவர். விசால மனமும், பெருந்தன்னையும் நிறைந்தவர். உங்கள் மனதை பறிகொடுத்தவருக்காக உயிரைக் கூட தியாகம் செய் யத் தயங்காதவர். பரிபூரண சுதந்திரத்தை வழங்குபவர். தங்களை கணவராக அடைபவர் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

## 5

**பெண்ணுக்குரிய குணம்**

பெண்மை பரி பூரணமாகக் குடிகொண்டுள்ளவர் நீங்கள். உங்களை மனைவியாக அடையப் போகிறவர்கள் ரொம்பவும் அதிஷ்டசாலிதான். உலகை ஒரு சுற்று சுற்றி வர, பேராசை கொண்டவர்.

**ஆணுக்குரிய குணம்**

பெண்களிடையே நீங்கள் மிகப் பிரபலம். உங்கள் பார்வைக்காக ஏங்கும் பெண்கள் ஏராளம். உங்களின் போக்கு எதிர்த்தரப்பினருக்கு அதிர்ச்சியையும் அளிக்கலாம், ஆனந்தத்தையும் அளிக்கலாம். உங்களுக்கு காதல் வாழ்க்கை ஒரு சவால்தான்!




# ஆடைக் கலாசாரமும் பெண்களும்



கலாசார மாற்றத்தால் நிகழ்ந்த மாற்றங்களையும் எந்தவித தயக்கமும் இல்லாமல் ஏற்றுக்கொண்ட நமது சமூகம் பெண்களின் உடை என்று வரும் போது மட்டும் பிந்தைய கலாசாரத்தை வலுக்கட்டயாக உள்ளே இழுப்பதன் பின்னணியில் எவ்வளவு படித்திருந்தாலும் நாங்கள் ஆணாதிக்கத்தின் பிரதிநிதிகளே என்று ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் நிரூபிக்கிறார்கள்.

ஆண்பிள்ளைகள் செய்யும் எவ்வளவு பெரிய தப்பையும் சிறிதும் தயக்கமே இல்லாமல் மூடி மறைக்கவே நமது பெற்றோர்கள் விரும்பு கிறார்கள். அதே சமயம் பெண்பிள்ளைகள் செய்யாத தப்புக்கும் கேள்வி கேட்கப்படுகிறார்கள். பெண்கள் சம்பந்தப்பட்ட எல்லாக் குற்றங்களிலும் பெண்களையே குற்றவாளிகளாக்கி அழகு பார்ப்பது தான் கலாசாரமா? பொது இடத்தில் கண்ணியமாக உடை அணிய வேண்டியது ஆண்கள் மற்றும் பெண்களின் பொதுக்கடமை. இதைக் கேள்வி கேட்க அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், முக்கியமாக பெண்களுக்கு இந்த உடைதான் அணியவேண்டும் என்ற எந்தக் கட்டுபாடும் விதிக்க வேண்டியதில்லை. ஆண்கள் எந்த உடை அணிந்தாலும் எப்படி அணிந்தாலும் உடையே அணியா விட்டாலும் யாரும் கேள்வி கேட்கக் கூடாது என்பதும், ஆண்கள் ஆபாசமாக உடை அணிந்தால் பெண்கள் கண்ணை மூடிக்கொண்டு போக வேண்டும் என்ப தும் எழுதப்படாத விதி. அதே சமயம், பெண்கள் என்று வரும் போது மட்டும் வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிறார்கள். ஏன் பெண்களின் உடையை மட்டும் எதிர்க்கிறார்கள்? உணவில் என்ன மாற்றம் நிகழ்ந்தாலும் இன்றும் வீடுகளில் பெண்களே சமைக்கிறார்கள், இருப்பிடம் மாறினாலும் பெண்களே இருப்பிடங்களை நிர்வகிக்கிறார்கள், சமய நம்பிக்கைகள் மாறினாலும் பெண்கள் தான் முக்கிய பங்குவகிக்கிறார்கள் இவை அனைத்தும் பெண்களின் வேலைகள் என்ற முத்திரையுடன் இன்றுவரை பெண்களாலேயே செய்யப்படுகிறது. ஆனால், பெண்கள் பொதுவெளியில் தங்களுக்குச் சரிசமமாக உடை அணிவதை மட்டும் ஆணாதிக்கச் சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அன்று பெண்கள் வீட்டுக்குள் முடங்கிக்கிடந்த வரை, உடை ஒரு பெரிய விசயமாகத் தெரியவில்லை. இன்று நிலைமை அப்படியில்லை, பல்வேறு விதமான வேலைகளின் நிமித்தமாக பெண்கள் பொதுவெளியில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டிய இன்றைய சூழலில் அணியச் சவுகரியமில்லாத உடைகளை அணியச் சொல்வதில் எந்தவித நியாயமும் இல்லை. இது அடிப்படை உரிமை சார்ந்த விசயம். நாகரிக சமூகத்தில் அவரவருக்குப் பிடித்தமான உடைகளை அணிவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. நாம் நாகரிக சமூகமா என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். பெண்கள் எப்படி உடை அணிந்தாலும் வெறிக்க வெறிக்கப் பார்ப்பது தான் ஆண்களின் பொதுக்குணம். அப்படிப் பார்ப்பதன் பின்னாலும் ஒரு நெடிய வரலாறு இருக்கிறது . இப்போது அதுவல்ல பிரச்சினை. சரி, பெண்கள் என்ன உடை அணிய வேண்டும்? எல்லாப் பெண்களையும் சாறி மட்டும் அணியச் சொல்லலாமா? இன்னும் எத்தனை நாளைக்குத் தான் கலாசார உடை என்று சொல்லியே அவஸ்தை தரும் சேலையை பெண்களை அணியவைக்கப் போகிறோமோ தெரியவில்லை. வேட்டி எல்லா இடங்களிலும் அணியச் சவுகரியமாக இல்லாததாலேயே ஆண்கள் வேறு உடைகளை அணிகிறார்கள். ஆண்களின் இந்த உடைக் கலாசாரத்தை மீறும் உரிமை பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. இயல்பாகவே எப்போதும் எந்த வயதிலும் பெண்கள் ஆண்களால் ரசிக்கப்படுவதையும், ஆண்கள் பெண்களால் ரசிக்கப்படுவதையும் பெரிதும் விரும்புகிறார்கள். விதவிதமான ஆடைகளைத் தேடி அணிவதிலும், விதவிதமான அலங்காரங்களைச் செய்து கொள்வதற்குப் பின்பும் இந்த ரசிக்கப்படுதல் தான் இருக்கிறது. ஏன் ஒரு பெண் பெண்களால் ரசிக்கப்படுவதையும், ஒரு ஆண் ஆண்களால் ரசிகப்படுவதையுமே விரும்புகிறார்கள் தானே. மற்றவர்களின் கவனத்தைக் கவர எந்த உடை அணிந்தாலும், ஏன் சேலையை அணிந்தாலும் மற்றவர்களைக் கவர தங்கள் உடல்பகுதி வெளியே தெரியும்படி உடையணியும் பெண்கள் இருக்கிறார்கள். இவர்கள் மொத்த சதவீதத்தில் எண்ணிக்கையில் மிகவும் குறைவு. ஆண்களிலும் இப்படி நடந்து கொள்பவர்கள் இருக்கிறார்கள் தானே. ஆண்களின் மன வக்கிரம் உச்சத்தை அடையும்போது, அருகே பெண் என்ற உருவில் யார் இருந்தாலும், எந்த உடை அணிந்திருந்தாலும் தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்துகிறார்கள். இந்த மாதிரி உடை அணிந்ததால் தான், இந்த வன் முறை நிகழ்ந்தது என்று யாராலும் நிரூபிக்க முடியாது. கலாசாரத்தில் நிகழும் தங்களுக்குத் தோதான மாற்றங்கள் குறித்தும்



யாரும் கேள்வி கேட்கவில்லை. தனது அதிகாரத்தைத் தக்க வைக்க கலாசாரத்தை ஒரு கருவியாக பயன்படுத்துகிறார்கள். ஜாதி, மதம், பெண் அடிமை போன்ற கூறுகளைத் தக்கவைக்கவே கலாசாரத்தை மீண்டும் மீண்டும் கையிலெடுக்கிறார்கள். ஆண்களே! பெண்களை நோக்கி எந்தக் கேள்வி கேட்பதற்கு முன்பும் உங்களைப் பார்த்து அதே கேள்வியைக் கேளுங்கள். பிறகு பெண்களைப் பார்த்துக் கேளுங்கள். சுதந்திரக் காற்றை அனுபவிக்கத் தொடங்கியிருக்கும் பெண்கள், அந்தச் சுதந்திரத்தை அதிகமாக அனுபவிக்கவே விரும்புவார்கள். அதிலும் கூடுதல் வாய்ப்பு பெற்றுள்ள பெண்ணியவாதிகள் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே அலட்டிக் கொள்வார்கள் . இது இயல்பு தான். நண்பர்களே! கலாசாரக் காவலர்களே! ஆணாதிக்கவாதிகளே! பெண்கள் அணியும் உடைக்கும் அவர்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைக்கும் துளியும் சம்பந்தமில்லை. இனியும் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளுக்கு பெண்களையும், அவர்களின் உடைகளையும் காரணமாக்க கலாசாரத்த இழுத்தீங்கனா' போங்கடா நீங்களும் உங்க கலாசாரமும்' என்று தான் சொல்ல வேண்டியிருக்கும். வரலாறை வைத்துப் பார்க்கும்போது, ஆணாதிக்க தந்தைவழிச் சமூகத்தின் (பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுதல்) கூறுகளாகவே பெண்கள் மீது நிகழ்த் தப்படும் வன்முறைகளைக் குறிப்பிட முடிகிறது. அடுத்து வரும் பெண்ணாதிக்க தாய்வழிச் சமூகத்தில் (ஆண்கள் அடிமைகளாக நடத் தப்படுதல்) ஆண்கள் மீதும் வன்முறைகள் நிகழ்த்தப்படலாம். இன்றைய கால கட்டம் இரண்டுக்கும் இடைப்பட்டதாக இருக்கிறது.

# வெற்றிக்கனி!




கிருஷ்ண தேவராயர் ஒருமுறை எதிரியைத் தாக்கப் படையோடு புறப்பட்டுப் போனார். ஒரு ஆற்றங்கரையைக் கடக்க வேண்டிய நேரத்தில், அரசவை ஜோசியர், 'மன்னா, இன்றைக்கு நாள் நன்றாக இல்லை. அடுத்த திங்கட்கிழமை போருக்குப் போனால் வெற்றி நிச்சயம்' என்று சொன்னார்.

கிருஷ்ணதேவராயர் குழம்பினார். அவ்வளவு நாள்கள் கொடுத்தால், எதிரி உஷாராகி விடுவான். அவன் எதிர்பாராத நேரத்தில் உடனே தாக்கினால்தான் வெற்றி.

ஆனால், ஜோசியர் சொன்ன பின் சந்தேகம் வந்துவிட்டது. தெனாலிராமனிடம் ஆலோசனை கேட்டார். தெனாலிராமன் ஜோசியரை அழைத்தான். 'எல்லோருக்கும் ஆருடம் சொல்கிறீர்களே, நீங்கள் இன்னும் எத்தனை வருடம் உயிரோடு இருப்பீர்கள் என்று சொல்ல முடியுமா?' என்று கேட்டான். 'இன்னும் இருபது வருடங்கள் வாழ்ந்திருப்பேன்' என்றார் ஜோசி யர். தெனாலிராமன் சடக்கென்று வாளை உருவி அவர் கழுத்தில் பதித்து, 'இந்த விநாடியே உங்கள் ஆரூடத்தை என்னால் பொய்யாக்க முடியுமா, முடியாதா?' என்று கேட்டான். ஜோசியரின் விழிகள் அச்சத்தில் பிதுங்கின. 'முடியும்.. முடியும்' என்று அலறினார். 'அவ்வளவுதான் மன்னா ஜோசியம்! உங்களுக்கு எதிரான எந்த ஜோசியத்தையும் உங்களால் பொய்யாக்க முடியும்' என்று புன்னகைத்தான் தெனாலிராமன். கிருஷ்ண தேவராயர் ஆற்றைக் கடந்தார். எதிரியை வெற்றி கொண்டார். நீங்கள் தீர்மானமாக இருந்தால், கோள்களால் உங்களை எதுவும் செய்ய முடியாது. வீண் சந்தேகங்களை விலக்கி, உங்கள் மீது நம்பிக்கை வைத்துத் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். முழுமையான ஈடுபாட்டுடன் செயல்படுங்கள். தானாகக் கனிந்து வரும் வெற்றிக்கனி!

# வர்ணம் தீட்டலாம் வாங்க...







# மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள்



ஒவ்வொரு காரியத்தையும் நாம் ஆரம்பத்தில் இருந்து செய்ய வேண்டியதில்லை.நாம் இப்போது இருக்கும் மனிதன் என்னும் நிலைக்கு நாம் ஒவ்வொருவரும் அமீபா என்னும் ஒரு செல் உயிரியில் இருந்து நமது வாழ்வை ஆரம்பிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.ஏற்கனவே நமது முன்னோர்கள் இதனையெல்லாம் கடந்து செய்து முடித்த அனுபவங்களை நாம் நமது டி.என்.ஏ. மூலமாக நமது விருப்பு வெறுப்புகளுக்கு இடம் இல்லாமல் எப்படி செயல்படுத்துகின்றோமோ அதே போல் நாம் நமது வாழ்வில் நமது காரியங்களைச் செய்ய சில மன இயந்திரங்களை ரோபோக்களை உருவாக்கலாம்.

நமது உறவினர்களுடனான உறவினைப் பராமரிக்க நம்முடன் பணிபுரியும் சக ஊழியர்களுடனான உறவைப் பராமரிக்க, நமது மேல் அலுவலர்களுடனான உறவினைப் பராமரிக்க, நமக்கு தொல்லை தரும் நபர்களுடனான உறவைப் பராமரிக்க, நமது அறிவைப் பெருக்க, இப்படி நமக்கு எப்போதெல்லாம் நமது செயலைச் செய்ய ஒரு அவசரகதியிலான எந்திரம் அல்லது ரோபோட் தேவைப்படுகின்றதோ அப்போதெல்லாம் நாம் இப்படிப்பட்ட எந்திரங்களை உருவாக்கலாம், ஏற்கனவே எப்படிப்பட்ட செயல்களைச் செய்ய நாம் எப்படிப்பட்ட எந்திரங்களைப் பயன்பாட்டில் வைத்து வருகின்றோம் என்பதை உணரவும் , அப்படி நாம் பயன் படுத்திக்கொண்டு வரும் எந்திரங்களை மேம்படுத்தலாம்.

எந்த ஒரு செயலிலும் நாம் ஈடுபடும் முன்பாக, அதில் தேவைப்படும் விசயங்களைப் பார்ப்போம் . முடிந்த வரையில் நமது ஆர்வத்தினைப் பொறுத்து அந்த செயலைப் பொறுத்து நாம் அறிந்துள்ள விசயங்களை முதலில் நினைத்துப் பார்ப்போம், நமக்கு அந்தக் குறிப்பிட்ட செயலைச் செய்ய என்ன வல்லமை இருக்கின்றது என்ன வல்லமைக் குறைவு இருகின்றது என்பதையும் நினைப்போம், நமது முன் அனுபவம்என்ன? குறிப்பிட்ட செயலைப் பொறுத்து நாம் நம்பியிருக்கும் பெரியோர்களது அனுபவம் என்ன? அறிவுரை என்ன? இப்படி பல விசயங்களை ஆராய்ந்து முதன் முதலில் அந்தச் செயலில் ஈடுபடுவோம் பின்பு அந்த செயலினால் விளைகின்ற விளைவின் அடிப்படையில் அந்த செயலில் நாம் அனுபவசாலி ஆகின்றோம். மீண்டும் அதே போன்ற ஒரு செயலைச் செய்யும் போது முதலில் நாம் அந்தக் குறிப்பிட்ட செயலைச் செய்யும் போது செய்த முன்னேற்பாடுகள் எதனையும் செய்ய வேண் டிய அவசியமில்லை.ஏற்கனவே நமது மனது அனுபவம் மூலம் உருவாக்கியுள்ள மனதின் புரிதலால் ஆன ரோபோட்டை வைத்து உடனடியாக அந்தச் செயலைச் செய் யலாம்.பின்பு தொடர்ந்து அந்தச் செயலைசெய்து முடிக்கும் போது முன்னர் செய்த தவறுகள் ஏதேனும் இருந்தால் அவற்றை நீக்கி முதலில் செய்ததை விட திறமையு டனும் துல்லியமாகவும் செய்யும் போது அந்த செயல் இன்னும் தெளிவானதாகவும் விரைவாகவும் முடிவடைவதைக் காண்கின்றோம். இப்போது நாம் குறிப்பிட்ட ஒரு விசயத்தில் பெற்ற அனுபவம் அறி வாகி நமது மனதில் பதிய வைக்கப்படுகின்றது. இது தான் மன ரீதியிலான ரோபோட். (தொடரும்)



# மனித முகத்தில் ஒரு மீன்!



அழகான மீன்கள் எப்படி உலகில் இருக்கின்றனவோ, சில விநோத மீன்களும் ஆழ் கடலில் உள்ளன. அதில் ஒன்றுதான் பிளாப் பிஷ். மனித முகத்தில் ஒரு மீன் இருந்தால் எப்படியிருக்கும்? இந்த மீனின் முகமும் அப்படித்தான். மீனின் முகத்தில் கண், நீண்ட மூக்கு, பொக்கை வாய் எல்லாம் மனித முகத்தையே ஞாபகப்படுத்துகின்றன. பார்ப்பதற்குக் கொஞ்சம் அருவருப்பாகவும் இது இருக்கும். அதனாலேயே இதை அசிங்கமான மீன் என்று அழைப்பவர்கள் உண்டு. ஆனால், இது விநோதமான மீன் என்கிறார்கள் ஆய்வாளர்கள். இந்த மீனை நம் நாட்டு கடல் பகுதியில் காணவே முடியாது. ஆஸ்திரேலியா, டாஸ்மானியா, நியுஸிலாந்து நாட்டுக் கடல் பகுதிகளில்தான் காண முடியும். இது ஒரு அடி ஸ்கேல் அளவே இருக்கும். கடலில் மிக ஆழத்தில் அதாவது கிட்டத்தட்ட 600 முதல் 1200 மீற்றர் அடிப்பரப்பிலிலேயே வாழ்கிறது இந்த மீன். உணவுக்காக இந்த மீன் இடத்தை விட்டு எங்கேயும் நகர்வதில்லை. இருக்கும் இடத்தைத் தேடி வரும் இரைகளைப் பிடித்து சாப்பிடும் அப்பிராணி மீன். உலகில் உள்ள அரிய மீன் இனங்களின் பட்டியலில் இது சேர்க்கப்பட்டுள்ளது.

# தெய்வம்



அன்னை போல உலகிலே
யார்தான் உண்டு வாழ்விலே,
அன்பைச் சொரிந்து
வளர்த்துமே
அணைத்துச் செல்லும்
தெய்வமே!
பெற்று வளர்க்கும்
தந்தைதான்
பிள்ளை சிறப்பாய்
விளங்கவே,
உற்ற கல்வி அளித்துமே
உயர்த்திக் காட்டும்
தெய்வமே!
மொழி முதலாய் பாடங்கள்
முயன்று கற்று உயர்ந்திட,
அழியாக் கல்வி தந்திடும்
ஆசான் எல்லாம் தெய்வமே!
பெய்யும் மழையைப்
போலவே,
பிறர்க்கு உதவி
செய்யுவோம்,
தெய்வம் தொழுது
வாழுவோம்
சிறந்து விளங்கி
மகிழுவோம்!

# சமஷ்டி முறையையே ஆதரிக்கிறது இந்தியா

## நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
"போரால் ஏற்பட்ட வடுக்களை ஆற்றுப்படுத்த இலங்கைக்கு சிறந்த சந்தர்ப் பம் கிடைத்துள்ளது" என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று தெரிவித்தார்.

இந்தியாவில் சகல மாநிலங்களுக்கும் அதிகாரங்களை வழங்கி அவற்றைக் கட்டியெழுப்புவதே எனது கொள்கையாகும். அந்தவகையில் சமஷ்டி முறைமையை நாம் ஆதரிக்கின்றோம். இதன்மூலமே இந்தியா முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

அத்துடன், இந்தியாவின் வளர்ச்சிக்கு இலங்கையின் ஐக்கியம் மிக முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்து சமுத்திர வலயத்தைப் பலப்படுத்துவதற்கு இரு நாடுகளின் உறவு முக்கியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

போரால் ஏற்பட்ட வ்டுக்களை ஆற்றுப்படுத்த இலங்கைக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று சுட்டிக்காட்டிய அவர், தேர்தல் பெறுபேறுகளையும் உதாரணம் காட்டிப் பேசினார்.

குறிப்பாக சிலப்பதிகாரம், இராமாயணம் ஆகியவற்றுடன் இலங்கை – இந்திய உறவைத் தொடர்புபடுத்தி பேசியதுடன் 'சிங்களத் தீவில் ஒரு பாலம் அமைப்போம்' என்ற பாரதியாரின் பாடல் அடியையும் அவர் தனது உரையில் நினைவு படுத்தினார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றுக் காலை கொழும்பு வந்தடைந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிற்பகல் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தார். சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றில் அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பின்னர் பிரதமர் மோடி சபைக்கு வந்தார்.

ஆளும், எதிரணி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று அவரை வரவேற்றனர். அதன் பின்னர் பிற்பகல் 3.27 மணி யிலிருந்து 3.57 வரை பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

இதன்போதே மேற்படி விடயங்களைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

பெரிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இலங்கை நாடாளு மன்றில் உரையாற்றுவதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன். ஆசியாவில் பழைமையான ஜனநாயக நாடாக இலங்கை திகழ்கின்றது. பிற நாடுகளுக்கு முன்னர் தனது பிரஜைகளுக்கு வாக்குரி மையை இலங்கை வழங்கியது. நான் பிரதமராகப் பதவியேற்கும் நிகழ்வில் பங்கேற்குமாறு தெற்காசியத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். அதில் அவர்கள் பங்கேற்றமை பெருமையளிக்கின்றது. அன்றைய நாள் ஜனநாயகத்தின் கொண்டாட்டமாக இருந்தது.

அயல்நாடுகளின் எதிர்காலமும் உறவுமுறையும் சிறப்பாக அமைய வேண்டும் என்பதே இந்தியாவின் அடிப்படை இலக்காக இருக்கின்றது. அந்தவகையில் மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற வேண்டும்.

அந்த இலக்கை படிப்படியாக அடைய முடியும். நாம் ஒரே மூலத்திலிருந்து உருவாகினோம். இரு நாடுகளும் இறைமையுள்ள நாடுகளாகும். இந்தியாவுடன் இலங்கை ஓர் எல்லையினால் பிரிக்கப்படவில்லை. எல்லா விடயத்திலும் அண்மித்தே காணப்படுகின்றன. உணவு முறை, காலாசாரம், மரபு சார் விடயங்களிலும் ஒன்றிணைந்து காணப்படுகின்றன. இரு நாடுகளுக்கிடையிலான உறவு மஹிந்த சங்கமித்தை காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இது சமாதானத்திற்கான தூதாகும். அத்துடன் வர்த்தகத்திற்கான உறைவிடமாகவும் ஆற்றலுக்கான இடமாகவும் இலங்கை இருக்கின்றது.

இந்து சமுத்திர வலயத்தில் இலங்கையின் வளர்ச்சி, இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். இந்து சமுத்திரத்தை பலப்படுத்த இரு நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இலங்கை முன்னுதாரணமாக செயற்படுகின்றது.

நான் 11 வருடங்களாக முதலமைச்சராக இருந்துள்ளேன். அதே வேளை, ஒரு வருடகாலமாக பிரதமராகவும் இருந்து வருகின்றேன். சகல மா நிலங்களுக்கும் அதிகாரங்களை வழங்கி அவற்றை கட்டியெழுப்புவது எமது நோக்கமாகும். நாம் சமஷ்டியை ஆதரிக்கின்றோம்.

ஒவ்வொரு இனத்திற்கும் வேறுபட்ட தேவை காணப்படுகின் றது. இதனால் மோதல்களும் ஏற்படுகின்றன. சகலருக்கும் அமைதியான தீர்வு வழங் கப்பட வேண்டும். எமது பிரச்சினைக்களுக்கு எமக்கே உரிய பாணியில் தீர்வு காணப்பட வேண்டும். பல்லின தன்மை நாட்டுக்குரிய ஆசீர்வாதமாக பயன் படுத்த வேண் டும்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்துள்ளது. போரால் ஏற்படுத்தப்பட்ட காயங்களை குணப்படுத்த வரலாற்று சிறப்பு மிக்க சந்தர்ப்பம் இலங்கைக்கு கிடைத்துள்ளது.

நடைபெற்று முடிந்த தேர்தலில் பொது மக்களின் பொதுவான குரலும் சகலரினதும் பொது இணக்கப்பாடு காணப்பட்டது. இது புதிய ஆரம்பமாகும்.

இலங்கை எதிர்காலத்தில் நல்லிணக்கம் , ஸ்திரத்தன்மை நாடாக மாறும் என நம்புகின்றோம். இலங்கையின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் மதிக்கின்றோம். அந்த அடித்தளத்திலிருந்து நாம் செயற்படுகின்றோம்.

அதேவேளை, பொருளாதார முன்னேற்ற விடயங்களிலும் இணைந்து செயற்பட விரும்புகின்றோம். இரு நாட்டு உறவுகளில் மேலும் பலப்படுத்தும் வகையில் நுழைவுவிசைவு கெடு பிடிகளும் தளர்த்தப்படவுள்ளது. இரு நாடுகளின் பாதுகாப்பு பொறி முறையும் அண்மித்து காணப்படுகின்றது. எனவே, ஒன்று விட்டு ஒன்று செயற்படுத்த முடியாது. அந்த வகையில் இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்க முடியாது. கடந்த காலங்களில் இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளோம். எதிர்காலத்திலும் நேசக் கரம் நீட்டப்படும்.

நாளை (இன்று) தலைமன்னாருக்கு செல்கின்றேன். ரயில் சேவையை ஆரம்பித்து வைப்பேன். சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்று பாரதியார் பாடியுள்ளார். அதை நாம் செய்வோம் – என்றார்.

(ற–சி)

# மோடியுடைய வருகை உறவை பலப்படுத்தும்

## சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம் நாடாளுமன்றத்தை ஸ்த்திரத்தன்மை மிக்க தாக்குவதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்தும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தார். அவரை வரவேற்கும் முகமாக வரவேற்பு உரையை நிகழ்தியபோதே சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"இலங்கை நாடாளுமன்றத்தில் இந்தியப் பிரதமர் உரையாற்றுவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் சமயம் கலாசாரம் ஆகிய விடயங்களில் நல்ல உறவினை பேணி வருகிறது. பௌத்த சமயம் இந்து சமயம் ஆகிய சமயங்களினூடான உறவினை பேணி வருகின்றோம்.

அதுமட்டுமல்லாது அபிவிருத்தி பாதுகாப்பு ஆகிய விடயங்களிலும் இரு நாடுகளும் ஒருமித்தே செயற்பட்டு வருகின்றது.இதுவும்எமதுஉறவினை பலப்படுத்துவதாக அமை கின்றது." – என்று அவர் குறிப் பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

"ஜனநாயகம் என்ற விடயத்தில் கூட இரு நாடுகளும் சமாந்தரமான நிலையில் காணப்படுகிறது. இரு நாட்டு உறவுகளை பலப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற நட்புறவு மன்றம் 2004ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த நட்புறவு மன்றத்தின் ஊடாக கடந்த காலங்களில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொண்டதுடன் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொண்டனர். இந்தப் பயணங்கள் இலங்கை வரலாற்றில் மைல் கல்லாக விளங்குகிறது.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட இதன் அடிப்படையிலேயே இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டார். நீண்ட காலமாக குஜராத்தின் முதல்வராக சேவையாற்றிய நீங்கள் (நரேந்திரமோடி) இளம் வயதிலேயே அரசியலுக்கு பிரவேசித்து உள்ளீர்கள். கடும் உழைப்பால் இன்று உயர்ந்துள்ள நீங்கள் இந்தியப் பிரதமராகவும் விளங்குகிறீர்கள். உங்களது பயணம் இந்த நாடாளுமன்றத்தை உறுதியளிப்பதுடன் உங்களது இரு நாட்டு உறவுகளையும் பலப்படுத்தும் என நாம் நம்புகின்றோம்."– என்று தெரிவித்தார். (ற)

# இந்தியாவின் ஸ்திர அரசு நாடுகளுக்கு உதாரணம்

## எதிர்க்கட்சித் தலைவர் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

மோடியின் அர்ப்பணிப்பு முயற்சியால் இந்தியாவில் உருவான ஸ்திரத்தன்மை மிக்க அரசு, வலயத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மோடியின் இலங்கை பயணம் இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை காலா காலத்துக்கும் தொடரச் செய் யும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விசேட உரையாற்றிய பின்னர் நன்றியுரை ஆற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

"நீங்கள் இலங்கையில் நாடாளுமன்றத்துக்கு சமுகமளித்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில் நன்றியுரை ஆற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமை கௌரவமாகவும் சிறப்புரிமையாகவும் கருதுவதுடன் உங்களின் வருகையுடன் எமது இந்த நாடாளுமன்றம் மற்றும் சபையும் இன்று சிறப்பான முறையில் வர்ணமயமாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உங்களுக்கு பாராட்டு தெரிவிக்கிறேன். உங்களின் இலங்கை பயணத்துடனாக இலங்கை இந்திய உறவில் புதுயுகம் உருவாகியுள்ளது.

பல தசாப்தங்களாக தொடர்கின்ற சமூக அரசியல் கலாசார மற்றும் பொருளாதார தொடர்புகள் இலங்கை இந்தியாவுக்கு இடையில் தொடர்கின்றது. கௌதம புத்தர் இலங்கைக்கு சில தடவைகள் வந்து எமது தாய் நாட்டுக்கு ஆசீர்வாதம் வழங்கியதாகவும் வரலாற்றுச் சான்றுகளின் ஊடாக அறிந்துகொள்ள முடிகிறது."–என்று அவர் தெரிவித்தார்.

"ஆரம்ப காலம் முதல் இலங்கை இந்தியாவுக்கு இடையில் மிக சிறந்த பொருளாதாரத் தொடர்பு உள்ளதால் இன்று எமது பொருளாதாரத்தின் பிரதானபங்காளராகஉள்ளது என நான் பெருமையுடன் கூறுகிறேன்.

இலங்கைக்கும் சாக் வலய நாடுகளில் உள்ள அரசியல் வாதிகளுக்கு நீங்கள் ஒரு முன்னுதாரணம் ஆனவர். கடந்த கால அரசுகளால் நிலைநாட்ட முடியாத ஸ்திரமான அரசை நிலை நிறுத்தி லோக் சபாவின் தனிப் பெரும் பான்மையைப் பெற்றுக்கொள்வதற்கும் அதனூடாக நிலையான அரசொன்றை நிலை நிறுத்துவதற்கும் உங்களது அர்ப்பணிப்பும் முயற்சியும் ஒரு தலைமைத்துவதற்கு ஏற்றதாகும். அதன்பிரதிபயனாக ஸ்தாபிக்கப்பட்ட நிலையான அரசு வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுக்கும் முன்னுதாரணமாக உள் ளது. உங்களது இந்தப் பய ணத்தின் ஊடாக எமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு கலாசாரத்துக்கு தொடர்பு என்பது எனது நம்பிக்கையாகும்"– என்று தெரிவித்தார். (ற)

# குவைத்தில் உயிரிழந்த யுவதியின் சடலம் இலங்கைக்கு

கொழும்பு, மார்ச் 14
குவைத் நாட்டில் உயிரிழந்த இலங்கை யுவதியின் சடலத்தை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சத்துருக்கான் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தாயான சோமசுந்தரம் சாந்தியா கடந்த முதலாம் திகதி குவைத் நாட்டில் பணிபுரிந்த வீட்டில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் யுவதியின் மரணம் தொடர்பில் உறவினர்களிடம் தெரிவிக்கப்படவில்லை.

ஒருமாத காலமாக யுவதியின் தொடர்பு ஏதும் கிடைக்காத நிலையில் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.இதனை தொடர்ந்தே யுவதியின் மரணம் உறவினர்களுக்குத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தற்போது சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நான்கு மாதங்களுக்கு முன்னர் குவைத் சென்ற (22) வயதுடைய குறித்த யுவதிக்கு நான்கு வயதுடைய குழந்தை ஒன்று இருப்பதாகவும்,இவரின் கணவர் ஏற்கனவே மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)


## கண்ணீர் அஞ்சலி



யா/ மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஜெ. ஜெயமோகன் அவர்களின் அன்புத் தந்தை கந்தையா ஜெயரட்ணம் (ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மெமோறியல் பாடசாலை சமூகம்,
மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர்களான ரவிமோகன், ரவிச்சந்திரன், ரவிகரன் (குட்டி) ஆகியோரின் தந்தையும், ஆரம்பகால உறுப்பினர்கள் ஆகிய வசந்தன் மற்றும் எமது முன்னாள் கிரிக்கட் வீரருமான நவீந்திரன் ஆகியோரின் மாமனாருமான

அ. நடராஜா

அவர்கள் கனடாவில் காலமானார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்,
விளையாட்டுக் கழகமும்

## ஐ.தே.கவில் நந்தன குணதிலக

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பாணந்துறை நகர சபையின் முன்னாள் முதல்வர் நந்தன குணதிலக்க போட்டியிட உள்ளதாக தெரிவித்துள்ளார்.
களுத்துறை மாவட்டத்தில் தான் போட்டியிட உள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால் எந்தத் தொகுதியில் போட்டியிட உள்ளார் என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

# என்னை வீழ்த்துவதற்கு இந்தியா, அமெ. உதவி

## சீறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, மார்ச் 14
என்னை வீழ்த்துவதற்கு அமெரிக்காவும், இந்தியாவும் தங்களது தூதரகங்களை வெளிப்படையாகவே பயன்படுத்தின என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார்.
சீனாவை தேவையற்ற விதத்தில் உள்நாட்டு அரசியலுக்குள் இழுப்பதன் மூலமாக இலங்கையின் புதிய அரசு இந்த நாட்டுக்கு அநீதியான விதத்தில் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
'சௌத் சீனா மோர்னிங் போஸ்டி'க்கு அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். சீனா அளித்த உதவிகளுக்காக அவர்கள் அந்த நாட்டுக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். அதற்கு மாறாக இவர்கள் சீனாவை ஒரு குற்றவாளிபோன்று நடத்த முயல்கின்றனர். சீனாவை இது தனது நாட்டின் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாக கருதவேண்டாம் என நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் என்னைத் தாக்குவதற்கு சீனாவைத் தாக்குகின்றனர். சீனா இதன் காரணமாக இலங்கைக்கு உதவுவதை நிறுத்தக் கூடாது. நான் சீனா சார்பான நபர் என்கின்றனர் அவர்கள். நான் சீனா சார்பான நபரோ அல்லது இந்தியா, அமெரிக்கா சார்பான நபரோ அல்லன். நான் இலங்கை சார்பானவன். நான் இலங்கையை அபிவிருத்தி செய்ய விரும்பினேன். அந்த விடயத்தில் எனக்கு உதவுவதற்கான வளங்களையும், விருப்பத்தையும் அவ்வேளை சீனா மாத்திரமே கொண்டிருந்தது. உதாரணத்துக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தையும், விமான நிலையத்தையும் நான் இந்தியாவுக்கு வழங்க முன்வந்தேன். ஆனால் அவர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. ஆகவே நான் யாரிடம் செல்வது? எனக்குத் தேவையான நிதியை அவ்வேளை தரக்கூடியதாகவிருந்தது சீனா மாத்திரமே. கொழும்பு போர்ட் சிற்றி திட்டத்துக்கு உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் அனுமதி வழங்கப்பட்டது என தெரிவிக்கப்படுவதில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.
அதிகாலையிலிருந்து இரவு வரை மக்கள் என்னை பார்ப்பதற்காக வந்துகொண்டிருக்கின்றனர். இதுவே எனது புது வாழ்க்கை. அவர்கள் என்னை அரசியலுக்கு மீண்டும் வருமாறு கோருகின்றனர். எனக்கு எதிராக வாக்களித்ததற்காக தாங்கள் மன்னிப்புக் கேட்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். நான் அவர்களிடம் என்னை ஓய்வெடுக்க விடுமாறு கேட்டுக்கொண்டுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
இலங்கையின் தற்போதைய அரசியல் நிலையை சுட்டிக்காட்டி கருத்துத் தெரிவித்துள்ள அவர், நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியேயும் எதிர்க்கட்சி என்ற ஒன்று இல்லாத நிலையை உலகில் வேறு எங்கும் நான் கண்டதில்லை. மக்கள் தங்கள் துயரங்களை தெரிவிப்பதற்கு எங்கு செல்வார்கள் என கேள்வி எழுப்பியுள்ளார்.
பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவீர்களா என்ற கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காத அவர், மக்கள் என்ன சொல்கிறார்கள் என பார்ப்போம். நான் மீண்டும் அதிகாரத்திற்கு வருவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் பதிலளித்துள்ளார்.
ஜனவரியில் நடைபெற்ற தேர்தலில் தான் தோல்வியடைந்தமைக்கு அமெரிக்காவையும், மேற்குலகையும், இந்திய புலனாய்வுப் பிரிவினரையும் ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார். இது மிகவும் வெளிப்படையான விடயம், அமெரிக்கா மற்றும் நோர்வே எனக்கு எதிராகச் செயற்பட்டது பகிரங்கமான விடயம். றோவும் எனக்கு எதிராகச் செயற்பட்டது என அவர் குறிப்பிட்டார்.
நான் இந்தியாவிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள் எனக் கேட்டேன். நீங்கள் இவ்வாறு செயற்படுவது வெளிப்படையான விடயம் என அவர்களிடம் சுட்டிக்காட்டினேன். இலங்கை மண்ணை நட்பு நாடொன்றிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என நான் அவர்களுக்கு உறுதியளித்தேன். ஆனால் அவர்களிடம் வேறு திட்டங்கள் இருந்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார். என்னை வீழ்த்துவதற்கு அமெரிக்காவும், இந்தியாவும் தங்களது தூதரகங்களை வெளிப்படையாகவே பயன்படுத்தின என்றும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். சீனாவின் நீர்மூழ்கிகள் இலங்கைக்கு வந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், சீன நீர்மூழ்கிகள் இலங்கைக்கு வரும் போதெல்லாம் நாங்கள் இந்தியாவுக்கு அது குறித்து அறிவிப்போம். சீன ஜனாதிபதி இங்கு வந்ததால் நீர்மூழ்கிகள் வந்தன. சார்க் மாநாட்டுக்காக 2008 இல் இந்தியப் பிரதமர் இங்கு வந்த போது எத்தனை கப்பல்களும், நீர்மூழ்கிகளும் இங்கு வந்தன என பாருங்கள். – எனவும் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.(த)

## காலக்கோள் விழா இன்று

தென்மராட்சி, மார்ச் 14
தொல்புரம் மத்திய சனசமூக நிலைய சக்தி முன்பள்ளியில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் இடம்பெறும்.
பெற்றோர் சங்கத் தலைவர் தே.புஷ்பராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரனும் சிறப்பு விருந்தினர்களாக சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி செல்வி சாருஜா சிவனேசன், சனசமூக நிலையத் தலைவர் சி.சதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வார். சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (த-9)

## சீன விஞ்ஞானிகள் ஹக்கீமுடன் சந்திப்பு



கொழும்பு, மார்ச் 14
இலங்கை வந்துள்ள சீன விஞ்ஞான மன்றத்தின் நிபுணர்கள் அடங்கிய குழுவினர் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமை சந்தித்துள்ளனர். நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சில் இந்த சந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்றது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சீனப் பயணத்தின்போது கை[illegible]சாத்திடப்படவுள்ள உடன்படிக்கையொன்று குறித்தும், பிரதானமாக தண்ணீரில் இரசாயனப் பொருள்கள் கலப்பதால் ஏற்படும் சிறுநீரக நோய்கள் தொடர்பிலான ஆய்வு கூடத்தை இங்கு அமைப்பது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் பேச[illegible]பட்டது.
இந்தக் கலந்துரையாடலின் போது, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினூடாக சிறுநீரக நோய்ப் பாதிப்புக்குள்ளான மக்கள் வசிக்கும் பின்தங்கிய பிரதேசங்களுக்கு விஷத்தன்மை வாய்ந்த இரசாயனப் பதார்த்தங்கள் அகற்றப்பட்ட சுத்தமான நீர் வழங்கப்பட்டு வருகின்றது. உத்தேச ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவதற்குத் தேவையான காணியை பெற்றுக் கொடு[illegible]பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சீனாவில் சிறுநீரக கோளாறுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நவீன சிகிச்சை முறைகளையும், நிபுணத்துவத்தையும் இலங்கைக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு சீனா முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கது. கற்பிட்டி பிரதேசத்துக்கும், பதவியா மற்றும் வெலிஓயா பிரதேசங்களுக்கும் சென்றிருந்த பொழுது சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டோரின் பரிதாபகரமான நிலையை அவதானித்தேன் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
இந்தக் கலந்துரையாடலில் கண்டி நீர்வழங்கல் திட்ட பணிப்பாளர் சரத் காமினி, நீர்வழங்கல் உதவிப் பொது முகாமையாளர் ஆர்.எஸ்.ஜீ.ஜோர்ஜ், அமைச்சரின் இணைப் புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-10)

# உள்நாட்டு விவகாரங்களில் மோடி தலையிடக் கூடாது

## ராஜீவைத் தாக்கிய கடற்படைச் சிப்பாய் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 14
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடாது என்று, முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கிய இலங்கைக் கடற்படைச் சிப்பாயான விஜித ரோஹண விஜேமுனி தெரிவித்துள்ளார்.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம் குறித்து, இந்தியன் 'எக்ஸ்பிரஸ்' நாளிதழுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அவர்–
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நான் விரும்புகிறேன். அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் ஒரு நல்ல மனிதர். ஆனால் அவர், எமது நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடாது. அவர் எமது பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்க வேண்டும். ராஜீவ்காந்தி போன்று அவரும் தலையீடு செய்ய முனைந்தால், தமிழர் பிரச்சினை மீளவும் கிளம்பும்.
ஆயிரக்கணக்கான இலங்கைப் படையினரும், 1500 இந்தியப் படையினரும், போரில் மரணமாகியுள்ளனர். மோடி இலங்கை அரசுடன் உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டும். அமைதியைப் பேண வேண்டும். போர் முடிவுக்கு வந்த பின்னர், இங்கு அமைதி நிலவுகிறது. தமிழர்கள் மீன்பிடிக்கிறார்கள், விவசாயம் செய்கிறார்கள். பொருளாதாரமும், சுற்றுலாத் துறையும் நன்றாக இருக்கிறது. அவர்களுக்கு ஆதரவு வழங்கக் கூடாது என்று, தலையீடு செய்யக் கூடாது என்று நீங்கள் அவருக்கு கூற வேண்டும் என்றும் – அவர் தெரிவித்துள்ளார்.
இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம், இலங்கைக்கு மேற்கொண்ட அரசுமுறைப் பயணத்தில், கொழும்பில் அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையின்போது, கடற்படைச் சிப்பாயான விஜித ரோஹண விஜேமுனி துப் பாக்கியினால் தலையின் பின்புறமாகத் தாக்கியிரு ந்தார். எனினும் ராஜீவ்காந்தி சற்று நகர்ந்து கொண்டதால் பெரும் பாதிப்பில் இருந்து தப்பிக் கொண்டார்.
இதையடுத்து, கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட விஜித ரோஹண விஜேமுனி, பின்னர் விடுவிக்கப்பட்டு, தற்போது நுகேகொடவில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/=,
Hotel Villa City 422, Galle Road.
வெள்ளவத்தை. 072 255 2222

**ஆள் தேவை**
எமது நிறுவனத்துக்கு வேலைக்கு ஆள் தேவை.
(பெண்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:- 077 8511265
077 9229333

**தவறிவிட்டது**
தொட்டிலடி சங்கானையைச் சேர்ந்த சந்திரன் சகிலன் என்பவரின் தே.அ.அ (791981700V) மற்றும் மோட்டார் சைக்கிளின் முக்கிய ஆவணங்கள், JOB I.C, NSB, சம்பத், கொமர்ஷல் வங்கிகளின் ATM CARD என்பன அடங்கிய பேர்ஸ் சங்கானைக்கும் தொட்டிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 077 3876614, 077 6315729

**கணினி மலிவு விற்பனை**
HP Full Set Computer
24750/= மட்டுமே
FREE - NK PHONE (இலவசம்)
HP DELL ASUS 3rd 4th 5th Generation
சகல விதமான LapTop களும் மலிவு விலையில் உண்டு.
ST. ANTONY'S 187, KKS ROAD, JAFFNA TOWN
021 222 4865
0750698608
(16 ஆவது வருட சேவையில்)

**Majestic Cineplex Jaffna**
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**பாராட்டு விழா அழைப்பு**
இந்து கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது பெற்ற பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறஉள்ளது.
தலைமை
வாழ்நாள் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர்
காலம்
15.03.2015 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 02.00 மணி
இடம்
நீர்வேலி வாய்க்காற்தரவைமூத்தவிநாயகர் ஆலய மண்டபம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விழாக்குழுவினர். நீர்வேலி.

# கொம்பனி வீதி குடியிருப்புகளை இழந்தோருக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் ஹக்கீம் நடவடிக்கை



கொழும்பு, மார்ச் 14

கொழும்பு, கொம்பனித்தெரு, ஜாவா ஒழுங்கை, மலாய் வீதி பிரதேச குடியிருப்பாளர்களுக்கும், அங்கு வியாபார நிலையங்களை வைத்திருந்த உரிமையாளர்களுக்கும் உரிய நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் ஜாவா ஒழுங்கை, மலாய் வீதி உள்ளிட்ட பிரதேசங்களில் வீடுகளையும், வியாபார நிலையங்களையும் இழந்தோர் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமை கடந்த வியாழக்கிழமை சந்தித்து தமது நிலைமை தொடர்பில் எடுத்துக் கூறினர்.

குறித்த பிரதேசத்தில் 456 குடியிருப்புகளும், 98 வியாபார நிலையங்களும் கடந்த அரசினால் அகற்றப்பட்டன. இதன் காரணமாக அவற்றின் உரிமையாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. அங்கு பழைமை வாய்ந்த பள்ளிவாசல் மட்டுமே எஞ்சியிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களின் முறைப்பாடுகளைக் கேட்ட பின்னர் அமைச்சர் ஹக்கீம் கூறுகையில்,

இந்த விடயம் தொடர்பில் நாம் அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்துப் பெறப்பட்ட தீர்மானத்தின் படி முன்னைய அரசு எடுத்த முடிவொன்றின் காரணமாக இங்கு பாதிக்கப்பட்ட மக்களின் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு குழுவை நியமித்துள்ளோம். அந்த குழுவில் நகர அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த எமது அமைச்சின் பிரதிநிதிகள் மூவரும், வீடமைப்பு அமைச்சின் பிரதிநிதி ஒருவரும், கொழும்பு மாநகர சபையின் பிரதிநிதி ஒருவரும், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளையும், குறைபாடுகளையும் அந்தக் குழுவினர் விசாரித்தறிந்த பின்னர் அவர்களுக்குரிய நிரந்தரமான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். தமது இருப்பிடங்களையும், வியாபார இடங்களையும் இழந்தோர் குறித்த குழுவினரிடம் தங்களது பிரச்சினைகளை எடுத்துக்கூற முடியும். அந்தக் குழுவின் விதந்துரைகளுக்கு அமைவாக அமைச்சரவையை அறிவுறுத்துவதோடு இரு மாத காலங்களுக்குள் இதற்கான தீர்வை வழங்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இழப்புகள் பற்றிய சரியான மதிப்பீடுகளை மேற்கொள்வதிலும் சிக்கல்கள் உள்ளன. அவையும் சீர் செய்யப்பட வேண்டும். நகர அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றியும் பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கிறது. அத்துடன் சட்ட ரீதியாக இந்தப் பிரச்சினை அணுகப்பட வேண்டும். பிரதேச செயலாளர்களின் பங்களிப்பும், மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்பும் இதற்கு அவசியமாகும்–என்றார்.

(த–10)

விளம்பரத் தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### பகபதி குணரத்தினம்



பிறப்பு : 20.10.1960 இறப்பு : 12.03.2015

புத்தூரைப் பிறப்பிடமாகவும் 99/10, புகையிரத வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட போதகர் பசுபதி குணரத்தினம் (பென்ஜமீன்) கடந்த (12.03.2015) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் பசுபதி சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், பொன்னன் அமுதம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், பகவதி அபிகாயில் அவர்களின் அன்புக் கணவரும், விஜயயுகேந்தினி (எப்சிபா), சுகிர்தகுணாளன், கிமோல்சன், கிமோல்ஷனா, யூலியா, அனோஜிகா, பியூலா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, தேவி, சாந்தி, வரன், சொக்கன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுகந்தினி, விக்ரறி ஆகியோரின் பாசமிகு மாமனும், எசேக்கியா, நிகேமியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஜெபம் இன்று (14.03.2015) சனிக்கிழமை முற் பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அடக்க ஆராதனைக்காக பூதவுடல்கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், சகபோதகர்கள், நண்பர்கள், விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

99/10, புகையிரத வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 0609347

## மரண அறிவித்தல்

### திருமதி பெருமாள் நங்கை நடராசா

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் இருபாலை வீதி, கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாவும் கொண்ட திருமதி பெருமாள் நங்கை நடராசா நேற்று (13.03.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவி- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மகளும், இராமலிங்கம் - நாகமுத்து தம்பதியரின் மருமகளும், நடராசாவின் (அச்செழு) அன்பு மனைவியும், கலாநிதி, பரமேஸ்வரன், கலாசோதி, கலாமதி, கலாஆனந்தி ஆகியோரின் அன்புத் தாயும், மனோகரன், கலைவாணி, இரவீந்திரன், சத்தியஜீவன், காலஞ்சென்ற அசோகன் ஆகியோரின் மாமியும், துவாரகா, ஹரிசனன், பிரியங்கா, கேதீஸ்வரன், பிரமிலா, கேசவன், ஒமேஸ், தாட்சாயணி, திவ்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இருபாலை வீதி, கோண்டாவில்.
(சிவபூமி பாடசாலை முன்பாக)

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 4270537

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னபூரணியம்மா நடராசா

யாழ். வதிரி காளையன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியா கோவையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணியம்மா நடராசா கடந்த (11.03.2015) புதன்கிழமை தமிழ்நாடு கோயம்புத்தூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி K.R.முருகேசபிள்ளை அன்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவ்களான திரு.திருமதி வைத்திலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதிரியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற தி. நடராசாவின் (நிள அளவையாளர் -சேவையர்) அன்பு மனைவியும், வடிவேல் முருகன் (கனடா), திருமதி சசிதேவி பாலசுப்பிர மணியம் (கோயம்புத்தூர்), சச்சிதானந்தகுமார் (இலங்கை), அன்னலிங்கம் (கனடா), முருகதாசன் (இந்தியா), சிவலோகநாதன் (கனடா), வைகுந்தநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலசுப்பிரமணியம், ராஜேஸ்வரி, மகிமலர், சாமினி, மீனாம்பிகை, சுகந்தி, மாலதி ஆகியோரின் பாசமிகு மாமியும், ஸ்ரீஸ்கந்தராஜா, Dr. கேசவன், Dr.கலைவாணி, கோகுலன், தாட்சாயினி, நிமலரூபன், நிரூபன், சுஜீவன், அமிர்தன், இளநகையோன், இளமாறன், தூய வன், சமரன், சாகரன், பிரணவன், யுகதுர்க்கன் ஆகியோரின் பாசமிகு பாட்டி யும், இளமுகிலன், இனியவன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியா கோயம்புத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெறும். அதேநாளில் (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை அன்னாரது பிறந்த வதிவிடத்தில் (சசி மங்களம், வதிரிச் சந்தி கரவெட்டி வடக்கு) துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தொடர்புகளுக்கு:- கணேசவேள் 077 2373538, 021 226 4904

சசி (இந்தியா) 0091422242329 1
சச்சி(இலங்கை) 0773918674
சிவம் (கனடா) 0014166401134

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி செல்லம்மா மாணிக்கம்

நுணாவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா மாணிக்கம் நேற்று (13.03.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மாணிக்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகமுத்து, ஞானபூசணம் ஆகியோரின் சகோதரியும், இந்திராணி, இன்பராணி (கனடா), காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் தர்மலிங்கம், இதயராணி, வேதலிங்கம் (டுபாய்), புஸ்பராணி, பிரேமராணி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், சண்முகராசா, சின்னத்தம்பி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் வடிவேல், கோகிலாதேவி, துரைசிங்கம், கிரிதரன், ஆகியோரின் பாசமிகு மாமியும், விஜிதா, சுகிந்திரா, சுமனா, சுரேந்திரன், சுரேக்கா, சுபித்திரா, சுகன்ஜா, கிரிசாந்தன், தாரணி, திலீபன், கீர்த்திகா, அரவிந்தன், நித்தியா, துசியந்தி, ஜனார்த்தனன், அனுஷன், முகுந்தன், கேசவன், மாதங்கி, மயூரன், மதுரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கோபிகா, முரளி, ஆரபி, பைரவி, வினோதன், லக்ஷன், விதுசன், ஹரிஷ், நெவின், கெல்வின், வினிஷா, டுலக்ஷ்சி, சுருதி, ஜனனி, ஜெவின், சுவேதன், வாசானா, அக்சயன், துவாரகா, லசாணி, தருணிகா, கேதாரன், அபிராம், என்னியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல் வீதி, நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி இராஜேஸ்வரி அம்பலவாணர்

காரைக்கால் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி அம்பலவாணர் கடந்த (11.03.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கனகம்மா தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வியும்,காலஞ்சென்றவர்காளான நாகர் - செல்லம்மா தம்பதிரயின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலவாணரின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற விஸ்வநாதன் (ஜெயா) மற்றும் யோகேஸ்வரி (விசி), கலையரசி (கலா -லண்டன்), சாரதா (சாந்தா - ஜேர்மனி), கதிர்காமநாதன் (சுதா-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், தங்கராணி, இராஜவேல் (ரவி), குணராஜா (குணம், லண்டன்), புனிதநாதன் (ஜேர்மனி), தங்கராணி (ஜேர்மனி), கோபிராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, இராசலிங்கம் மற்றும் இந்திராணி, இந்திரேஸ்வரி, காலஞ்சென்ற கபீந்திரராசா மற்றும் ரவிச்சந்திரிகா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தனுசன் (ஜேர்மனி), லக்ஷன் (ஜேர்மனி), நர்மிஷா (ஜேர்மனி), சிந்துஜா, சிந்துஜன், டனுசிஜன், டனுசிகா, லெவின் (லணடன்), கெவின் (லண்டன்), தனுசன் (ஜேர்மனி), தனுசிகா (ஜேர்மனி), மிருசிகா (ஜேர்மனி), மனுஷா (ஜேர்மனி), கிஷாந் (ஜேர்மனி), அனித் (லண்டன்), அனிக்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## பொறுமை

நரேந்திர மோடி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்றுமாலை 6 மணியில் இருந்து 6.30 வரையில் கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, க.சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரிடம் 'உதயன்' வினவியபோது, " நீண்டகாலப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேச்சின் ஆரம்பத்தில் எம்மால் எடுத்துரைக்கப்பட்டது. வடக்கு – கிழக்கு இணைந்த தீர்வுத் திட்டத்தின் அவசியம் வலியுறுத்தப்பட்டது."– என்று தெரிவித் தனர்.

தொடர்ந்து இதுகுறித்துக் கூறுகையில், "தற்போதைய பிரச்சினைகளான காணிப் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனோர் விவகாரம் என்பவை தொடர்பிலும் சுட்டிக்காட்டினோம்.

இந்தியப்பிரதமர்பேசும்போது, கூட்டுறவு, சமஷ்டி ஆட்சியில் நம்பிக்கை கொண்டவன் நான். மாநிலங்களுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பதில் ஆசை கொண்டவன் – என்று கூறினார். இந்தியப் பிரதமரின் இந்தக் கருத்துக்கு இரா.சம்பந்தன் நன்றி தெரிவித்தார்.

பேச்சின் ஆரம்பத்திலேயே இந்தியா மீது நம்பிக்கை இருக்கின்றதா? என்று கேட்டார். சகலருக்கும் நம்பிக்கை இருக்கின்றது என்று தெரிவித்தோம்.

நாம் உங்களுடனேயே எப்போதும் இருப்போம். நாம் உங்களுக்கு முழுமையான உதவிகளைச் செய்வோம். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என்னுடன் தொடர்பை ஏற்படுத்த முடியும். கூட்டுறவான சமஷ்டி ஆடசிக்கு உதவி செய்வோம். தற்போதுதான் புதிய அரசு இங்கு பதவியேற்றுள்ளது. ஆட்சி மாற்றத்துக்கு நீங்களும் உதவி செய்துள்ளீர்கள். புதிய அரசுடன் இன்று பேசினேன். அவர்கள் பல்வேறு விடயங்களைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

அவர்கள் எனக்கு எந்த உறுதியையும் தரவில்லை. ஆனால் அவர்கள் சாதமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த மஹிந்த அரசின் ஆட்சிக்காலத்தில் செயற்பட்டதைப் போன்று இப்போது செயற்பட மாட்டீர்கள் என்று நம்புகின்றேன். புதிய அணுகுமுறையைப் பின்பற்றுங்கள். புத்திசாலித்தனமான மாற்றத்தை உங்களில் ஏற்படுத்துங்கள். இதனை நான் அறிவுரையாகக் கூறவில்லை.

பொறுமையாக இருங்கள். இது 60 ஆண்டுகாலப் பிரச்சினை. இந்தப் பிரச்சினை பல்வேறு கோணங்களைக் கொண்டது. பழைய விடயங்களை விட்டு, புதிய விடயங்களைச் செயற்படுத்துங்கள். கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள். தவறவிட்டால் உங்கள் மக்கள் தொடர்ந்தும் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியே இருக்கும் என்று மோடி குறிப்பிட்டார். – என்றும் தெரிவித்தனர்.

"சம்பந்தனுடன் அவர் பேசும்போது, நீங்கள் முதிர்ச்சியான அரசியல்வாதி. அனுபவமான அரசியல்வாதி. உங்கள் வாயிலிருந்து பொறுப்பற்ற வார்த்தைகள் வரவில்லை. ஆனாலும் உங்கள் பக்கத்திலிருந்து (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) பல்வேறு கோணங்களில் வார்த்தைகள் வருகின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை வெளியிடுவது நல்லதல்ல. ஒரே நிலைப்பாட்டை நீங்கள் பேணுங்கள். உங்கள் நிலைப்பாட்டை நான் தளர்த்தச் சொல்லவில்லை. ஆனால் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைக் குழப்பும் விதத்தில் உங்கள் பக்கத்தில் இருந்து வேறு விதமான கோணங்களில் குரல் எழுப்பப்படுகின்றது. புதிய அணுகுமுறையைச் சிந்தியுங்கள். இந்தியா எப்போதும் உங்களுடனேயே இருக்கும்."– என்றும் தெரிவித்தார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். (ற–5)

## 19 பீரங்கி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரு நாள் பயணமாக, நேற்றுக் காலை 5.25 மணிக்கு இலங்கையை வந்தடைந்தார். இவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார். அதன் பின்னர், இந்தியப் பிரதமர் தாஜ்சமுத்திரா ஹோட்டலுக்குச் சென்றார்.

காலை 9.20 மணிக்கு, காலி முகத்திடலிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி வருகை தந்தார். குதிரைப் படையின் அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டார். ஜனாதிபதி செயலக வாசலிருந்து கண்டிய நடனத்துடன் அழைத்துச் செல்லப்பட்ட மோடிக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது. இதன் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால கைலாகு கொடுத்து மோடியை வரவேற்றார்.

இதன் பின்னர் இருவரும் இணைந்து முப்படையினரின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஏறி நின்றனர். முப்படையினரும் அணி வகுப்பு மரியாதையைச் செலுத்தினர். இதன் போது இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட இந்தி யப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி செயலகத்தினுள் சென்று சந்திப்புக்களில் ஈடுபட்டார். ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் தனியான சந்திப்புக்களில் ஈடுபட்ட அவர், அதன் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ரவூப் ஹக்கீம், லக்ஸ்மன் கிரியெல்ல உள்ளிட்ட அமைச்சர்களுடனான கலந்துரையாடலில் பங்கேற்றார்.

இந்தச் சந்திப்புக்களின் பின்னர், கொழும் பிலுள்ள மஹாபோதி சங்கத்துக்கு இந்தியப் பிரதமர் சென்றார். அங்கு பௌத்த பிக்குகளிடம் அவர் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, மதிய போசன விருந்துடன் இந்தியப் பிரதமர் சந்தித்தார். இந்தச் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு பி.ப 3 மணிக்கு நாடாளுமன்றத்துக்கு சென்ற நரேந்திர மோடி, அங்கு உரையாற்றினார். இதன் பின்னர் பல்வேறு அரசியல் தலைவர்களையும் அவர் சந்தித்தார்.

இதேவேளை, 1987 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைக்கு வந்த போது, அவருக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. இதன் போது இராணுவச் சிப்பாய் ஒருவர், ராஜீவ் காந்தியை துப்பாக்கியால் தாக்க முற்பட்டிருந்தார். இதன் காரணமாகவே, தற்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அணிவகுப்பில், முப்படையினருக்கும் மோடிக்கும் இடையில் பத்து அடி இடைவெளி பேணப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5)

## யாழ்ப்பாணத்தில்

இந்தியப் பிரதமர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக இன்று வரவுள்ளார். அத்துடன் யாழ்ப்பாணத்துக்கு வரும் இரண்டாவது வெளிநாட்டுப் பிரதமர் என்ற பெருமையும் மோடியையே சார்ந்துள்ளது. அவரது வருகையை முன்னிட்டு யாழ்.நக ரில் இந்திய – இலங்கை தேசிய கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

இன்று காலை அநுராதபுரத்திற்கு வரும் இந் தியப் பிரதமர் நரேந்திர மோடி அங்கு மகா போதியில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர், தலைமன்னாருக்குச் செல்வார். அங்கு அரைமணி நேரம் மாத்திரம் தங்கியி ருப்பார்.

அங்கிருந்து இந்தியப் படைக்குச் சொந்த மான விசேட ஹெலி மூலம் யாழ்ப்பாணத்துக்கு மோடி மதியமளவில் வரவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வரும் மோடி, பொதுநூலகத்தில் வைத்து யாழ்ப்பாண கலாசார மையத்துக்கு அடிக்கல் நடவுள்ளார். அதன் பின்னர் வடக்கு முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையுடன் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் பளியக்காரவின் மதிய போசன விருந்தில் அவர் பங்கேற்கவுள்ளார். இதன் பின்னர், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்துக்குச் செல்லும் மோடி அங்கு விசேட யாகத்தில் கலந்து கொள்ளவுள்ளார். இறுதியாக இளவாலையில் வைத்து இந்திய வீட்டுத் திட்ட கையளிப்பில் பங்கேற்கவுள்ளார்.

மோடிபயணம்செய்யவுள்ளகே.கே.எஸ். வீதியில் நேற்று மாலையிலிருந்தே பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இராணுவத்தினரும் குறிப்பிட்ட தூர இடைவெளியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். மோடியின் பாதுகாப்புக்காக இராணுவத்தினரின் ஆமட்கார் கே.கே.எஸ் வீதியில் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் கறுப்புப் பூனைப் படையினரும் மோடி பங்கெடுக்கும் நிகழ்வுகளில் நிறுத்தப்பட்டுள்ளனர். மோடி பயணம் செய்யும் வீதிகளில் வாகனங்கள் நிறுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையான இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற போது கூட இல்லாத அளவிற்கு கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை, கடந்த 2013 ஆம் ஆண்டு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், பலாலி விமான நிலையத் திலிருந்து பலாலி வீதியூடாக யாழ். பொது நூலகத்துக்கு வருகை தந்த போது கூட இந்தளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (ற–5)

## 25 ஆண்டுகளின்

வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் கிராம சேவையாளர் பிரிவில் 233 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தினரிடமிருந்து நேற்று பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது. பருத்தித்துறை – கே.கே.எஸ் வீதியில் வளலாய் கிராமத்துக்கு செல்வதற்கான எல்லைப் பகுதியில் பொதுமக்களிடம் வலி.கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

**பதிவை மீறிய வரவு**

நேற்றுக் மு.ப. 10 மணிக்கு குறித்த இடத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் பொதுமக்கள் காலை 8 மணி முதலே அந்தப் பகுதியில் குவிந்தனர். பொது மக்களிடம் காணி ஆவணங்கள் மற்றும் குடும்ப அட்டை என்பவற்றைப் பெற்று வலி.கிழக்குப் பிரதேச செயலக ஊழியர்கள் பதிவு நடவடிக்கைகள் மேற்கொண்டனர். அதன் பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

வளலாய் பிரதேசத்தில் மீள்குடியமர்வதற்காக 272 குடும்பங்கள் இதுவரை பதிவு செய்திருந்தாலும், நேற்று 283 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. தமது பிரதேசங்கள் எங்கே விடுவிக்கப்படப் போகின்றன என்ற அடிப்படையில் பதிவுகளை மேற்கொள்ளாது இருந்ததாக, புதிய பதிவுகளை நேற்று மேற்கொண்டோர் தெரிவித்தனர்.

**தாமதப்படுத்திய படையினர்**

பதிவுகளை மேற்கொண்டு மக்களை உள்ளே அனுமதிப்பதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனாலும் படையினர், நேற்றுக் காலையே, குறித்த வாசல் பகுதியில் அமைந்திருந்த மறியல் மற்றும் தமது முகாம் என்பவற்றை அகற்றினர். இதனால் மு.ப. 10 மணிக்கு பொது மக்கள் தமது காணிகளை பார்ப்பதற்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. படையினர் முகாமை அகற்றிய பின்னரே பொதுமக்கள் காணிகளைப் பார்ப்பதற்கு ஆவலுடன் சென்றனர். 75 வயது, 80 வயது முதியவர்கள் மற்றும் இளைஞர்கள், என்று பெருமளவிலானோர் தமது சொந்த நிலங்களுக்குச் செல்ல துடிப்புடன் வந்தனர்.

**பற்றைக்காடுகள் மாத்திரமே**

தமது நிலத்துக்குள் 25 வருடங்களின் பின்னர் காலடி எடுத்து வைத்த சந்தோசத்துடன் மக்கள் நுழைந்தனர். பிரதான வீதியின் இருமருங்கிலும் பற்றைக்காடு பரந்து விரிந்து வளர்ந்திருந்தது. பாதைகள், ஒழுங்கைகள் இருந்தமைக்கான எந்தவொரு தடயமும் இருக்கவில்லை. மக்கள் பாதம் படாத இடங்கள் எல்லாம் பற்றைகள் படர்ந்திருந்தது. ஒரு சில வீடுகள் மாத்திரமே, கதவு – நிலைகள் – ஜன்னல்கள் – ஓடுகள் கழற்றப்பட்ட நிலையில் வெறுமனே காட்சியளித்தன.

தோட்டக் காணிகள் எல்லாவற்றையும் மூடி புதர்களே காணப்பட்டன. தென்னை மரங்கள் மாத்திரம் அடையாளத்திற்கு நின்றிருந்தன. சில கல் வீடுகள் இராணுவத்தினரால் புல்டோசர்கள் மூலம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. அன்றைய காலத்தில் பிரபலமாக இருந்த பாம்பீச் ஹோட்டல் இருந்த இடம் தெரியாமல் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது.

**நிரந்தர வேலி**

இதுவரை காலமும் அமைக்கப்பட்டிருந்த தடுப்புவேலி சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரமே பின்நகர்த்தப்பட்டது. இராணுவத்தினர் தமது முகாம்களை கழற்றி, ஒரு கிலோ மீற்றர் தூரத்தின் பின்னால் நிரந்தரமாக அமைக்கும் பணிகளை நேற்று மேற்கொண்டிருந்தனர். அத்துடன் இராணுவத்தினரின் முகாமுடன், பிரதான வீதியின் இருமருங்கிலும் முள்ளுக் கம்பியிலான நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

**இராணுவக் கெடுபிடி குறையவில்லை**

மக்கள் மீள்குடியமர்வுக்காக நேற்று அனுமதிக்கப்பட்ட நிகழ்வில், பெருமளவான புலனாய்வாளர்களும் மக்களுடன் மக்களாக கலந்து கொண்டிருந்தனர். அத்துடன், ஊடகவியலாளர்கள் ஒளிப்படங்கள் எடுப்பதற்கும் இராணுவத்தினர் கடுமையாக நடந்து கொண்டனர்.

நேற்றைய இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்துகொண்டிருந்தார். மேலும், பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை வலி.கிழக்குப் பிரதேச சபை மேற்கொண்டிருந்தது.

இதேவேளை, பொதுமக்கள் தினமும் காலையில் சென்று தமது காணிகளைத் துப்பரவாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என்று வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

அதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருகின்றார் என்பதற்காகவே இப்போது விடுவிக்கின்றனர். இது ஏமாற்று நடவடிக்கைதான் என்றும் ஒரு பகுதி மக்கள் தெரிவித்தனர். (ற–5)

## தமிழர்களுக்கு

இலங்கைக்கு இரு நாள் பயணமாக நேற்று வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபாலவை, மூடிய அறையினுள் தனித்துச் சந்தித்தார். இதன் பின்னர், ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களுடன் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் உரையாற்றுகையிலேயே, இந்தியப் பிரதமர் மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கைக்கு 28 வருடங்களின் பின்னர் பயணம் செய்தமை எனக்குப் பெருமையளிக்கிறது. இறுதியாக இந்திய பிரதமர் ஒருவர் அரசுமுறைப் பயணமாக 1987 ஆம் ஆண்டே இலங்கை வந்தார். இந்தக்கால இடைவெளிக்குப் பின்னர் நான் இங்கு வந்துள்ளேன். எனக்கு இலங்கை அளித்த வரவேற்பு பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில், இலங்கையில் பௌத்தம் வந்த நாளில் இருந்தே தொடர்புள்ளது.

இலங்கை ஜனாதிபதியாக பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன இந்தியாவிற்கு முதல் பயணம் செய்து எங்களை பெருமைபடுத்திவிட்டார். இரு நாடுகள் இடையேயான வர்த்தக உறவுகள் மேம்படுத்தப்படும். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி முதல் இலங்கைக்கு சுற்றுலா பயணம் செல்பவர்களின் நுழைவிசைவுக்காலத்தை நீடிக்க உள்ளோம்." – என்று அவர் குறிப்பிட்டார்.

"புதுடில்லியில் இருந்து கொழும்புக்கு நேரடி விமான சேவையை எயார் இந்தியா விரைவில் தொடங்கும். நாங்கள் இந்த ஆண்டு இறுதியில் இந்தியா – இலங்கை திருவிழாவை கொண்டாட ஏற்பாடு செய்து உள்ளோம். சுற்றுலாவை மேம்படுத்த இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். இலங்கையில் இராமாயணம் தொடர்பான இடங்களிலும், இந்தியாவில் புத்த மதம் தொடர்பான இடங்களிலும் சுற்றுலாவை அபவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மீனவர் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டும். இந்தப் பிரச்சினை தொடர்பாக அரசு உதவியுடன் இருநாட்டு பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தையை தொடர வேண்டும். இருநாட்டு மீனவர் பிரச்சினையில் வாழ்வாதாரம், மனிதாபிமான கோணங்களும் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண சிறிது காலம் ஆகும்.

இருநாடுகளும் இணைந்து நீண்டகாலத் தீர்வைக் காண்பது அவசியம். இந்திய – இலங்கை மீனவர்கள் சங்கத்தினர் தங்கள் பேச்சுவார்த்தையில் விரைவில் சுமுக முடிவை எட்ட வேண்டும். அதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கையை இருநாட்டுஅரசுகளும்முன்னெடுத்துச்செல்லும். "– என்றும் அவர் தெரிவித்தார்.

**13 ஆவது திருத்தச் சட்டம்**

"இலங்கையில் 13 ஆவது சட்ட திருத்தத்தை முழுமையாகவும், விரைவாகவும் செயல்படுத்துவது நல்லிணக்கத்தை ஏற்படுத்தும். இலங்கையில் தமிழர்கள் உள்பட அனைத்து தரப்பினருக்கும் சமமான வாழ்வுரிமையை உருவாக்க இந்தியா உதவும். பெட்ரோலிய பொருள்களின் மையமாக திருகோணமலையை மாற்ற இந்தியா உதவி செய்யும்" – என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

## யாழ்., கிளி.,

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று மதியத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், திங்கட்கிழமை புதிய நிலையங்களில் அரச அதிபர்கள் பொறுப் பேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கையின் சகல மாவட்டங்களிலும் அரச அதி[illegible] இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய முதல் கட்டமாக வடக்கில் மூன்று மாவட்டங்களில் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரும் நிலையில் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற–5)

## காணிகளை

மக்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. அதையடுத்து தமது காணிகள் – வீடுகளை ஆவலுடன் பார்க்கச் சென்ற மக்களுக்கு அதிர்ச்சியே மிஞ்சியிருந்தது. வீடுகள் தரைமட்டத்துடன் அழிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் ஒருவர் குறிப்பிடுகையில்,

"நான் வளலாய் கடற்கரைப் பகுதியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றேன். பாம் பீச் ஹோட்டல் பகுதியில் கடலால் வந்து இறங்கி, இந்தப் பகுதிக்குள் பல தடவை வந்துள்ளேன். இராணுவத்தினரின் அனுமதியுடன்தான் வந்து சென்றிருக்கின்றேன்.

அப்போது இந்தப் பகுதியில் வீடுகள் இருந்தன. அவை எந்தச் சேதமுன்றி, கதவு – நிலை – ஜன்னல்கள் கழற்றப்பட்ட நிலையில் இருந்தன. அந்த வீடுகளைத்தான் இராணுவத்தினர் தமது சமையல் தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர். கடந்த வருடம் ஆவணி மாதம் 29 ஆம் திகதி கடைசியாக நான் வீடுகள் இருப்பதைப் பார்த்தேன். இப்போது வந்து பார்க்கின்றபோது, வீடுகள் இருந்த இடமே தெரியாமல் இடித்தழிக் கப்பட்டுள்ளன"– என்று கூறினார். (ற–5)

## மோடி வருகை

கடந்த 28 ஆண்டுளுக்குப் பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் இலங்கை வந்துள்ளார். பௌத்தம் மற்றும் இந்து மதங் களால் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே ஆதி காலம் தொட்டு நெருங்கிய தொடர்பு உள்ளது. இலங்கை பௌத்தன் என்ற வகையில் நான் இதற்காக பெருமையடைகின்றேன்."– என்று அவர் தெரிவித்தார்.

"இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் வியாபாரம், கடல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான வருகை இலங்கை மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாக நினைக்கின்றேன். அவரை நாம் கௌரவிக்கும் வகையிலேயே நாடா ளுமன்றத்திற்கு அழைத்துள்ளோம்."– என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ற–5)

## முன்னாள்

அந்த அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முடிக்கும்வரையில் அவரை பிணையில் விடலாமே தவிர, விடுதலை செய்யக்கூடாது என சட்டமா அதிபர் தரப்பில் நீதிமன்றத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிமன்று பகீரதியை 2 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க அனுமதியளித்தது. எனினும் அவர் வெளிநாடு செல்ல அனுமதி மறுக் கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கையை அன்றையதினம் பொலிஸார் மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மன்று உத்தரவிட்டுள்ளது. (ற–4)

# கிழக்கு மாகாண சபை; எதிரணியாகும் 10 பேர்

மட்டக்களப்பு, மார்ச் 14

கிழக்கு மாகாண ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த 10 பேர் கிழக்கு மாகாண சபையில் எதிர்க்கட்சியாக செயற்படவுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் வீதி அபிவிருத்தி அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

அம்பாறை ஆரியவன் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் கல்வி அமைச்சருமான விமலவீர திஸாநாயக்க தலைமையில் கிழக்கு மாகாண ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த 10 பேர் கிழக்கு மாகாண சபையில் எதிர்க்கட்சியாகசெயற்படவுள்ளோம்.

நம்பிக்கைத் துரோகமிழைத்த முஸ்லிம் காங்கிரஸும் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் கிழக்கு மாகாண சபை வரலாற்றில் என்றும் மறக்க முடியாதவர்கள்.

**கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன் நாங்கள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியல் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் உதுமாலெப்பை.**

கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன் நாங்கள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியல் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

நாம் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்து கொண்டு நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதுடன் தவறான முறையில் கிழக்கு மாகாண சபை கொண்டு செல்லப்படுமாஇருந்தால் அதனை தடுப்பதற்குமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

தேசிய அரசு, நல்லாட்சி என்று கூறி ஏமாற்று அரசியலை நடத்தி அரசியல் பழிதீர்க்கவும் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையை பயன்படுத்தி வருகின்றது.

அவர்களின் கபடநாடகம் தொடர்பில் சகோதர இனத்தைச் சேர்ந்த தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேசியுள்ளோம். மேலும் மக்களிடமும் விளக்கமளிக்கவுள்ளோம்"–என்றார். (வ–10)



கைதடி லயன்ஸ் கழகத்தினரால் கைதடி சனசமூக நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமில் கண் பரிசோதனையில் பங்குபற்றிய 125 பொதுமக்களில் 80 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (வ–9)

## திருமலையில் பரீட்சார்த்த கோவாச்செய்கை வெற்றி

திருகோணமலை, மார்ச் 14

திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா பிரதேசத்தில் வில்கமுல்ல சந்தி கிராமத்தில் பரீட்சார்த்தமாக பயிர்செய்யப்பட்ட கோவா உற்பத்தி வெற்றியளித்துள்ளது.

வில்கமுல்ல சந்தியைச்சேர்ந்த 68 வயதுடைய வீரசிங்க என்பவருடைய தோட்டத்திலேயே இவ் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமது ஜீவனோபாய தொழிலாக விவசாயம் காணப்படுவதாகவும் சுழற்சி முறையில் பல்வேறு பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் நீர்ப்பாசனம் தடையின்றி மேற் கொள்வது தான் எதிர் நோக்கும் பெரிய சவாலாக அமைந்துள்ளதாகவும் வீரசிங்க கூறினார்.

அறுவடை செய்யப்பட்ட உற்பத்திகள் சந்தை வாய்ப்புக்கு விடுகின்ற போது சில சந்தர்ப்பங்களில் உரிய விலை கிடைப்பதில்லை என்றும் நீர்ப்பாசன வசதியும் சந்தை வாய்ப்பும் தமக்கு உரிய முறையில் கிடைக்குமாயின் மேலும் சிறப்பாக பல உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (வ)



## பனை அபிவிருத்தி சபையால் 183 பேருக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

பனை அபிவிருத்தி சபை காரைநகர் பிரதேசத்திலும் 183 பனம் உற்பத்தியாளர்களுக்கு உபகரணங்கள் மற்றும் பொருள்களை வழங்கி யுள்ளது.

இதில் 123 சீவல்தொழிலாளர்களுக்கு சைக்கிள் மற்றும் சீவலுக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதனைவிட 40 பனங் கிழங்கு உற்பத்தியாளர்களுக்கும் 20 பனங்கழி உற்பத்தியாளர்களுக்கும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சபையின் தலைவர் கே.விஜிந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உபகரணங்களை வழங்கினார்..

சபையின் பணிப்பாளர் பொன்னையா சிவபாதம், பொது முகாமையாளர் லோகநாதன், முகாமையாளர் (விரிவாக்கம்) கே.கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். சபையின் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (வ–17)



உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு வவுனியா நகரில் விழிப் புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இருந்து வவுனியா நகர சபை கலாசார மண்டபம் வரை இடம்பெற்றது. (வ)

## திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 2 பேர் கைது

யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்ற பல்வேறு திருட்டுச்சம்பவங் களுடன் தொடர்புடைய 2 சந்தேகநபர்களை தாம் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த இரு சந்தேகநபர்களும் யாழ். நகரப்பகுதி, சுன்னாகம் மற்றும் மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் சுன்னாகம் மற்றும் மானிப்பாய் பொலிஸாரால் தேடப் பட்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 2 சந்தேகநபர்களையும் நேற்றுமுன்தினம் பொலிஸார் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் கள் இருவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவ குமார் உத்தரவிட்டார். (வ–103)

## கூட்டம் நாளை

வவுனியா, மார்ச் 14

வவுனியா வர்த்தகர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா சுந்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் 2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகனு தெரிவும் இடம் பெறவுள்ளது. (வ–402)

## கிளிநொச்சி வாசிக்கு ரூ.15 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி மார்ச், 14

அனுமதிக்கப்பட்ட அளவை விடடுதலாக சாராயம் வைத்திருந்த கிளிநொச்சி வாசிக்கு நீதிவான் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மேலதிகமாகக் கொண்டு சென்ற சாராயத்தைப் பறிமுதல் செய்து அழிக்குமாறும் உத்தரவிட்டார்.

வீதி பரிசோதனையில் ஈடுபட்ட சாவகச்சேரி பொலிஸார் வீதியில் சென்ற வாகனத்தை மறித்து சோத னையிட்டபோது 40 இற்கு மேற்பட்ட ( காற் போத்தல் ) சாராயப் போத்தல்களை கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்றதைக் கண்டுபிடித்தனர்.

குறித்த நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அந்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் ஒருவர் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்ட அளவை விட மேலதி கமாகக் காணப்படும் சாராயத்தை பறிமுதல் செய்து அழிக்குமாறு நீதிவான் உத்தரவிடப்பட்டது. (வ–9)



## யானைத்தொல்லையை தடுக்க பாதுகாப்பு வேலி


திருகோணமலை, மார்ச் 14

திருகோணமலை மாவட்டத்தின் மொரவெளி பிரதேச செயலாளர் பிரிவில் யானைகளின் அத்துமீறலைத் தடுக்க பல இடங்களில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன்ஓர் அங்கமாக திரியாய் சந்தியிலும் அண்மையில் வேலி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் பொதுமக்களின் இருப்பிடங்கள் மற்றும் பயிர்ச்செய்கை நிலங்களை பாதுகாக்கக்கூடியதாக அமையும். கடந்த காலங்களில் யானை வேலியின்மையால் உயிர், உடைமை என பல அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

மொரவெளி பிரதேச செயலாளர் பிரிவில் திரியாய் சந்தி, கித்துள்வூத்து, பன்மதவாச்சி, வேப்பன்குளம், 10 ஆம் கட்டை ஆகிய கிராமங்களில் யானைகளைத் தடுக்கும் பாதுகாப்பு வேலி இது வரை அமைக்கப் பட்டுள்ளது. குறித்த பிரதே சங்களில் மீள்குடியேறிய மக்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)



# விசேட தேவையுடையவர்களின் சாதாரண வாழ்க்கைக்கு உதவுக

## வவுனியா அரச அதிபரிடம் மனுக் கையளிப்பு

**வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற போரால் வலுவிழப்புடன் கூடியவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.**

வவுனியா, மார்ச் 14

விசேட தேவையுடையவர்கள் தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அவர்களின் சாதாரண வாழ்க்கைக்குத் தடையாக இருப்பது சரியான முறையில் சமூக உள்வாங்கல், பௌதிக சூழல் உட்படுத்தல் ஆகிய இரு உட்படுத்தல்களும் நிகழாமையே– இவ்வாறு வவுனியா அரச அதிபரிடம் சமர்ப்பித்த மனுவில் விசேட தேவையுடையோர் தெரிவித்துள்ளனர்.

தமது பிரச்சினைகள் தொடர்பாக விசேட தேவையுடையோர் வவுனியா அரச அதிபரிடம் மனு ஒன்றை நேற்றுமுன்தினம் சமர்ப்பித்தனர்.

வவுனியா தமிழ் மகா வித்தியாலத்தின் முன்பாக ஒன்று கூடிய அவர்கள் பஸார் வீதி மற்றும் ஏ–9 வீதிவழியாகச் சென்று வவுனியா அரச அதிபரைச் சந்தித்தனர். தமது உரிமைகள் தொடர்பாகத் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடங்கிய மனுவை அரச அதிபரிடம் கையளித்தனர்.

"இலங்கையில் ஏறத்தாழ 7 சதவீதத்தின் ஏதோ ஒரு வகையில்வலு இழப்பைக்கொண்டவர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற போரால் வலுவிழப்புடன் கூடியவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

அவர்களின் சாதாரண வாழ்க்கைக்குத் தடையாக இருப்பது சரியான முறையில் சமூக உள்வாங்கல், பௌதிக சூழல் உட்படுத்தல் ஆகிய இரு உட்படுத்தல்களும் நிகழாமையே."– என்று அந்த மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"பொதுக்கட்டடங்களில் சக்கர நாற்காலி பயன்படுத்துவோர் சென்றுவர பௌதிக அணுகு வசதி இல்லாமையால் அவற்றில் இயங்கும் நிறுவனங்களின் சேவைகள் அவர்களால் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. எந்தவொரு அலுவலகத்திலும் சைகைமொழி தெரிந்தவர்கள் இல்லாததால் செவிப்புலன் அற்றவர்கள் அந்த நிறுவனங்களின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. பிறைல் மொழி மற்றும் சைகை தெரிந்த ஆசிரியர்கள் இன்மையால் பார்வை இழந்த மாணவர்கள் மற்றும் கேட்டல், பேச்சு சிரமமுடைய மாணவர்களுக்கு சாதாரண பாடசாலைகளில் சிரமங்கள் காணப்படுகின்றன. மன வளர்ச்சி குன்றியவர்கள் சார்பில் பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்பாததால் சட்டத்தின் முன்னும் நீதியும் முன்னும் அவர்களுக்கு நீதி கிட்டுவதில்லை

17.10.2006 திகதியிடப்பட்ட இலங்கையின் அரசின் அதிவிசேட வர்த்தமானி 1996ஆம் ஆண்டு சட்டத்தின் அணுகு வசதி ஒழுங்குகளை பிரகடனப்படுத்தியிருப்தோடு 2010ஆம் ஆண்டுக்குள் நிர்மாணிக்கப்பட்ட சகல கட்டடங்களும் அனைத்து விசேட தேவைக்குட்பட்டவர்களும் அணுகு வசதியுடன் கூடியதாக மாற்றியமைக்கப்படல் வேண் டும் அல்லது நிர்மாணம் செய் யப்படல் வேண்டும் எனக் கூறுகின்றது.

இந்த மாவட்டத்தில் செவிப்புலன்வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் என்றவகையில் இந்த தீவிரமான பிரச்சினையை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகின்றோம். மேற்கூறப்பட்ட நிலைமைகளை தங்களின் மேலான கவனத்தில் கொண்டு மாவட்டத்தின் சகல நிர்மான பணிகளிலும் தகவல் சேவைகளிலும் ஏனைய சேவைகளிலும் விசேட தேவைகளுடன் கூடிய நபர்களுக்குரிய அணுகுமுறை வசதியை ஏற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் பணிப்புரை விடுக்குமாறு தங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம். – என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–402)

## சங்கிலி அறுத்தவரை அடையாளம் காட்டினார் பெண்

தென்மராட்சி, மார்ச் 14

வீதியில் தன்னிடம் சங்கிலியை அறுத்தவரை நீதிமன்றில் அடையாளம் காட்டினார் சங்கிலியைப் பறிகொடுத்த பெண்.

கடந்த மாதம் வரணி, சிட்டிவேரம் மிருசுவில் வீதியில் சைக்கிளில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடினர். அதன்போது சங்கிலியின் ஒரு துண்டு பெண்ணின் கைகளில் சிக்கிவிட்டது.

சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியவர்கள் சென்ற ஒழுங்கை இடையேமுடிந்துவிட்டால்திரும்பி வந்த அவர்கள், குறித்த பெண்ணைப் பயமுறுத்தி பெண்ணிடம் இருந்த சங்கிலியின் துண்டையும் பறித்துக் கொண்டு சென்றனர். இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், குறித்த மோட்டார் சைக்கிளின் இலக்கமும் கொடுக்கப்பட்டது.

விசாரணைமேற்கொண்டபொலிஸார் அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த இருவரைக் கைது செய்ததுடன், சங்கிலியையும் மீட்டனர். அவர்கள் பல திருட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த இருவரும்சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் அவர்கள் இருவரையும் கடந்த புதன்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்ததுடன், அடையாள அணிவகுப்புக்கு ஏற்பாடு செய்யுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

கடந்த புதன்கிழமை அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. அதில் குறித்த பெண் சங்கிலியை அறுத்தவரை அடையாளம் காட்டினார். அதையடுத்து குறித்த இருவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் இருவரும் 2013ஆம் ஆண்டு பருத்தித்துறைப் பகுதியில் பெண்ணொருவரிடம் அறுத்த சங்கிலியும், 2014ஆம் ஆண்டு வேறொரு இடத்தில் பெண்ணொருவரிடம் பறித்த சங்கிலியும் உருக்கிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், தாம் 7 சைக்கிள்களைத் திருடி விற்பனை செய்தனர் என்று விசாரணைகளின் போது ஒப்புக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(ற–9)

## இரவில் திருடப்படும் தண்டவாள கம்பிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14


யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அண்மையில் உள்ள ரயில்வே தண்டவாளங் களில் பொருத்தப்பட்டிருக்கும் சிலிப்பர் கட்டைகளும், தண்டவாளங்களை இணைக்கும் இரும்புக் கம்பிகளும் இரவு நேரங்களில் திருடப்படுகின்றன.

அதனால் ரயில்வே தடம் புரள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இருவாரங்களில் இரு தடவைகள் கிட்டத்தட்ட 70 இணைப்புக் கம்பிகள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸாரிடம் இரு தடவைகள் முறையிடப்பட்டுள்ளன என்று ரயில் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இணைப்புக் கம்பிகள் திருடப்பட்டபின்னர் அவசர தேவையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் வேறு இணைப்புக் கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இணைப்புக் கம்பி ஒன்றின் விலை ரூபா நானூறு என்றும் தெரிவிக்கப்பட்டது.

இருதடவைகளும் மாவட்ட செயலகத்துக்கு அண்மையில் உள்ள பகுதியிலேயே கம்பிகள் திருடப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. (ற–ரி)




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை தலைமன்னாருக்கு வரவுள்ள நிலையில் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தலைமன்னார் வரும் நரேந்திர மோடி மு.ப. 11 மணியளவில் மடு – தலைமன்னார் ரயில் சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார். அதையடுத்து தலைமன்னார் துறை, ரயில் நிலையம் என்பவற்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற–56)

## கணினி மயமாகிறது காணி பதிவு விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

காணிப் பதிவுகளை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக, காணிப் பதிவு தொடர்பான முழுமையான விவரங்களும் 'ஸ்கான்' செய்யப்பட்டுள்ளன. விரைவில், கணினி மூலம், காணிப் பதிவுகள் தொடர்பான விவரங்களை பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும். – இவ்வாறு வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் செல்வி ஆனந்தி ஜெயரட்ணம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பிறப்பு – இறப்பு – திருமணப் பதிவு நடவடிக்கைகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. அதனூடாக பொதுமக்கள் தற்போது இலகுவாகவும் – குறைந்த நேரத்திலும் தமது பதிவுகளின் பிரதிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதே போன்று மிகக் குறைந்த நேரத்திலும் – இலகுவாகவும் காணிப் பதிவுகளையும் பெற்றுக் கொள்வதற்காக, அதனை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1940ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு வரையிலான காணிகளின் பதிவுகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. முதற்கட்டமாக பதிவுகள் 'ஸ்கான்' செய்யப்பட்டு தரவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இன்னும் சில மாதங்களில் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். காணியின் பெயர், அல்லது காணி உரிமையாளரின் பெயர் ஏதாவது ஒன்று தெரிந்தால் இலகுவாக காணிப் பதிவை தேடிக் கண்டறிய முடியும். தற்போது சாதாரணமாக காணிப் பதிவு தொடர்பான பழைய விவரங்களைப் பெறுவதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது. ஆனால், கணினி மயப்படுத்தப்பட்ட சேவை நடைமுறைக்கு வந்தவுடன், சில மணி நேரங்களிலேயே பதிவின் பிரதிகளை இலகுவாக எடுக்க முடியும் – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற–5)

# பெண்கள் தினத்தை பெண்கள் கொண்டாடுவதில் பயனில்லை

## கிளிநொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

பெண்கள் எல்லாவற்றிலும் முன்னேறிவிட்டார்கள். பெண்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. தற்பொது ஆண்களுக்குத் தான் பிரச்சினை உள்ளது. ஆண்கள் தான் ஆண்கள் தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று பேசும் நிலை உருவாகியுள்ளது. ஆயினும் பெண்களின் பிரச்சினைகள் இன்னமும் அப்படியே தான் இருக்கின்றன.– இவ்வாறு தெரி வித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ் வரன்.



நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எங்களிடம் இருக்கின்ற ஒரு ஆதங்கம், பெண்களே, பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதால் எந்த பிரயோசனமும் இல்லை. பெண்களுக்குரிய பிரச்சினைகளைப் பெண்களே கூறிக் கொண்டு இருந்தால் அதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதில் ஆண்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த நிகழ்வு எமது மாவட்ட செயலகத்தில் உள்ள ஆண் உத்தியோகத்தர்களைக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது. இது ஒரு சிறப்பான மாற்றம் என்று நான் நம்புகின்றேன். இவ்வாறான சிறிய மாற்றங்கள் எமது சமூகத்திலே ஏற்படுமானால் அது பெரிய மாற்றத்திற்கு வித்திடும் என நான் நம்புகின்றேன்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"எமது சமூகத்தைப் பொறுத்த வரையிலே பெண்களினுடைய கல்வி மட்டம் அதிகரித்துள்ளது. பெண்கள் கல்வில் சிறந்து விளங்குகின்றார்கள். நான் ஒரு அரச அதிபராக இருக்கின்றமையால் எனது மாவட்ட செயலகத்தில் உள்ள உத்தியோகர்கள், பிரதேச செயலகங்களிலே உள்ள உத்தியோகத்தர்களைக் கொண்டு பார்க்கின்றபோது அதிகமானோர் பெண்களாகத் தான் இருக்கின்றார்கள். பெண்கள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகின்றார்கள். முன்னேறிவிட்டார்கள். இப்போது ஆண்களுக்குத் தான் பிரச்சினை. ஆண்கள் தான் ஆண்கள் தினத்தைக் கொண் டாட வேண்டும் என்று பேசும் நிலை இன்று உருவாகியுள்ளது. ஆனால் உண்மையில் அப்படி இல்லை. இன்னும் பெண்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள். அப்படியே தான் இருக்கின்றன."– என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற–21)

### மாமனின் ஏரிஎம் அட்டையில் பணம் எடுத்த மருமகனுக்கு பிணை

தென்மராட்சி, மார்ச் 14

மாமனின் ஏரிஎம் அட்டையைத் திருடி, அவரது வங்கிக் கணக்கில் இருந்த 40 ஆயிரம் ரூபாவை எடுத்த மருமகனுக்கு நன்னடத்தைப் பிணை வழங்கியது சாவகச்சேரி நீதிமன்றம்.

தனது வங்கிக் கணக்கில் இருந்த பணம் குறைந்துள்ளமை குறித்து வங்கிமுகாமையாளரிடம் மாமன் முறையிட்டிருந்தார். அதையடுத்து உடன் நடவடிக்கை எடுத்த வங்கி அதிகாரிகள் இரகசியக் கமராப் பதிவுகளை ஆராய்ந்தனர். அதில் குறித்த இளைஞர் ஏரிஎம் அட்டை மூலம் பணம் எடுத்தமை பதிவாகியிருந்தது. அதையடுத்து அவரைக் கைது செய்த பொலிஸார் விளக்கமறியலில் வைத்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதில் மருமகன் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம், பிரதேச நன்னடத்தை அலுவலரிடம் ஆலோசனை (கவுன்சிலிங்) பெற்றுக் கொள்ளுமாறும் உத்தரவிட்டது. (ற–9)

### தராசில் மோசடி; வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலத்திரனியல் தராசில் மோசடி மேற்கொண்டு நிறை குறைவாக பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் நிறுவைகள் மற்றும் அளவீட்டு நியமங்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது மாட்டிக் கொண்டனர்.

குறித்த மோசடியில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்துள்ள ஆறு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இவர்கள் தங்களது குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து அவர்களுக்கு தலா பதினைந்தாயிரம் அபராதம் விதித்த நீதிவான் பெ.சிவகுமார் குறித்த இலத்திரனியல் தராசுகளை உரிய அதிகாரிகளிடம் மீண்டும் சமர்ப்பித்து முத்திரை இட்டு பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் நடந்து கொள்ளவேண்டுமெனவும் தொடர்ந்தும் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட்டால் சிறைத்தண்டனை வழங்கப்படும் என எச்சரித்தார். (ற–103)

# தொழில் முயற்சியாளருக்கு வாய்ப்புகள் வழங்கப்படும்

## யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை முனைப்புடன் செயற்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ். சிவகெங்காதரன் தெரிவித்தார்.

"கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டில் இந்த சபையால் தொழில் முயற்சியாளர்களுக்கு பல பயிற்சிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக பழங்கள் மற்றும் பழக் கலவை சார்ந்த உற்பத்திகள், உணவு சார் உற்பத்திகள், கண்ணாடியிழை வேலைத்திட்டங்கள், இரசாயனப் பதார்த்தங்கள் சார்ந்த உற்பத்திகள், சலவை உற்பத்திகள் போன்றவற்றில் தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இது மட்டுமன்றி பெண்களுக்கான பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டன. குறிப்பாக, பண்புகளை விருத்தி செய்தல் தொடர்பிலும் வியாபாரத்திட்டமிடல் தொடர்பாகவும் மேற்படி பயிற்சிகள் வழங்கப்பட்டன. வியாபாரத் திட்டமிடல் தொடர்பிலான பயிற்சிகளுக்குள் சந்தைப்படுத்தல், தயாரிப்பு, தொழில்நுட்பம், முகாமைத்துவம், நிதி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன."– என்றும் அவர் தெரிவித்தார்.

"கடந்த காலங்களில் மீன்வளத் துறை திணைக்களத்துடன் இணைந்து கடற்தொழில் சார்ந்த உற்பத்திகளுக்கும் பயிற்சிகள் வழங்கியிருந்தோம். இதில் பயிற்சியாளர்கள் இறால் பப்படம், பகோடா போன்றவற்றில் ஈடுபாடு செலுத்தியிருந்தார்கள். 2014ஆம் ஆண்டு கைத்தொழில் அபிவிருத்தி சபை தனியாகவும் வேறு திணைக்களங்களுடன் இணைந்தும் 600 பேர் வரையிலானோருக்கு தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சி மற்றும் வியாபார முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்கியுள்ளது"– என்றும் அவர் தெரிவித்தார். (ற–10)

### ரூபா. 2 லட்சம் பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம், பருத்தித்துறைக் கடற்கரையில் 2 இலட்சம் பெறுமதியான 4 தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். சக்கோட்டை, திக்கம் ஆகிய பகுதிகளிலேயே இவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், அவற்றுக்கு எவரும் உரிமை கோர வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டதுவலைகள் பருத்தித்துறை நீதி மன்றில் பாரப்படுத்தப்படவுள்ளன. (ற)

### உ.கிழங்குக்கு சந்தை வாய்ப்பில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் 2014 , :015ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொண்ட செய்கையில் அதிகளவு விளைச்சலைப் பெற்றபோதும் அவற்றை உரிய முறையில் சந்தைப்படுத்தமுடியாமல் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக வடமாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் கி.ஸ்ரீ பாலசுந்தரம் தெரிவித்துள்ளார். சதோச உள்ளிட்ட நிறுவனங்கள் உருளைக்கிழங்குகளை கொள்வனவு செய்ய முன்வரவில்லை."– என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்ற பூசகர்

## 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினார்

தென்மராட்சி, மார்ச் 14

மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்ற பூசகர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்றம், 7 ஆயிரத்து 500 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்ததுடன், அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தையும் 3 மாத காலத்துக்கு தடுத்து வைத்தது.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த குறித்த பூசகர் கடந்த 4ஆம் திகதி கொடிகாமம் ஏ–9 வீதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்றபோது பொலிஸாரிடம் சிக்கினார். அவரைக் கடந்த 6 ஆம் திகதி நீதிமன்று வருமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் பூசகர் வரவில்லை. அதனால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில் கடந்த புதன்கிழமை பூசகர் சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் சரணடைந்தார். வழக்கை விசாரித்த நீதிவான் ஆலயப் பூசகர் இவ்விதம் நடந்து கொள்வது மதத்துக்கு இழுக்காகும். எதிர்காலத்தில் இவ்வாறு நடந்துகொள்ளக் கூடாது என்றும் கடுமையாக எச்சரித்தார்.

7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்த நீதிவான், அவரது சாரதிய அனுமதிப்பத்திரத்தை மூன்றுமாதங்களுக்கு நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (ற–9)

# மின்கட்டணம் செலுத்தாதோர் குடாவில் வெகுவாக அதிகரிப்பு

## சிவப்பு எச்சரிக்கைப் பிரசுரம் விரைவில் அனுப்பப்படவுள்ளது

யாழ்ப்பாணம் மார்ச் 14

"குடாநாட்டில் மின்சாரக் கட்டணத்தை முறையாக செலுத்தாதோரின் எண்ணிக்கை என்றும் இல்லாதவாறு இந்த வருடம் அதிகரித்துள்ளது. வருடத்தின் முதல் மாதத்திலேயே 25ஆயிரம் பேர் மின்சாரக்கட்டணத்தை முறையாக செலுத்தவில்லை."– என்று இலங்கை மின்சார சபையின் யாழ் மாவட்ட பிரதம பொறியியலாளர் என்.ஞானகணேசன் தெரிவித்தார்.

"ஐந்நூறு ரூபாவுக்கு மேல் ஒரு மாத காலமாக நிலுவை பேணுபவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை பிரசுரங்கள் அனுப்பப்படுவது வழக்கம். இந்த வகையில் 25ஆயிரம் பேர் குடாநாட்டில் மட்டும் மின்சாரக்கட்டணங்களைச் செலுத்தாதவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சிவப்பு எச்சரிக்கைப் பிரசுரங்கள் மிக விரைவில் அனுப்பப்படவுள்ளன."– என்றும் அவர் தெரிவித்தார்.

"சிவப்பு எச்சரிக்கைப் பிரசுரங்கள் கிடைக்கப்பட்டு மூன்று வேலை நாள்களில் பணம் செலுத்தப்படவில்லையெனின் முன்னறிவித்தலின்றி இணைப்புத் துண்டிக்கப்படும். மின்சாரக் கட்டணம் செலுத்தத் தவறுவது மட்டுமல்ல முறையற்ற ரீதியில் மின்சாரம் பெறுவது தொடர்பாகவும் ஏராளமான முறைப்பாடுகள் நாளுக்கு நாள் கிடைக்கின்றன."– என்றும் அவர் தெரிவித்தார். (ற–ரி)

## மீண்டார் சாய்னா



இங்கிலாந்து பட்மின்ரன் தொடரின் இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்த சாய்னா நெஹ்வால், பட்மின்ரன் உலகத் தரவரிசைப் பட்டி யலில் 2ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சீன வீராங்கனை லி சியூரூய் 79,214 புள்ளிகளுடன் தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளார். சாய்னா நெஹ்வால் 74,381 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார். மற்றொரு சீன வீராங்கனை சியான் வாங் 72,227 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார்.

உலகத் தரவரிசைப் பட்டியலில் சாய்னா நெஹ்வால் ஏற்கனவே சில தடவை இரண்டாம் இடத்தில் இருந்துள்ளார். 2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் மற்றும் அதே ஆண்டு நவம்பர் மாதங்களில் சாய்னா தர வரிசைப் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருந்துள்ளார். 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மீண்டும் அவர் இரண்டாம் இடத்துக்கு முன்னேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## மெய்கண்டான், வயாவிளான், மகாஜன மகுடம் சூடின

வலி.வடக்கு மார்ச் 14

தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான 15,17,19 வயதுப்பிரிவு கரப்பந்தாட்டத் தொடர்களில் 15 வயதுப் பிரிவில் இளவாலை மெய்கண் டான் வித்தியாலயமும், 17 வயதுப்பிரிவில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும். 19 வயதுப்பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் கோட்டச் சம்பியனாகியுள்ளன.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டங்களில் 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மோதிக்கொண்டன. மூன்று சுற்றுக்களைக்கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் இரண்டு சுற்றுக்களையும் முறையே 26:24 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றி உள்ளது.

17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் வயாவிளான் மத் திய மகா வித்தியாலயமம் மோதிக் கொண்டன. இதில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 25:23, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 23:25, 25:12, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றி உள்ளது. (த–86,ரி)

## நெடியகாடு உதைபந்தில் வெற்றியீட்டிய அணிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 14

நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 3ஆம் சுற்றில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு கழகஅணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென். செபஸ்தியன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இரு அணிகளும் ஆட்ட நேரமுடிவில் கோல்கள் எதையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் வெற்றிலைக்கேணி சென்.செபஸ்தியன் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டு கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சுப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (த–23)

### ஒலிம்பிக் நாயகர்கள் ஹெலி விபத்தில் சாவு

ஆர்ஜென்ரீனாவில் இரண்டு ஹெலிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில், லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற பிரான்ஸ் வீராங்கனை உட்பட 10 பேர் சாவடைந்துள்ளனர்.

பிரான்ஸின் நீச்சல் வீராங்கனை கமில்லே மப்பட், லண்டன் ஒலிம்பிக்கில் வெவ்வேறு தூரமுடைய நீச்சலில் தங்கம் உட்பட 3 பதக்கம் வென்றவர். இவரது சக வீரர் அலெக்சிஸ், பீஜிங் ஒலிம்பிக்கில் பளுதூக்கல் பிரிவில் வெண்கலம் வென்றார். இவர்களுடன் சில உள்ளூர் வீரர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்கள் பலர், ஆர்ஜென்ரீனாவின் வில்லா கேஸ்டெல்லி என்ற காட்டுப் பகுதியில் சாகச தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காகப் படப்பிடிப்பில் பங்கேற்றுள்ளனர்.

படப்பிடிப்பு முடிந்து இரு ஹெலிகள் தனித்தனியாக மேல் நோக்கிக் கிளம்பியபோது, திடீரென மோதிக் கொண்டன. இதில், சம்பவ இடத்திலேயே கமில்லே, அலெக்சிஸ் உட்பட 10 பேர் சாவடைந்துள்ளனர். (த–ரி)

## உலகக் கிண்ணத் தகுதிகாண் ஆட்டத்தில் பூட்டானிடம் இலங்கை அதிர்ச்சித் தோல்வி

கொழும்பு, மார்ச் 14

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உலகக் கிண்ண உதை பந்தாட்ட முதலாம் சுற்று தகுதிகாண் (முதலாம் கட்டம்) போட்டியில் இலங்கை அணியை அதிரச் செய்யும் வகையில் 1:0 என்ற கோல் அடிப்படையில் பூட்டான் வெற்றியீட்டியது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி வரலாற்றில் பூட்டானிடம் இலங்கை அணி தோல்வி அடைந்தது இதுவே முதல் தடவையாகும். இந்தத் தோல்வி இலங்கை அணிக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

இந்தப் போட்டியின் முதலாவது பகுதியில் இரண்டு அணிகளும் ஒன்றுக்கொன்று சவால் விடுக்கும் வகையில் விளையாடின. எனினும் இலங்கை வீரர்களைவிட சில சந்தர்ப்பங்களில் விஞ்சும் வகையில் பூட்டான் வீரர்கள் விளையாடினர்.

இடைவேளையின் பின்னர் இலங்கை வீரர்களிடம் முன்னேற்றம் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவர்கள் தடுமாற்றத்தையே வெளிப்படுத்தினர். போட்டியின் 84 ஆவது நிமிடத்தில் கிடைத்த அரிய வாய்ப்பொன்றை முறையாகப் பயன்படுத்திய பூட்டான் வீரர் ஷெரிங் டோர்ஜி கோல் போட்டார். அதுவே பூட்டானின் வெற்றிக்கோலாக அமைந்தது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் போட்டி திம்புவில் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அந்தப் போட்டியில் 2 கோல்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றால் மாத்திரமே இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதிபெறும். எனவே அந்தப் போட்டி இலங்கை அணிக்கு பலத்த சவாலாக அமையவுள்ளது. (த)




நந்தினி
என்ரபிறைஸ்
* சில்வர் பைப்
* GI பைப்
* GI பொக்ஸ் பார்
* சகல விதமான இரும்புப்பட்டங்கள்
* L கேடர்கள் என்பனவற்றை
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
இல.241, 239 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின் வீதி)



கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| CATEGORIES | REQD | SALARY(QR) |
| --- | --- | --- |
| 01 HEAVY VEHICLE DRIVERS (G.C.C. LICENSE) | 10 | 2460 + OT |
| 02 MECHANICAL TECHNICIANS PUMP/ MOTOR | 36 | 2720 + OT |
| 03 HVAC TECHNICIANS | 11 | 2696 + OT |
| 04 ELECTRICAL TECHNICIANS | 08 | 2650 + OT |
| 05 MACHANICAL ENGINEERS | 04 | 10400 + [illegible] |
| 06 HVAC SUPERVISOR | 01 | 3000 + OT |
| 07 PLUMBERS | 05 | 2350 + OT |
| 08 SENIOR ELECTRONIC TECHNICIANS | 08 | 3000 + OT |
| 09 ELECTRONIC TECHNICIAN | 12 | 2650 + OT |
| 10 PLANNING ENGINEER - MEP MAINTENANCE SCHEDULES | 01 | 10400 + OT |
| 11 LOCKSMITH - MANUAL & ELECTRONIC | 01 | 2650 + OT |
| 12 HIGH ACCESS CLEANING SUPERVISOR | 03 | 3300 + OT |
| 13 ESTIMATION ENGINEER MEP MAINTENANCE PROJECTS | 01 | 10400 + OT |
| 14 AIRPORT CLEANERS | 20 | 900 + 300 + OT |
| 15 CARPENTER | 05 | 2350 + OT |

உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். பயணம் மேற்கொள்ளும் அனைவருக்கும் வங்கிக்கடன் வசதி செய்து கொடுக்கப்படும். கைவசம் விசா உள்ளதால் ஒரு மாதத்திற்குள் பயணம். நேர்முகப் பரீட்சை எமது பிரதான நிறுவனத்தில் (20.03.2015) நடைபெறவுள்ளதால் உங்கள் சுயவிவரக்கோவையை (Bio Data) ஈ - மெயில் மூலம் அனுப்பிவையுங்கள். lankavoicejobair@gmail.com

உடன் தொடர்பு கொள்ள: (சி. 19871) (45.7.3)
Lankavoice : 077 792 9475
Capital Recruitment International (PVT) Ltd.,
No.130 , 3/1, 3rd Floor, Grandpass Road, Colombo - 14. LI. No: 2248


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.